Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 13/50

දිනමුරසු වාර්ලෙන්

டிச.17-23,2000

வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 387

முறியும் என்ற டீவுடன் ன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தை

வருத்தத்தில் விக்ரம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

முரசம்

இந்தியாவின் உள் நோக்கம்?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

இந்திய அரசாங்கம் அவசரமாக,
புலிகள் தலைவர் பிரபாகரனை
தம்மிடம் ஒப்படைக்கும்படி
இலங்கை அரசிடம்
திரும்பவும் கோரியுள்ளமை
நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில்
இந்தியாவுக்கு
உள்ளூர இருக்கும்
அதிருப்தியையே
வெளிக்காட்டுவதாக உள்ளது.

இந்தியாவுக்கு இந்த
அதிருப்தி ஏற்பட
பல காரணங்கள் இருக்கலாம்.
தென்கிழக்காசியாவில்
தலைமைப் பாத்திரம் வகிக்கும்
தனக்கிருந்த முக்கியத்துவம்
இலங்கைப் பிரச்சனையில்
நிகழும் இப் பேச்சுவார்த்தைகளில்
இரண்டாம்பட்சமாக்கப்படுவதை
விரும்பாமையாக அது இருக்கலாம்.

அல்லது
இரண்டு தரப்பும்
விரும்பி அழைத்தால்
மத்தியஸ்தம் வகிக்கத்
தயாரென்று கூறியும்,
இரு தரப்பும் தம்மை விடுத்து
ஐரோப்பிய நாடொன்றின்
அனுசரணையை நாடியிருப்பது
அவமானமாகப் படலாம்.

புலிகள் தன்னும்
தமது மாவீரர் உரையில்
இந்தியாவை முக்கியத்துவப்படுத்தி
ஒருவார்த்தையும் சொல்லவில்லை
என்பது மட்டுமல்ல,
யாழ்ப்பாணத் தோல்விக்கு
இலங்கைக்கு உதவிய
நாடுகள் வரிசையில்
இந்தியாவையும் குற்றம்சாட்டியதும்
பிடிக்காமல் இருக்கலாம்.
இலங்கைப் பிரச்சனையின்
பேச்சுவார்த்தையினூடாக
இந்து சமுத்திரபிராந்தியத்தில்
பிறநாடுகளின் தலையீட்டுக்கு
கதவு திறந்துவிடப் பட்டுவிடக்கூடாதென்ற
உள்ளார்ந்த எச்சரிக்கை
உணர்வும் கூடக் காரணமாக இருக்கலாம்.

ஆனாலும்,
இலங்கை போன்ற
பலஹீனமான நாடொன்றின்
எரியும் பிரச்சனைக்குத்
தீர்வுகாணும் முயற்சியை
முக்கியமான ஒரு தருணத்தில்
தடுத்து நிறுத்தித்தான்
தனது செல்வாக்கை
நிலைநிறுத்த வேண்டுமென்ற
முனைப்பு என்பது
சற்று அதிகபட்சமான
அதிகார உணர்வாகவே
புலப்படுகிறது.

இலங்கைப் பிரச்சனையில்
நியாயமான தீர்வுக்குப்
பங்களிப்புச் செய்வதற்கு
இந்தியாவுக்குக் கிடைத்த
சந்தர்ப்பங்கள் யாவற்றையும்
அது பயன்படுத்தத்
தவறி விட்டமையை
ஒரு முறை அது
மறுபரிசீலனை செய்துகொள்ள வேண்டும்.
'அனெக்சர் சி' திட்டத்தை
உருவாக்குவதற்கு
பேச்சுவார்த்தை நடத்த
பார்த்தசாரதியை அனுப்பியது முதல்
திம்புப் பேச்சுவார்த்தை,
பெங்களூர் பேச்சுவார்த்தை
இலங்கை-இந்திய ஒப்பந்தம்
ஆகிய பல பேச்சுவார்த்தைகளிலும்
இந்தியாவின் பாத்திரம்
பிரதானமானதாகவே இருந்தது.

ஆனாலும் அவையெதையும்
சரியாகப் பயன்படுத்தி
ஏற்புடைய தீர்வொன்றை
உருவாக்குவதற்கு
இந்தியா தவறிவிட்டது.

இறுதியாக,
இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில்
விடுதலைப் போராளிகளை
ஆயுதங்களை ஒப்படைக்க
இணங்க வைத்துவிட்டு,
தீர்வை ஏற்படுத்தாமல்
இடைநடுவில் கைவிட்டுவிட்டது.

இந்தியாவை நம்பி
ஆயுதங்களை ஒப்படைத்தார்களே,
அந்த இயக்கங்களெல்லாம்
மாற்று வழியின்றி
அம்போவென விடப்பட்டனர்.
ஆயுதங்களை ஒப்படைக்காது
போராட்டத்தைத் தொடர்ந்த
விடுதலைப் புலிகளையே
இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு
பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய
பிரதான தரப்பினராக
உணரும் நிலை தோன்றியது.

இந்த ஒப்பந்தத்தின் பின்னும்
இலங்கையில் பாரிய
நெருக்கடிகள் தோன்றிய போதெல்லாம்
இந்தியா விலகி நின்று
வேடிக்கை பார்க்கும்
நிலைப்பாட்டை எடுத்ததேயன்றி
அக்கறையுடன் அணுகி
தீர்வு காண
எவ்விதப் பங்களிப்பும்
செய்ய வில்லை.

இப்போது நிலைமை தனது கையை
மீறப் போகிறது என்ற
அச்சம் எழுந்தவுடன்
அநாகரீகமான விதத்தில்
தன்னை முதன்மைப்படுத்துவது
எத்துணை நியாயம்?
இதை விடுத்து இனிமேலாவது
அக்கறையுடன் பங்களிக்க முனைவதே
உசிதம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

முழுமையான கவனம் வேண்டும்

ஆன்மீகம்

பர்ளான ரமழான் நோன்பு

நன்மை, தீமை, நல்லவர், தீயவர், மனிதன், விலங்கு போன்ற அனைத்தையும் குருவாகவே ஏற்றவர் தத்தாத்ரேயர். ஒரு நாள் தன் நடைப் பயணத்தின்போது, காட்டுப்பகுதியல் செல்ல நேர்ந்தது. புதர்கள் அடர்ந்திருந்ததால், பாதை சரிவரத் தெரியவில்லை. அங்கே ஒரு வேடன் பறவை ஒன்றைக்குறி பார்த்து, அம்பு எய்ய ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். அவன் அருகே தத்தாத்ரேயர் சென்றார். "பக்கத்து ஊருக்குச் செல்லும் வழி எது?" என்று கேட்டார். இவரது பேச்சை அவன் பொருட்படுத்தவே இல்லை. இரண்டு, மூன்று முறை கேட்டும், அவன் கவனிக்கவே இல்லை. அவனது கவனமெல்லாம் பறவையைக் குறி வைத்துக் கொல்வதிலேயே இருந்தது. சில வினாடிகள் கழிந்தன. தத்தாத்ரேயர் வேடனை இரு கை கூப்பி வணங்கினார். "நீதான் என் குரு! உன் கவனம் முழுவதும் பறவை மேலேயே இருக்கிறது. அதுபோல என் கவனம் முழுவதும் இறைவன் மீது நிலையாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்திவிட்டாய்!" என்றார் தத்தாத்ரேயர்.



ரீ.குணவர்த்தன-களுவாஞ்சிக்குடி.

மனிதன் நற்குணமும் நல்லொழுக்கமும் அற நிலையும் அடைய அல்லாஹ்வால் விதியாக்கப் பட்டது நோன்பு.

நாம் நோன்பு நோற்பதன் மூலம் ஏழைகளைப் போன்றிருந்து, அவர்களுடைய பசி நிலைகளையும் உணர் கின்றோம். இதன் மூலம் வறியவர்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் எமது உள்ளத்தில் ஏற்படு கிறது.

நிச்சயமாக எவர் ஈமான் கொண்டு, நற்செயல்கள் செய்கின்றனரோ அவர்களுக்கு ரஹ்மானாகிய அல்லாஹ்த ஆவா இவ்வுலகிலேயே நேசத்தை ஏற்படுத்திவிடுவான். (அல்குர் ஆன்)

நேசத்தையும் நெருக்கத்தையும் படைத்தோரிடம் ஏற்படுத்தும் பர்ளான ரமழான் நோன்பை நோற்போம்.

எம்.சி.கலீல்-கல்முனை 05.

புது வாழ்வு

அறிவாற்றல், மதிப்பு, மரியாதை, செல்வச் செழிப்பு, புகழ், அனைத் தோடும் வாழ்ந்தால் தான் பிறரிடம் என்னுடைய பேச்சு எடுபடும், என்று; நினைப்போரைக் காணுகின்றோம்.

சாதாரண மனிதனாக வாழ்ந்த மக்களை நல்வழிப் படுத்த முடியும் என்பதை, ஆண்டவர் இயேசு வரிவசூலிப்பவனும், செல்வந்தனும், மக்களால் வெறுக்கப்பட்டவனுமாகிய, சகேயுவை; பார்த்து, அழைத்து, அவனோடு தங்கி, உறவாடுவதன் மூலமாக; அவன் தன்னுடைய தீய பாவ வழிகளை விட்டு மனந்திரும்பி புதிய வாழ்க்கைக்குள் வருவதின் மூலமாக அறிந்து கொள்கின்றோம்.

இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து அவனைக் கண்டு; "சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட் டிலே தங்க வேண்டும்!" என்றார். (லூக் 19:5)

சகோ.எஸ்.யேசுநாதன்-துறைநீலாவணை.

கவிதைப் போட்டி இல.387

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 23.12.2000

கவிதைப் போட்டி இல.387
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

தூது

கூட்டில் கூடி வாழும்,
கோடி வெண்புறாக்களே!
நாட்டில் மக்கள் கூடி வாழ
சமாதானத் தூது செல்ல மாட்டீரோ?

திருமதி.ம.ஞானராஜா-
வாழைச்சேனை.

கவிதைப் போட்டி இல.387

பரிசுக்குரிய கவிதை

சமாதானப் புறா

தமிழன் படும் துயரத்தை
தடுக்க முடியாத-நமக்கு
'சமாதானப் புறா' என
பெயர் வைத்தவர் யாரோ...?

எஸ்.கே.ரமேஷ்-பெரியபோரதீவு.

இனி(துளி)யும் எமக்கில்லை!

ஐயா...!
பறந்து பறந்து ஓய்ந்துவிட்டோம்!
சமாதானம்,
மலரும் என்ற நம்பிக்கை
இனி(துளி)யும் எமக்கில்லை!

சதானா தாஹா-புத்தளம்.

வி(ச)தி

எங்கள்
இறக்கைகளை பிடுங்கி எறிந்துவிட்டு,
இப்போது...
வெளியே விட்டு
வேடிக்கையா பார்க்கிறீர்கள்?!
அதை விட
அடைத்தே வைத்திருங்கள்!!!

எம்.எம்.பௌசி-கிண்ணியா-03.

சமாதான உலகம்

இருளடைந்த உலக(உள்ள)த்தை நீக்கி
ஒளியெனும் தீபத்தை ஏற்றி வை,
அழிகின்றந்த வாழ்க்கையைப் போக்கி,
சமாதான உலகத்தை தோற்றுவை!

எம்.டீ.தில்ஷாத் பேகம்-ஹெட்டிபொல.

வெறுத்துப்போய்

சமாதானத்தை
பறக்கவிடுகிறார்களே தவிர,
நிலைக்கவிடுகிறார்களில்லை!
எத்தனை முறை பறப்பதென்றுதான்
இருந்துவிட்டோம் சோர்ந்துப்போய்!

ராம் விக்டர்-கொழும்பு-12.

இனியும் வராது

சமாதானம் வருமென்று
சமத்துவம் பேசியோர்
சங்கமம் ஆகினர்!
சமாதான புறாக்கள் கூட
சலித்துப் போய்
சரிந்து நிற்பதைப் பார்

அலாவுடீன் பாபு-
திருமலை.

சாதனை

எழுதுங்கள் கின்னஸில்
இனி...
இலங்கைக்கு
என்றுமே சமாதானம்
எட்டியும் பார்க்காது
என்று...

அ.திவ்வியதேவ-
களுவாஞ்சிக்குடி.

கவனம்

இனி எங்களை சமாதானத்தின்
சின்னமாகவோ தூதாகவோ
எடுத்துக் கொள்ளாதீர்கள்!
ஏன் என்றால் எங்களையும்
கொடும்பாவியாக எரித்து
விடுவார்கள்!

மு.மு.மு.இஸ்மித்-
கிண்ணியா-03.

சமாதானம்

என்று சமாதானம்
வரும் என்றா
எண்ணி,
வழி மீது
விழி வைத்து
வாசல் தனில்
காத்துள்ளீர்கள்?

ஆர்.தமிழரசி-
வெள்ளவத்தை.

இதுதான் மிலேனியம்

உள்ளே செல்ல எமக்கு
பயமே விளைகிறது!
ஏனெனில்,
உறைவிடத்துடன் சேர்த்து
கல்லறை கட்டும்
புதிய மிலேனியம் இது!

பி.பிரியதர்சினி-
யாழ்ப்பாணம்.

நல்ல பதில் சொல்லும் வரை

கூட்டை விட்டு வெளியேறி
வாசல் வந்து நின்றாலும்,
நாட்டை விட்டு வெளியேறேன்
நல்ல பதில் சொல்லாமல்!

த.தமயந்தி-சாம்பல்தீவு.

வாசக(ர்)சாலை

விரோதமும் குரோதமும்

ஆசிரியருக்கு,

தினமுரசில் வெளிவரும் அம்சங்கள் யாவும் தெவிட்டாத தன்மை யையும், வித்தியாசமான சுவையையும் கொடுப்பது யாவரும் அறிந்ததே. என்றாலும் 385வது முரசில் (வாசகர்சாலை பகுதியில்) ஹல்கரனோயா-எம்பாலசுந்தரம் என்பவர் முரசு-380ல் 'விரோதப் போக்கு எம்மிடமில்லை' (3ம் பக்கம்) என்ற தலைப்பில் இடம் பெற்ற கடிதத்தை முற்று முழுதாக தவறு எனச் சுட்டிக் காட்டினார். பாலசுந்தரம் தனது கடிதத்தில் பிரத் தியேகமான சில உண்மைகளைக் கூறியிருப்பது பாராட்டத்தக்க விடய மாகும். என்றாலும் இவரது கருத்துக்கள் முற்று முழுதாக நம்பும்படியாக அமையவில்லை.

பாலசுந்தரம் 'நிலவுகிறது' என்ற சொல்லை மறுதலித்து 'பரவுகிறது' என முரசு-377 இல் வெளிவந்ததாக குறை கூறி இருந்தார். பாலசுந்தரம் இவ்விரு சொற்களுக்கும் வித்தியாசம் கண்டு பிடித்த நுண்ணறிவாளர் என்ற வகையில் இவரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனால் 377ஆவது முரசில் வெளிவந்த 'மட்டக்களப்பு முஸ்லிம் பகுதிகளில் விரோதப்போக்கு பரவுகிறது' என்ற தலைப்பை மட்டும் தான் வாசிக்க பாலசுந்தரத்துக்கு நேரம் கிடைத்தது போல் உள்ளது. ஏனெனில் அதில் 'ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லிம்கள் குரோதமுடையவர்கள்' என்ற கருத்தும் வெளிவந்தது. விரோதப் போக்கு உடையவர்களிடமே பொறாமை, குரோதம், சதித்திட்டம் போன்ற பல்வேறு வகையான தூர் நடத்தைகள் காணப்படும். எனவே 'பரவுகிறது' என்ற பதம் 'நிலவுகிறது' என்ற கருத்திலும் பாவிச்சப்பட்டுள்ளது.

ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேசத்தவர்களுக்கும், செங்கலடி, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடிப் பிரதேசத்தவர்களுக்குமிடையில் தீவிரக் கொள்கை இருந்தது உண்மை தான். ஆனால் மட்டக்களப்பு முஸ்லிம்கள் அனைவரும் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனரா? இதனால் அனைத்து மட்டக்களப்பு முஸ்லிம்களையும் குறை கூற முடியுமா? மட்டக் களப்பு முஸ்லிம்கள் அனைவரும் குரோதமுடையவர்களா? என்ற கேள்விகளுக்கு விடை கூற முடியுமாக இருந்தால் கூறுங்கள் பாலசுந்தரம்.

நான் அக்கடிதத்தில் 'தினமுரசு இனத்தை துஷ்பிரயோகம் செய்கிறது' என்பதை வெளிப்படுத்தவும் இல்லை. அவ்வாறான கருத்து சத்தியமாக என்னிடம் நிகழவும் இடங்கொடுக்கவும் மாட்டேன்.

தினமுரசே எனது உயிர். அது சுமந்து வரும் அம்சங்களே எனது உறுப்புக்கள். தனது உயிரையும், உடலையும் மட்டும் நேசிப்பவனே சுயநலவாதி. அதனையும் கடந்து சமூகத்தையும் நேசிப்பவனே உண்மையான சேவையாளி என்பதை பாலசுந்தரம் மறந்து விட வேண் டாம். ஊடகத்தை ஊடகமாகவே மதித்து பஸ்ஸின் ஊடாக தினமுரசு வியாழக்கிழமையில் எத்தனை மணிக்கு வரும் என்பதை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கும் இள இரத்த வாசகன் நான்.

ஏ.எம்.நளீம்-வாழைச்சேனை-05.

இனிய முரசே!

வாசகர்களின் கருத்துக்களுக்கு மதிப்பு அளித்து பாப்பா முரசில் மாணவர் களுடைய ஆக்கங்களை சேர்த்துக் கொண்ட மைக்கு முதலில் நன்றி. புதிய திகில் கதை திகில் கொள்ளச் செய்கிறது. மீண்டுமொரு இடிஅமீன், பூலான்தேவி, எதிர்பார்த்தி ருந்த எங்களுக்கு ஒரு சின்ன ஏமாற்றம். இருப்பினும் திகில் தொடர் கூட சூப்பர். இது போன்று தொடர்ந்தும் முரசின் சேவை தொடர வேண்டும்.

ஏ.எல்.முஹம்மட் ரஸ்மி-
அட்டாளைச்சேனை-02.

எனது இனிய முரசே..

ஞாயிறு தோறும் என்னை மகிழ்விப் பதற்கு என்றும் என் நன்றிகள். நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களுமே அருமையி லும் அருமை. அதிலும் 'தேன் கிண்ணம்', 'லேடீஸ் ஸ்பெஷல்', 'நில்-கவனி-முன்னேறு', 'சினிமா பகுதி' போன்றவை என்னை மிகவும் கவர்ந்தவை. இதுபோல் எல்லா வாசகர் நெஞ்சங்களும் மகிழ வேண்டும் என்று இறைவனை வேண்டுகிறேன்.

வளர்க முரசே...

தி.ஈஸ்வரி-பிபிலை.

அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

என் அன்பின் முரசே! நண்பா! கடல் கடந்து சென்று கூட சேவையாற்று வதில் முன்னிடத் தில் நிற் கும் உன்னை நாங்கள் எவ்வளவு விலை கொடுத்தென்றா லும், தத்தெடுப்பதற்கு எப்போதும் முந்திக் கொள்வோம் நண்பா!

எனது நண்பனுடைய சேவை உலகம் பூராவும் படர்ந்து பல சாதனைகளையும் பெறுவான் எனறு கூறிக் கொண்டு விடை பெறும்,

என்.எம்.நிஸாம்-காத்தான்குடி-02.

அன்பின் முரசே!

உன் 383ல் 'அதிரடி அய்யாத்துரை யர்' அதிரடி தகவல் ஒன்றை வெளியிட்டி ருந்தார். கொழும்பில் உள்ள பிரபல அம்மன் கோயிலில் நடந்த கும்பாபிஷேகத் தில் விக்கிரகங்களுக்கு எண்ணெய் வைப் பதற்கு, தர்மகர்த்தாக்களுக்கு வேண்டி யோர், பின் கதவால் அழைத்துச் செல்லப் பட்டதாக அறிவித்திருந்தார்.

கொழும்பில் மட்டும் அல்ல; எங்கள் பகுதியில் கூட சில ஆலயங்கள் பொதுமக் களுக்காக இயங்கவில்லை. தர்மகர்த்தாக் களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப ஆலய கடமைகள் நடைபெறுகின்றன.

அதிகாலையில் ஒலிபரப்பப்படும் சுப்ரபாதம் கூட, ஒலி அமைப்பாளருக்கும், ஆலய தலைமை தர்மகர்த்தாவுக்கும் பிரச் சனை என்றால், அவர்கள் பிரச்சனை தீரும்வரை மாதக் கணக்காக சுப்ர பாதம் ஒலிபரப்பப்படமாட்டாது என்றால் பாருங்களேன்?

யோகன்-அக்கரைப்பற்று-07.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

அரசு-புலிகள் பேச்சுவார்த்தை

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்கள்

புதிய ஆண்டில் அதிகரிக்கும்: இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

இலங்கையின் அரசதரப்பும், தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைகளில் ஆக்கபூர்வமான முறையில் பங்கெடுப்பதை புதிய ஆண்டின் ஆரம்பத்தில் சர்வதேச சமூகம் வலியுறுத்த ஆரம்பிக்கும் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கை அரசினதும், தமிழீழ விடுதலைப் புலிகளினதும் அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன், இரு சாராரும் யுத்தத்தை நிறுத்தி சமரச முயற்சிகளில் இறங்க வேண்டுமென்ற நிலைப்பாடே வலுவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கு இணங்கி நோர்வேயின் மத்தியஸ்த நடவடிக்கைகளை ஏற்றுக் கொண்டுள்ள போதிலும், புலிகள் இயக்கத்தை சர்வதேச ரீதியாகத் தடைசெய்யுமாறும், வெளிநாடுகளில் அவ்வியக்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தடுக்குமாறும் இலங்கை அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

பிரிட்டனிடமே இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், எல்.ரி.ரி.ஈ. அமைப்பு இயங்கிவருவதாகத் தெரிவிக்கப்படும் 40 நாடுகளில் மேற்படி இயக்கத்தைத் தடை செய்யுமாறும், இலங்கை அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

அடுத்த ஆண்டில் பிரிட்டனில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமொன்று கொண்டு வரப்படவுள்ளது. அச்சட்டமூலம் ஊடாக புலிகளைத் தடைசெய்யுமாறு இலங்கை கேட்டுள்ளது.

இருந்தபோதிலும் சர்வதேச சமூகம் புலிகளுக்கும், இலங்கை அரசுக்குமிடையிலான பேச்சுக்கள் துரிதப்படுத்தப்பட வேண்டுமென்பதிலேயே அதிக அக்கறை காட்டிவருகின்றது.

புலிகளைத் தடைசெய்வதால், அல்லது அவர்களுக்கு சர்வதேசரீதியாக நெருக்கடிகளைக் கொடுப்பதால் பேச்சுவார்த்தைகள் குறித்து சாதகமான சூழ்நிலைகளை உருவாக்க முடியாதென இராஜதந்திர வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்நிலையில் 2001ம் ஆண்டின் ஆரம்பத்தில் சர்வதேச சமூகத்தின் கவனம் இலங்கைப் பிரச்சனையிலும் வெகுவாகத் திரும்புவதோடு, புலிகள் அரசு பேச்சுக்களுக்கான அழுத்தங்களைக் கொடுப்பதாகவும், சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகள் அமைந்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜரோப்பிய ஒன்றியத்தின் பங்கு!

டிசம்பர் 18, 19ம் திகதிகளில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் பாரிஸ் நகரில் நடைபெறவிருக்கிறது. ஒவ்வோர் ஆண்டும் இக்கூட்டம் நடைபெறும் போது உதவி

(எமது சிறப்பு நிருபர்)

வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள், இலங்கையின் பிரச்சனைகளைப் பற்றி அலசி ஆராய்ந்து வருகின்றனர்.

நாட்டில் நிலவும் இனமோதல்களைத் தவிர்த்து மக்கள் அமைதியாக வாழ்வதற்கேற்ற சூழ்நிலைகளைதுரிதகதியில் ஏற்படுத்த வேண்டும் என்று வற்புறுத்திய பின்னர் தான் உதவிகளை வழங்க முன்வருகின்றனர்.

உதவி வழங்கும் நாடுகளின் ஆலோசனைகளுக்குச் சாதகமாக தலையசைத்து விட்டு வரும் இலங்கை அரசாங்கம் 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற மனப்பான்மையில் போருக்கே ஏராளமான பணத்தை அள்ளிக் கொட்டி வருவது தெரிந்ததே.

இம்முறை நடைபெறும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் அந்நாடுகளின் வற்புறுத்தல் இலங்கைக்கு பாரிய சவாலாகவே இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக்கு உதவி வழங்கும் முக்கியமான அமைப்பாக விளங்குவது ஜரோப்பிய ஒன்றியமாகும். இந்த அமைப்பின் பிரதிநிதிகள் பலர் அண்மையில் இங்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் கண்காணிப்பாளர்களாகக் கலந்து கொண்டனர். இவர்கள் வெறுமனே தேர்தலைமட்டும் கண்காணிக்கவில்லை. நாட்டின் சகல நடைமுறைகளையும் அலசி ஆராய்ந்துள்ளனர். இவர்கள் தயாரித்த அறிக்கையும் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது என்றும் இதனடிப்படையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெறுமென்று, விசயமறிந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதன் பயனாக இலங்கையின் நோர்வே நாட்டின் அனுசரணையுடன் ஆரம்பமாகி இருக்கும் அமைதிப் பேச்சுக்களை ஆக்கபூர்வமாக நடைமுறைப்படுத்த வேண்டிய வற்புறுத்தலை உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு வழங்குமென்று எதிர்பார்க்கலாம்.

கொழும்பு வரும் யாழ் சாரணீயத் தலைவிகள்

யாழ்ப்பாணத்திலிருந்து 36 சாரணீய இயக்கத் தலைவிகள் இம்மாத முடிவில் கொழும்புக்கு வரவிருக்கின்றனர். இவர்களுக்கு சாரணீயத்துறையில் கொழும்பிலுள்ள சாரணீயத் தலைமையகத்தில் விசேட பயிற்சிகள் அளிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

கொழும்பு வரும் இந்தச் சாரணீய குழுப் பெண்களில் பலர் இதுவரை கொழும்பு நகருக்கே வராதவர்கள் என்று தெரிய வருகிறது. நாட்டிலுள்ள சூழ்நிலைகாரணமாக பலவருடங்களாக சாரணீய இயக்கத்தைச் சேர்ந்த பெண்கள் வடக்கிலிருந்து கொழும்பு நகருக்கோ, ஏனைய இடங்களுக்கு செல்ல முடியாதிருந்தது.

இங்கு வரவிருக்கும் சாரணீயத் தலைவிகளுக்கு தென்னிலங்கையிலுள்ள பல சாரணீய இயக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தவும் பரஸ்பரம் கருத்துப் பரிமாற்றங்களை ஏற்படுத்தவும் தலைமைச் சங்கம் விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. இவர்கள் தென்னிலங்கையில் பல பாகங்களுக்கும் அழைத்துச் செல்லப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

சமாதானப் பதாதை தீக்கிரையாக்கப்பட்டது!

இந்த நாட்டின் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தும் போரை முடிவுக்குக் கொண்டு வந்து அமைதியை நிலைநாட்ட வேண்டுமென்று கோரி மாபெரும் ஊர்வலமொன்று கடந்த திங்கட்கிழமையன்று கொழும்பு மாநகரில் இடம் பெற்றது. மக்கள் சமாதான முன்னணி ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இன-மத-மொழி-பேதம் பாராட்டாமல் ஆண்களும் பெண்களுமாக பல்லாயிரக்கணக்கில் மக்கள் பங்கு பற்றினர்.

இதற்கான ஏற்பாட்டில் இருபதுக்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்களும் பங்கெடுத்துக் கொண்டன.

ஒரு கிலோமீற்றர் நீளமான பதாதையொன்று விகாரமாதேவி பூங்காவை வளைத்துக் கட்டப்பட்டிருந்தது. இந்த பதாதையில் சமாதானத்தை வலியுறுத்தும் சுலோகங்கள் மும்மொழிகளிலும் எழுதப்பட்டிருந்தன. ஊர்வலத்தில் கலந்து கொண்ட பலர் தங்களுடைய கருத்துக்களை காகிதங்களில் எழுதிக் கொண்டு வந்து இந்தப் பதாதையில் பொருத்தி வைத்தனர்.

யுத்தத்தில் காணாமல் போன போர் வீரர்களின் உறவினர்களும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

விகாரமாதேவி பூங்காவில் வளைத்து கட்டப்பட்டிருந்த பதாதையை திங்கள் மாலையில் விஷமிகள் சிலர் தீயிட்டுக் கொழுத்தினர்.

இந்த நாட்டில் யுத்தம் தொடர வேண்டும். அதனால் ஏற்படும் கொடுமைகள் மென்மேலும் அதிகரிக்க வேண்டுமென்று கொடிய எண்ணம் கொண்ட பேரினவாதிகள் சிலரே இந்தப் பதாதைக்கு தீமூட்டியுள்ளனர் என்று கருதப்படுகிறது.

வெள்ளவத்தையில் குண்டுகள் கண்டுபிடிப்பு!

வெள்ளவத்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை வைத்து கொழும்பு டபிள்யு.ஏ.சில்வா மாவத்தையிலுள்ள தரிசுக் காணியில் 4 கைக்குண்டுகள் மீட்டு செயலிழக்கச் செய்யப்பட்டன.

கண்டெடுக்கப்பட்டவற்றில் 2 கைக்குண்டுகள் காகிதப் பெட்டிக்குள் மறைத்துவைக்கப் பட்டிருந்தன. அவை படையினர் பயன்படுத்தும் குண்டுகளைப் போன்றதாகும்.

ஏனைய 2 கைக்குண்டுகளும் நவீன ரகத்தைச் சேர்ந்தவை. இவை படையினர் உபயோகிக்கும் குண்டுகளைவிட வித்தியாசப்பட்டவை என்று வெள்ளவத்தை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு.நிஹால் மெண்டிஸ் கூறினார்.

புலிகள்தான் நாசவேலைகளைத் திட்டமிடுவதற்காக இவற்றை மறைத்து வைத்திருக்கக்கூடும். விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் சொன்னார்.

புனர்வாழ்வு முகாம் இடம் மாறும்?

பண்டாரவளை-பிந்துவெவ இளைஞர் புனர்வாழ்வு நிலையப் படுகொலைகளின் பின்னர் படுகொலையிலிருந்து தப்பிய இளைஞர்களுக்குத் தொடர்ந்து புனர்வாழ்வளிப்பதில் பல்வேறு சிக்கல்கள் எதிர் நோக்கப்படுகின்றன.

தற்சமயம் அந்த இளைஞர்கள் எங்கு வைத்துப் பராமரிக்கப்படுகிறார்கள் என்பது இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தொடர்ந்து இளைஞர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கு பண்டாரவளையில் அமைந்திருந்த புனர்வாழ்வு முகாமை ஒத்ததொரு நிலையத்தை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அறிய வருகிறது.

கொழும்புக்கு வருவோரின் வீடுகள் சோதனை!

(நமது நிருபர்)

பல்வேறு அலுவல்களின் நிமித்தம் கொழும்புக்கு வரும் தமிழ்-முஸ்லிம் மக்களின் விவரங்கள் பொலிஸ் நிலையத்தில் பெறப்படுகின்றன, என்ற தகவல் முரசு வாசகர்கள் முன்னர் அறிந்ததே!

அவர்கள் மூலமாகப் பெற்றுக் கொண்ட விவரங்களை கொழும்பிலுள்ள பொலிஸ் நிலையங்கள் வடக்கு-கிழக்கு மற்றும் மலையகத்திலுள்ள அந்தப் பிரதேசப் பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்கின்றன.

அந்த விவரங்களின் நிமித்தம் குறிப்பிட்ட வீடுகளுக்குச் செல்லும் பொலிஸார் அங்கு சம்பந்தப்பட்டவர் கொழும்பிலிருந்து கொடுத்த விவரங்கள் சரியானவையா எனத் துருவித் துருவி ஆராய்கின்றனர்.

கொழும்புக்குச் சென்றவர்களை விசாரித்துக் கொண்டு திடீரென படையொடுத்து பொலிஸார் வீடுகளுக்குச் செல்வதால் வீட்டிலுள்ளவர்கள், கொழும்புக்குச் சென்ற தனது உறவினர்களுக்கு என்ன ஆகி விட்டதோ என்று கலக்கமடைந்து விடுகின்றனர்.

கொழும்புக்குச் சென்றவர்கள் தத்தமது வீடுகளுக்குத் திரும்பும் வரை எவருக்கும் நிம்மதியில்லாத ஒரு நெருக்கடிநிலை தற்போது உருவாகியிருக்கிறது.

யாழ் மீனவர்கள் பாதிப்பு!

(யாழ் நிருபர்)

கடந்த 8ம் திகதி வெள்ளிக்கிழமையன்று கடலுக்குச் சென்ற யாழ்ப்பாண மீனவர்களில் 11 பேர் காணாமல் போயுள்ளனர். விடுதலைப் புலிகளே இவர்களைக் கடத்தியிருக்கலாம் என்று பரவலாக நம்பப்படுகிறது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பாசையூர், கொழும்புத்துறை போன்ற இடங்களிலிருந்து கடற்றொழிலுக்கு செல்வோரை படையினர் அனுமதிக்க மறுத்துவருகின்றனர். இதனால் தொழிலாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் கஷ்டங்களை ஏற்க வேண்டிய நிலையிலுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையன்று 250க்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள ஈபிடிபி அலுவலகம் சென்று முறையிட்டனர். கட்சியின் மாவட்ட பிரதிப் பணிப்பாளர், யாழ் இராணுவ கட்டளைத் தளபதியுடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மீனவர்களுக்கு அடிக்கடி இத் தகைய தொழில் பாதிப்புக்கள் ஏற்படுவது தொடர்கதையாகவே இருந்துவருகிறது.

மரண தண்டனை அழுலுக்கு அமைச்சர் ஆதரவில்லை!

மரணதண்டனை நாட்டில் மீண்டும் அமுல்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது தெரிந்ததே. இந்த விவகாரம் பற்றி பல்வேறு அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மனித உரிமை அமைப்பினர் தமது எதிர்ப்பைத்தெரிவித்து வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க, நீதி அமைச்சர் பட்டி வீரக்கோனும் தனிப்பட்ட முறையில் தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி கொழும்பில் நடந்த பவபமொன்றிலே அமைச்சர் மரண தண்டனை வழங்கும் தீர்மானம் குறித்துத் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

அரசு மரண தண்டனையை மீண்டும் இலங்கையில் அமுல்படுத்துவதற்குத் தீர்மானம் எடுத்துள்ளது. எனினும் தாம் தனிப்பட்ட முறையில், மரண தண்டனையை நிறைவேற்ற அரசு எடுத்துள்ள தீர்மானத்தை எதிர்ப்பதாகவும், ஆனால் தாம் இந்த விவகாரத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் அரச கொள்கையை அமுல்படுத்த வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் மரண தண்டனைத் தீர்மானத்திற்குத் எம்மால் ஆதரவு வழங்க முடியாது. நாகரீகம் படைத்த மனித சமூகமொன்றிலிருந்து இந்த தண்டனை நீக்கப்படவேண்டும்' என்றார்.

'மரண தண்டனை காரணமாக உலகின் எந்தவொரு நாட்டிலும் குற்றச் செயல்கள் குறையவில்லை' என்று மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர் டாக்டர் எஸ். செல்வகுமாரன் தெரிவித்தார். 'மரண தண்டனையை அமுல்படுத்த அரசு எடுத்திருக்கும் தீர்மானம் வருந்தத்தக்கது' என்று பேராசிரியர் ரவீந்திர பெர்னாண்டோ கூறினார்.

முறையிடச் சென்றவர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

மட்டக்களப்பு-விமானநிலையத்துக்கு அருகிலுள்ள திருப்பெருந்துறை கிராமத்தில் உள்ள வீடொன்றில் கொள்ளைச் சம்பவமும் கொலைச் சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிகளுடன் வீட்டிற்குள் பிரவேசித்த மூவர் வீட்டிலிருந்தோரை ஓர் அறைக்குள் பூட்டிவிட்டு தொலைக்காட்சி, சைக்கிள் என்பனவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றனர்.

இது பற்றி வீட்டார் அருகிலுள்ள விமானப் படை முகாமுக்குச் சென்று அறிவித்தன விட்டுத் திரும்பும் வழியில் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் எஸ்.இலங்கேஸ்வரன் (28) என்ற குடும்பஸ்தர் கொல்லப்பட்டுள்ளார். மேலும் மூவர் காயமடைந்துள்ளனர். கொள்ளையர்களே தம்மைப் பற்றி விமானப் படையினரிடம் முறையிட்ட ஆத்திர மேலீட்டால் துப்பாக்கிச் சூடு நடத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

காயமடைந்தவர்களை விமானப்படையினர் தமது அம்பியூலன்ஸ் வண்டி மூலம் மட்டக்களப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு சேர்ப்பித்தனர். இச்சம்பவம் கடந்த 10ம் திகதி இரவு எட்டு மணியளவில் இடம் பெற்றது.

பஸ் பயணிகளுக்கு பொலிசாரின் கெடுபிடி

(யாழ் நிருபர்)

கடந்த சில தினங்களாக ஊர்காவற்றுறையில் இருந்து யாழ் நோக்கிப் புறப்படும் பஸ் (777) பொலிசாரின் சோதனைச்சாவடிகளில் மணித்தியாலக்கணக்கில் நிறுத்தப்பட்டு சோதனையிடுவதுடன் ஒவ்வொருவருடைய பெயர், முகவரி, அ.அ.இலக்கம் என்பன பதியப்பட்டே அனுப்பப்படுகின்றனர். ஒருவரின் விவரம் எழுதும்போது சுமார் ஒரு நிமிடம் எடுக்கிறது. ஒரு பஸ் வண்டியில் பிரயாணம் செய்யும்போது இப்படியான தூர்ப்பாக்கிய நிலைக்கு மக்கள் தள்ளப்படுவது மிகவும் வேதனைக்குரியதொன்றாகும்.

ஒரு பஸ் வண்டியில் எத்தனை பிரயாணிகள் பிரயாணம் செய்கிறார்கள் என்று பார்க்கும் போது, சுமார் ஒரு மணிநேரம் சோதனைச்சாவடியில் நிறுத்தப்படுகின்றது.

இப்படியான நிலமை ஏற்பட்டு ஒரு மணித்தியாலம் நிறுத்தப்படும்போது பொதுமக்கள் விசனமடைவதுடன் குறிப்பிட்ட நேரங்களில் சென்று தங்கள் வேலைகளை முடிக்காமல் திரும்பும் துர்ப்பாக்கிய நிலமையும் உருவாகியுள்ளது. இப்படியிருக்கும் போது யாழ்ப்பாணத்தில் இருந்து மீண்டும் ஊர்காவற்றுறை புறப்படும் பஸ் அதே சோதனைச்சாவடியில் நிறுத்தப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்படுவதுடன் பெயர், முகவரி, அ.அ.இலக்கம் என்பனவும் மீண்டும் பதியப்படுகிறது. இந்த நிலமை மாற வேண்டும் என்பதே மக்கள் அனைவரினதும் எண்ணங்களாகும். இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு இப்படியான கெடுபிடிகளை மாற்ற நடவடிக்கை எடுப்பார்களா?

பயணிகள் படகின் இயந்திரம் புலிகளால் அபகரிப்பு

(நமது நிருபர்)

மட்டக்களப்பு-மண்முனைத்துறையிலிருந்து மறுகரைக்கு பயணிகள் சேவையில் ஈடுபட்ட மோட்டார் படகொன்றின் இயந்திரம் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் 11ம் திகதி காலை 7 மணியளவில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான மகிழடித்தீவில் இடம்பெற்றுள்ளது.

தனியார் ஒருவரே இப்படகுப் பயணத்தை நடத்தி வந்தார். எனினும் படகு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமானதென்றும் அதன் இயந்திரம் 25 குதிரை வலு கொண்டதென்றும் கூறப்படுகிறது.

மலையாள மாந்திரீகம்

பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!

சுவிஸ் அன்பரின் கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் முழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

ஜெர்மன் அன்பரின் மடல், மகளின் திக்குவாய் குணமாகியது

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

லண்டன் அன்பரின் மடல், எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்.

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

கொழும்பு அன்பரின் மடல், 39 வயதில் அதிசயத் திருமணம்

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

குருணாகல் அன்பரின் மடல், நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்தால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டேம்."

பிரான்ஸ் அன்பரின் மடல், குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்த என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

ஹட்டன் அன்பரின் மடல், தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

இத்தாலி அன்பரின் மடல், சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

பதுளை அன்பரின் மடல், போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நாலும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

கனடா அன்பரின் மடல், ஜாதகத்தில் கூறியது பலிதம்

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

நீர்கொழும்பு அன்பரின் மடல், புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்த பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

பாம்பாணை அன்பரின் மடல்: அதிசய அக்னி [illegible]

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

கொழும்பு அன்பரின் மடல், அச்சொட்டான கைரேகை பலன்

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

டென்மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நல முடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?
வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?
இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும்
தொடர்பு கொள்ளலாம்.
குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ. பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

உதவி கோரும் நோயாளி



யாழ். தின்னவேலியைச் சேர்ந்தவரும், பெருந்தெருக்கள். திணைக்களத்தின் முன்னாள் தொழில் நுட்ப உத்தியோகத்தருமான ஆர்.சிறிஹரன் கடந்த ஐந்து வருடங்களாக கடுமையான இருதய நோய்க்கிலக்காகி கொழும்பு ஸ்ரீ ஜயவர்தனபுர ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவரது மருந்துவ செலவுக்காக மாதாந்தம் சுமார் ஐம்பதினாயிரம் வரை தேவைப்படுவதாகவும். அதற்குரிய எவ்வித வசதிவாய்ப்புகளும் அற்ற நிலையில் இருப்பதாக நோயாளியின் மனைவி திருமதி. சிறிஹரன் தெரிவிக்கிறார்.

எனவே தனது கணவரின் வைத்திய செலவுக்கு பரோபகாரிகளின் உதவியை எதிர்பார்க்கும் அவர் உதவிபுரிய விரும்புவோர் மஹரகம செலான் வங்கிக்கிளை, சேமிப்புக் கணக்கு இல 0040-321680-101க்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகின்றார்.

மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

கொழும்பில் டிசம்பர் 17 முதல் 23 வரை

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கல்முனையில் ஜனவரி 06, 07 திகதிகள்.

T.M.M. ப்ாமசி கல்முனை T.P. 067 29329

வவுனியாவில் ஜனவரி 09, 10 திகதிகள்.

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா. T.P. 024 22074, 21405, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

உலகப் புகழ்பெற்ற

எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காயச்சல்
- தலைவலி
- தலைச்சுற்று
- தலைப்பாரம்
- ஜலதோஷம்
- இருமல்
- மூக்கடைப்பு
- பல்வலி
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை

ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி

எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்

SINGHA HOLDINGS (PVT) LTD

14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
T.P : 888214 Fax : 682984

கல்முனையில் சூரர்களின் போர்க் கோலம்!

கொழும்பு கொம்பனித் தெருவில் தமிழ்த்தெய்வம் முருகனுக்கும் சூரனுக்கும் நடாத்தப்பட்ட சைவதத்துவ யுத்தத்தை சகல இன மக்களும் கண்டு அதிசயித்தார்கள் என்பதை அறிந்தோம். ஆனால் கல்முனையில் இங்குள்ள வாலிபர்கள் இன்னுமொருபடி மேல் சென்று, கந்தர் கடைசி நாள் இரவு சூரசம்ஹாரத்தினத்தில் ஆடிய ஆட்டங்களையும் பொது மக்களுக்கும், பொது ஸ்தாபனங்கள், தியான நிலையங்கள் முதலியவற்றிற்கு ஏற்படுத்திய பீதியையும் எப்படி வர்ணிப்பது?

அன்றிரவு அநேகமான வீடுகளில் மின்குமிழ்கள் அடித்து நொறுக்கப்பட்டன, பூந்தோட்டங்கள் நாசமாக்கப்பட்டன, காய்த்துக் குலுங்கிய இளநீர்களும், காய் கனிகளும் திருடப்பட்டன, மற்றும் தியான நிலையங்க்ள் பொது ஸ்தாபனங்களின் பெயர்ப்பலகைகள் தெருத்தெருவாக வீசப்பட்டுக் கிடந்தன.

அதன் பின்பு இந்த வாலிபர்கள் எல்லோரும் முருகன் கோவிலில் ஒன்று கூடிக் கும்மாளம் அடித் துள்ளதை இங்குள்ள சைவ சமயத் தவர்கள் மிகவும் மனவருத்தத்துடன் தாங்கிக்கொண்டார். "இதுதானா தமிழ்த் தெய்வம் முருகனின் யுத்த சேஷ்டைகள்?" என்று பல இனத்தவரும் வாழும் கல்முனையில் ஒரு சிரிப்புக்கு இடமாக்கி விடுகின்றார்கள்.

இதுமட்டுமல்லாமல், கார்த்திகை விளக்கீடு அன்று இவர்கள் சைக்கிளில் ஊர்வலம் வருவதும் வீடுகளில் கொழுத்தி இருக்கும் தீப்பந்தங்கள், சிட்டிகள் முதலியவற்றை அடித்து உடைப்பதும் ஒரு பழக்கமாக உள்ளது. அதைத் தொடர்ந்து சிவராத்திரி அன்று இரவு நேரங்களில் சொல்லொணா நஷ்டங்களை அந்தப் புனிதகரமான இராத்திரியில் ஏற்படுத்திய பல இன மக்கள் வாழும் கல்முனையில் சைவர்களுக்கும் சைவ சமயத்தை பின்பற்றும் மக்களுக்கும் மிகவும் அவமானத்தை ஏற்படுத்துகின்றனர். இதன் பொருட்டு இங்குள்ள சில சைவப்பெரியார்கள் ஒன்று கூடி இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசித்து வருகின்றனர்.

கல்முனைச் சைவர்கள்.

விளம்பரப் பகுதி!

CD'S Rs.100/-

BEST CD COLLECTION
SOFTWARE, GAMES, MP3,
CHILDREN'S EDUCATIONAL. ect.
(Audio CD's Available)

Digitalage
257F, Wellawatta Complex, Galle Road,
Wellawatta
Tel: 074-208271 (Next to Wellawatta Market)

புதிய தெரிவுகள் ரமழான் பெருநாளிற்கு

புனித நோன்புப்
பெருநாளை முன்னிட்டு
இறக்குமதி செய்யப்பட்ட பலரக
சல்வார் கமீஸ்
ஆடைகள் கண்கவர்
வர்ணங்களில்

ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்திருக்கும்

Daisy's

கடன் அட்டைகள் ஏற்கப்படும்

3, எஸ்கூல் லேன், கொழும்பு 3.
(வின்ட்சே மகளிர் வித்தியாலயத்திற்கு எதிரில்)
தொ. பே/ பக்ஸ்: 588675

கணினி வகுப்பு பாலர் வகுப்பிலிருந்து தரம் மூன்று வரையான மாணவர்களுக்கு Pentium iii கணினியில் பயிற்சியளிக்கப்படும்.

TDM

வயதெல்லை : நான்கிலிருந்து எட்டு வரை
கட்டணம் : மணித்தியாலத்திற்கு ரூ 125/=

31A, Galpotha Street, Colombo 13. Sri Lanka
Tp. 074-613486, 078-686996

மூன்றாமாண்டு நினைவஞ்சலி

மலர்வு ❖ 21 ❖ 12 ❖ 1974

உதிர்வு ❖ 18 ❖ 11 ❖ 1997

செல்வராசா விஜயகுமார்

ஆண்டு மூன்றென்ன
முப்பது தான்
கடந்தாலும்
அழிக்க முடியுமா
எங்கள் இதயக்
கோயிலில் வைத்து
பூசை செய்கின்ற
விஜயன் என்னும்
பூ மலரை!
அழிக்க முடியாதடா,
மீஜயன் அழிக்க
முடியாதடா
எங்கள் உயிர்கள்
உன்னிடம் வந்து
சேரும் போது தான்
எங்களால் மறக்க
முடியுமடா
உன்னை!

திதி ❖ 14 ❖ 12 ❖ 2000

இங்கு உன் பிரிவால் துயரும் அம்மா, தங்கை தம்பி
உற்றார், உறவினர்,

தகவல்: சுகந்தன்-கொழும்பு.

மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திரு.குலநாயகம் பசுபதிப்பிள்ளை (ரூபன்)
இளைப்பாறிய அதிபர் (சாவகச்சேரி)

மலர்வு 08.03.1929 உதிர்வு 19.12.1997

பாசத்துடனும் பண்புடனும் எங்களை வளர்த்தெடுத்த-எங்கள் அப்பாவே! நீங்கள் மறைந்து மூன்று ஆண்டுகள் ஆனாலும் உங்களை தினமும் நினைத்து நினைத்து கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலித்து காலமெல்லாம் உங்கள் நினைவுடனே வாழ்கின்றோம். நிஜமாய் நீங்கள் எங்களுடன் இன்றில்லை அப்பா. ஆனால் நினைவில் நித்தமும். எங்களுடன் வாழ்கின்றீர்கள் அப்பா எத்தனை ஆண்டுகள் ஆனாலும் எங்கள் அப்பாவை எங்களால் மறக்கமுடியாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: ப.ரகு, சூரிச் (Swiss) T.P 079 4464634.

10th ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு ❖ 23 ❖ 08 ❖ 1938

இறப்பு ❖ 03 ❖ 12 ❖ 1990

திதி : 12-12-2000

மாணிக்கம் மணிவாசகம்

எம்மை விட்டுப் பிரிந்து
பத்தாண்டுகள் சென்றாலும்
எம் நினைவுகள் என்றும்
உங்களோடு!
என்றும் உங்கள் ஆத்மா
சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கிறோம்.
என்றும் மறவா நினைவுகளுடன்
மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

தகவல்: சிறி பாஸ்கரன் (சிறி) லண்டன்.

மீண்டும் என்ற முடிவுடன் முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தை

மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் என்று தெரிந்து கொண்டே மறுபடி மறுபடி வேதாளத்தைச் சுமக்கும் விக்கிரமாதித்தன் கதை போல் இலங்கையில் எரியும் பிரச்சனையான இனப்பிரச்சனையின் தீர்வுகுறித்த பேச்சு வார்த்தைகளும் நிகழ்ந்தபடியிருக்கின்றன.

ஒவ்வொருமுறை பேச்சுவார்த்தைகள் நிகழும்போதும்ஏதோ சமாதானத்தின் வாசற் கதவு திறந்துவிட்டது என்பதுபோல் பத்திரிகை உலகம் மிக வாய்திறந்து ஆர்ப்பரிப்பதுண்டு. ஆனால் அவை கவிழ்ந்து கொண்டதும் அவையாவும் பழையபடி தமது ஒப்பாரிப் பாடலை மீளவும் புலம்ப ஆரம்பிப்பதே வழமையாக மாறிவிட்டது.

கடந்த தடவை இந்த அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியதும், விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை கொள்ளாதோர் இல்லையென்று சொல்லலாம். தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமல்ல, சிங்கள மக்கள் மத்தியிலும்கூட இந்தப் பிரச்சனை ஒருபடியாகத் தீர்ந்துவிடப் போகிறது என்ற நம்பிக்கை வெகுவாக வெளிப்பட்டது. பத்திரிகைகளோ பெருமளவு முக்கியத்துவம் கொடுத்துப் பாராட்டிப் பேசின. அப் பேச்சுவார்த்தைகளை வரவேற்று சமாதான ஊர்வலங்கள் பல நடத்தப்பட்டன. சமாதான நாட்டத்தை வெளிப்படுத்தி தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஊர்வலமாகச் சென்று, புலிகளுடன் கைகுலுக்கிவிட்டு வந்த காட்சிகள் இன்னும் எமக்கு ஞாபகத்திலிருக்கின்றன.

ஆனாலும் அந்த ஆனந்தம் அதிகநாள் நிலைக்கவில்லை. மீண்டும் வெடித்த அகோர யுத்தத்தில் சமாதானக் கோஷங்கள் யாவும் வாயடைத்துப் போயின. யுத்தத்தை நிறுத்துவதற்கு வக்கற்றுப் போன பல சமாதானவாதிகள் இறுதியில் யுத்தமே சமாதானத்துக்கு வழியென்றும், இந்த யுத்தத்தை சமாதானத்துக்கான யுத்தமென்றும் வியாக்கியானம் கொடுக்குமளவு யுத்தத்தின் கால்களில் சரணாகதியடைந்துவிட்டனர்.

அதற்கு முன்னர் ஐ.தே.க. ஆட்சியில் பிரேமதாஸா அரசாங்கத்துடன் நடந்த பேச்சுவார்த்தைகளிலும் இதுதான் நடந்தது. அதுதான் விடுதலைப் புலிகள் முதன் முதலாக தமது எதிரியாக எண்ணியிருந்த இலங்கை அரசாங்கத்துடன் இணக்கப்பாட்டுக்குச் சென்ற நிகழ்வாகவும் அமைந்திருந்தது. அதனால் அரசியல் அவதானிகளும் பத்திரிகை உலகும் மிக வியப்புடன் அப் பேச்சுவார்த்தைகளை நோக்கின. நம்ப முடியாத ஓர் அதிசயமாகத் தோன்றிய அப்பேச்சுவார்த்தைகளிலும் கூட பலர் நம்பிக்கை தெரிவித்தபடிதான் இருந்தனர். அன்றைய பத்திரிகைத் தலைப்புகளைப் புரட்டிப் பார்த்தால், இது புலப்படும், அவை இனறு எமக்கு நகைப்புக்குரிய தலைப்புகளாகத் தோன்றும்.

இந்திய இராணுவம் அகற்றப்பட்டு வடகிழக்கு மாகாணசபை அரசாங்கம் கலைக்கப்படுகின்ற காரியங்கள் ஒப்பேறியவுடன் அந்தச் சமாதானப் பேச்சுக்களும் விடைபெற்றுக் கொண்டன. எப்படி அப்பேச்சுக்கள் ஆரம்பித்தன என்பது தெரியாததுபோலவே, என்ன பேசப்பட்டன என்பதும் தெரியாமல், ஏன் முறிந்தன என்பதுகூடத் தெரியாமல் முறிந்தன. ஒருவரை ஒருவர் ஒப்பற்ற தலைவர்களென்றும் நேர்மையானவர்கள் என்றும் பாராட்டிக் கொண்ட இருதரப்பினரும் அதற்கு நேர் மாறாக, துரோகிகளென்றும் பயங்கரவாதிகளென்றும், நம்ப முடியாதவர்களென்றும் சாடி மூர்க்கமான யுத்தத்தில் குதித்து முட்டி மோதினர்.

ஆனாலும் அதற்கு முன்னர் நிகழ்ந்த இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் ஏதோ ஒரு அளவு அதிகப்படியான நம்பிக்கை விளைந்திருந்ததென்பது உண்மை. இந்தியா என்ற ஒரு வல்லமை கொண்ட நாடு இதில் நடுவர்களாக மட்டுமன்றி ஒப்பந்தத்தின் ஒரு பங்காளியாகவும், உத்தரவாதியாகவும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, தனது படைகளையே ஒப்பந்தத்தை அமுலாக்குவதில் நேரடியாக ஈடுபடுத்தியதானது ஓர் அரசியல் தீர்வை ஈட்டித்தரப் போகிறது என்ற நம்பிக்கையை பலமாகவே தோற்றுவித்திருந்தது.

ஆனால் அத்தனை பெருமுயற்சியும் கூட நிலையான ஒரு சமாதானத்தை ஈட்டித்தர முடியாததாக தோல்வியில் முடிந்தது. அத்தோடு நில்லாமல் இந்தியாவையே பெருமளவு பாதிக்கச் செய்த சில கசப்பான பின்விளைவுகளுக்கும் வழிகோலிவிட்டது.

இந்த வகையில் எமது பேச்சுவார்த்தை அனுபவங்களை எடுத்து நோக்கினால், அவை மிகவும் உறுதியற்ற நொருங்கும் தன்மை கொண்ட ஏற்பாடுகளாகத்தான் தென்படுகின்றன. அவ்விதத்தில் தற்போது ஏற்படவுள்ள பேச்சுவார்த்தைகளில் கடந்த காலங்களுக்கு மாறாக ஏதாவது உறுதிப்பாடு தெரிகின்றதா என்பதை ஆராய்ந்தாலே நாம் மறுபடி ஏமாற்ற மடையாது யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ளலாம்.

இந்தப் பேச்சுவார்த்தையில் நாம் எதில் நம்பிக்கை கொள்ளுவது என்பதுதான் கேள்வி. இரு தரப்பும் ஒருவர் மீது ஒருவர் துளியளவாவது நம்பிக்கை வைத்துள்ளனரா? அல்லது இன்றைய சூழ்நிலைதான் நம்பிக்கை தரக்கூடியதாக இருக்கிறதா?

எமக்கு சமாதானம் வேண்டுமென்பது வேறு விடயம். அது எமது மனவிருப்பம். அந்தச் சமாதானத்தை விளைவிக்கும் வழிவகைகள் யாவற்றையும் நாம் வரவேற்போம். அவை மீது எமக்கு பெருத்த எதிர்பார்ப்பு இருப்பதுவும் இயல்பான ஒன்றே. அவ்வாறான சமாதான நாட்டம் சமுதாயத்தில் இல்லையென்றால் சமாதானமே வராது என்பது அடிப்படையான அம்சம்.

அதனால் சமாதானத்துக்காக எமது ஆதங்கம் நியாயமானதே. ஆனால் அந்த ஆதங்கமும் அதிலுள்ள நியாயங்களும் யுத்தத்தின் தரப்பினர்களால் மதிக்கப்படுகிறதா என்பதுதான் சந்தேகம். இதில் இன்னும் வேதனைக்குரியதெனவென்றால், எமது சமாதான ஆதங்கத்தைச் சுட்டிக்காட்டியபடியே இருதரப்பும் யுத்தமுனைப்புகளில் இறங்கியிருப்பதுதான். "மக்கள் சமாதானத்தை விரும்புகிறார்கள், அதற்காகவே நாம் யுத்தம் புரிகிறோம்" என்று கூறி எமது சமாதான நாட்டத்தையே யுத்தத்துக்கான பலிக்கடாவாக்குவதும், இந்த யுத்தத்தின் காரணமாக மக்கள் படும் சொல்லொண்ணா வேதனைகளைச் சுட்டிக்காட்டி "மக்கள் வேதனைக்குள்ளாகிறார்கள். அவர்களின் வேதனையைக் களையவே யுத்தம் புரிகிறோம்" என்று பிரசாரப்படுத்துவதும் எம்மை விற்றுப் பிழைக்கும் இந்த யுத்த தாரிகளின் கபட வேடங்களாகிவிட்டன.

இந்நிலையில் நாம் சமாதானம் என்று உதட்டளவில் கூறப்படும் எந்த வார்த்தைக்கும் மதிமயங்கி விடாமல் உண்மையான சமாதானத்துக்கான அர்த்தபூர்வமான செயற்பாடுகளுக்காக முனைவதே விவேகமானது. அந்த வகையில் இன்று எழுந்திருக்கும் சமாதானபேச்சுவார்த்தைகள் பற்றிய விடயத்தையும் நாம் நிதானத்துடன் நோக்குவது அவசியம்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் பற்றிய முனைப்பானது யுத்தத்தின் இரு தரப்பாராலும் முன்னெடுக்கப்படவில்லை. யுத்தத்தின் எந்தத் தரப்பும் மற்றைய தரப்புக்கு பேச்சு வார்த்தைக்கு வரும்படி உளபூர்வமான அழைப்பதையும் விடுக்கவில்லை. மாறாக, முன்றாம் தரப்பொன்றினால் முன்னெடுக்கப்படும் இம் முனைப்புக்கு இரு தரப்பும் தங்கள் பிரதிபலிப்பை மட்டுமே வெளிக்காட்டுவதாக அமைந்துள்ளது.

இந்தப் பிரதிபலிப்பில் காட்டப்படும் அக்கறையானது உலகம் தம்மை சமாதானத்துக்கு எதிரானவர்கள் என்று இனங்கண்டுவிடக் கூடாதென்ற தற்பாதுகாப்பு நிலையில் நின்றே வெளிப்படுத்தப்பட்டுள்ளது, மட்டுமன்றி மறுதரப்பினையே சமாதானத்துக்கு எதிரானவர்களாக அம்பலப்படுத்தும் குறிக்கோளுடன் கூடியதாகவும் உள்ளது.

நம்பிக்கையின் அடிப்படையில் தான் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட முடியும். ஒவ்வொரு தரப்பும் மறு தரப்பின்மீது ஏதோ ஒருசில அடிப்படைகளிலாவது நம்பிக்கை கொண்டு, அந்த நம்பிக்கையை மற்றைய விடயங்களிலும் விஸ்தரிக்க வகைச் செய்யும் விதத்திலேயே இப்பேச்சுவார்த்தைகள் அமைந்திருக்க வேண்டும்.

ஆனால் இங்கோ அதற்கு எதிர்மாறான நிலைமைதான் காணப்படுகிறது. அதாவது இங்கு அவநம்பிக்கையே அடிப்படையில் தொனிக்கிறது. இப் பேச்சுவார்த்தைகள் குறித்த இருதரப்பு உயர் தலைமைகளின் இரு பிரதானமான உரைகளும் இதனையே கோடிட்டுக் காட்டுகின்றன.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவின் முக்கியத்துவம் வாய்ந்த புதிய பாராளுமன்றத்தின் அங்குரார்ப்பண உரையில் புலிகள் மீதான சந்தேகத்தொனி சந்தேகத்துக்கிடமின்றித் தெளிவாகத் தொனித்தது.

"சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிய முடிவொன்றை எடுக்கும்போது, எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் கடந்தகாலச் செயற்பாடுகளை அவதானித்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தோடு இச் சீருயர் சபையின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணங்குவார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்" என்று தனது உரையில் குறிப்பிட்ட அவர், அதில் "25 வருட காலமாக பல்வேறு அரசாங்கங்களை ஏமாற்றிய விதத்தில் அவர்கள் (புலிகள்) மீண்டும் என்னை ஏமாற்ற வருவார்கள் என்ற விடயம் தீவிரமாக ஆராயப்பட வேண்டும்" என்ற சந்தேக உணர்வையும் வெளிப்படுத்தியிருந்தார்.

அத்துடன் நில்லாது, புலிகள் பேச்சுவார்த்தைக்கு வரும்போது முன்வைக்கக் கூடிய நிபந்தனைகளை முன்கூட்டியே மறுதலிக்கும் விதத்தில்,

"பேச்சுவார்த்தைகள் என்ற கோதாவில் எல்.ரி.ரி.ஈ. இயக்கம் பொருள்களுக்கான கட்டுப்பாட்டினை நீக்குதல், உணவுகளை அனுப்புதல் போன்ற அவர்களுக்குப் பயனபடும் கோரிக்கைகளை விதிப்பார்களாயின், அதனால் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை" என்று கூறி, அதைச் செய்யவேண்டியது நமது புனர்வாழ்வு அமைச்சின் வேலை உங்களுக்கு அதில் சம்பந்தமில்லை என்ற கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு மேலும் சென்று, "எங்களுடன் எல்.ரி.ரி.ஈ. இயக்கம் உறுதியான அரசியல் விடயங்கள் பற்றியே பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று வலியுறுத்தியும் உள்ளார்.

இவை தெளிவாகவே அரசாங்கத்தின் மனநிலையைப் புலப்படுத்துகின்றன. பேச்சுவார்த்தை என்பதன் அவசியம் தங்களுக்கு இல்லை, புலிகளுக்குத்தான் என்ற உயர் தோரணை இதில் புலப்படுகிறது. அத்துடன் புலிகள் இங்கு ஏதோ ஏமாற்று வேலையைச் செய்ய முனைகிறார்கள் என்றவாறே நோக்கப்படுகிறார்கள். இப்படியிருக்கும்போது இந்த நாட்டின் மிக முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைக்கு தீர்வு காணபதற்கான சம பங்காளி என்ற அருகதை மற்றைய தரப்பினரான புலிகளுக்கு வழங்கும் பக்குவமோ மனநிலையோ அரசாங்கத்தரப்பில் காணக்கூடியதாக இல்லை. இப் பேச்சுவார்த்தையில் புலிகள் தமக்கு தேவையான அனுகூலங்களை ஈட்டிக் கொண்டு ஏதோ ஒரு காரணத்தைச் சாட்டி அதை முறித்துக் கொள்வார்கள் என்ற அவநம்பிக்கைதான் அரசாங்கத்தரப்பில் தென்படுகிறது.

இதேவேளை மறுபுறத்தில், புலிகளின் நிலைப்பாடுகளை வெளிப்படுத்தும் மிக முக்கியமான உரையாகக் கணிக்கப்படும் புலிகள் தலைவரின் மாவீரர் உரையிலும் அரசாங்கம் மீதான மிகப் பெரிய அவநம்பிக்கையே வெளிபடுத்தப்பட்டுள்ளது. சந்திரிகா கடைப்பிடிக்கும் கொள்கைகளில் இனவாதமே அடிப்படையாக உள்ளதாகவும், அவரது அமைச்சுக்களில் இனவாத கடும்போக்காளர்களே முக்கிய அமைச்சர்களாக உள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அத்தோடு டகளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சர் பதவி வழங்கியமையையும் விசனத்தோடு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (ஈ.பி.டி.பி.யின் உதவியின்றி இந்த அரசாங்கத்தை அமைத்திருக்க முடியா தென்ற யதார்த்தத்தையும் மீறி அதற்கெதிராகக் குற்றச்சாட்டையே இங்கு வெளிப்படுத்தி மிருந்தனர்) மேலும் சந்திரிகா அரசு பல நாக்குகளால் பேசுகின்றதென்றும், சந்திரிகா ஒரு சமாதானப் பிரியை அல்ல என்றும் அவர் ஒரு கடும்போக்காளர் என்றும் அவ்வுரை வர்ணித்துள்ளது. இனப்பிரச்சனையின் அடிப்படைகளை சிங்கள தேசம் ஏற்கவில்லை யென்று தெரிவித்துள்ள அவ்வுரையில், சந்திரிகா அரசு சமாதானத் தீர்வுக்கு முன்வருவது சந்தேகமே என்று தமது சந்தேகத்தை வெளிப்படையாகவே புலிகள் தலைவர் முன்வைத்துள்ளார்.

இரு புறத்துத் தலைவர்களும் எதிராளிகள் மீது சந்தேகத்தையே முன்வைத்திருக்கும் நிலை இப்பேச்சுவார்த்தையை முன்வைத்திருக்கும் நிலை இப்பேச்சுவார்த்தையை ஆரோக்கியமற்ற ஆரம்பமாகவே உணரச் செய்கிறது. அவர்களே ஒருவரையொருவர் சந்தேகிக்கும் இப்பேச்சுவார்த்தையில் நாம் நம்பிக்கை வைப்பதென்பது எம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகவன்றி வேறு ஒன்றாகவும் ஆகிவிடப்போவதில்லை.

இதைவிட இருபுறத்திலும் யுத்த முனைப் புகளுக்கும் அதற்கான பிரகடனங்களுக்குமே மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பாராளுமன்ற அங்குரார்ப்பண உரையில், "தேசிய நிதியிலிருந்து யுத்தத்துக்காக மாபெரும் செலவினைச் செய்ய வேண்டியவர்களாக நாங்கள் இருக்கின்றோம். ஆயினும் இந்த நாட்டைப் பிரிப்பதற்கு எவருக்கும் இடமளிக்க மாட்டோம்." என்றும் "எத்தகைய அச்சுறுத்தல்களுக்கு உட்பட நேர்ந்த போதிலும் ஆயுதம் தாங்கி பயங்கரவாதத்திலிருந்து நாட்டை மீட்பதற்காக அஞ்சாநெஞ்சம் கொண்டு போர் புரிகின்றோம்" என்றும் கூறியிருக்க, புலிகள் தலைவர் பிரபாகரனோ தனது மாவீரர் உரையில் புலிகளின் தாகம் தமிழீழ தாயகம் என்ற இறுதி வாக்கியத்துடனேயே தனது உரையை முடித்துள்ளார். அவரது உரையின் ஆரம்பமே தமது ஆனையிறவு தாக்குதல் வெற்றியை தமது போராட்ட வர லாற்றில் ஒரு திருப்பு முனையாகவும் ஒப்பற்ற இராணுவ வெற்றியாகவும் விளம்பியபடியே அமைந்திருந்தது. அத்தோடு யாழ்ப்பாணத் தாக்குதலில் தமது வெற்றியைத் தடுக்க வழி செய்து, சர்வதேச நாடுகளின் இலங்கை அரசாங்கத்துக்கு உதவியளித்தமை குறித்து வருத்தமும் கவலையும் தெரிவித்திருந்தார். எனினும் தாம் யாழ்ப்பாணத்தை நிச்சயம் கைப்பற்றியே தீருவோம் எனச் சூளுரைத்து மிருந்தார். இவை இருதரப்பினதும். இராணுவ முனைப்பினையே தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இராணுவ ரீதியான வெற்றியில் சிந்தனை நாட்டம் செல்லுமிடத்து சமாதானப் பேச்சுவார்தையில் எதையேனும் ஈட்டிக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை உள்ளூர இருக்கப் போவதில்லை. தமது பிடியைத் தளர்த்தாமல் எதிர்த்தரப்பின் பிடியில் தளர்வு எதையும் ஏற்படுத்த முடியுமா என்று பார்க்கும் வாய்ப்பாக மட்டுமே இப்பேச்சு வார்த்தைகளை ஒவ்வொரு தரப்பும் நோக்கும்.

இதேவேளை இப்பேச்சுவார்த்தை பற்றிய விடயங்களின் பின்னணிச் சூழலும் அதன்மீது நம்பிக்கை ஏற்படுத்துவதாக இல்லை.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் தற்போதுதான் ஏனைய இரு தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தயவில் கூட்டணி அரசாங்கமொன்றை அமைத்திருக்கும் நிலை. இவ்அரசாங்கத்துக்கு 4 ஆசனங்களே மேலதிகமாக உள்ளது. அதிலும் எந்நேரமும் ஈ.பி.டி.பி. முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளிலும் தங்கியிருக்கவேண்டிய நிலைமை.

இந்நிலையில் அரசியல் அமைப்புச் சட்ட மறுவரை ஒன்றைச் செய்வதற்கான, குறைந்தபட்சம் தாமே முன்வைத்த தீர்வுத்திட்டத்தைத் தன்னும் நிறைவேற்றுவதற்கான முன்றில் இரண்டு பாராளுமன்றப் பெரும்பான்மை இல்லை. எனவே இனப்பிரச்சனை தொடர்பான பேச்சுவார்த்தையொன்றில் புலிகளைத் திருப்தி செய்யக்கூடிய தீர்வுத் திட்டமொன்று அரசாங்கத்தின் கையில் இல்லை. இந்நிலையில் பேச்சுவார்த்தை யொன்றுக்குச் செல்ல அரசாங்கம் தயாராக இல்லை.

ஆனாலும் தாம் சமாதானத்துக்கு எதிரானவர்களாக சர்வதேச சமூகத்தின் முன்னால் வெளிக்காட்டிக் கொள்ள முடியாது. ஏனெனில் இலங்கை மேற்குலகின் நிதி உதவியில் தங்கியிருக்கும் நாடு. இந்நிலையில் நோர்வே அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தைக்கான முன்னெடுப்பை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக் கொள்ள வேண்டிய காரணத்தால் இம்முயற்சியை அங்கீகரித்துக் கொண்டு மெத்தனப் போக்கில் விட்டுள்ளது.

இதேவேளை புலிகள் தரப்பிலும் சில அழுத்தங்களும் அவசியங்களும் உள்ளன. முக்கியமாக பிரித்தானியாவில் புலிகளின் முன்னணி அமைப்பாக இயங்கி வந்த தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் வங்கிக் கணக்குகள் பிரித்தானிய அரசாங்கத்தால் முடக்கப்பட்டுள்ளன. அத்தோடு அடுத்த வருடத்தில் அங்கு பயங்கரவாத அமைப்புகளின் செயற்பாடுகளைத் தடைசெய்யும் சட்டமூலமொன்று நிறைவேற்றப்படவுள்ளது. அதில் புலிகளும் ஒரு பயங்கரவாத அமைப்பாக சேர்க்கப்படக் கூடிய ஆபத்தும் அவர்களுக்கு உள்ளது. அவ்வாறான ஒரு நிலைமை தோன்றினால் பிரித்தானியாவில் தஞ்சம் கோரியுள்ள பெருந்தொகையான புலம் பெயர்ந்த தமிழர்கள் தாமும் நாடு கடத்தப்படக்கூடிய ஆபத்துக் கருதி புலிகளை ஆதரிப்பதிலிருந்து பின் வாங்கிவிடக் கூடும் என்ற இக்கட்டையும் அவர்கள் எதிர்நோக்க நேரிடலாம்.

எனவே இதிலிருந்து தவிர்ப்பதற்கு பேச்சுவார்த்தைகளுக்கு முன்வரவேண்டிய அவசியமும் அவர்களுக்கு உள்ளது. அவ்வாறு பேச்சுவார்த்தைக்கு முன்வரும் வேளையில், சொந்த நாட்டு அரசாங்கமே அவர்களை அங்கீகரித்துப் பேச்சு வார்த்தையில் ஈடுபடும்போது, பிரித்தானியா அவர்களைப் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்ப்பது ஆபத்தானதாக அமையும். பிரித்தானியா மீதும் சமாதானத் தீர்வொன்றுக்கு தடையாக செயற்படும் பழி ஏற்படுமாகையால் அது அத் தடையைத் தவிர்த்துக் கொள்ளும்.

இந்த அவசியம் மட்டுமன்றி, தற்போது இலங்கை அரசாங்கம் ஈ.பி.டி.பி. கட்சிக்கு தமிழ் மக்களின் விவகாரங்களைக் கையாளக் கூடிய புனர்வாழ்வு, தமிழர் விவகார அமைச்சுக்களைக் கொடுத்துள்ளமையால் அதன் முக்கியத்துவத்தை குறைக்கும் வகையில் தமது முக்கியத்துவத்தை நிலைநாட்டவும் இப்பேச்சுவார்த்தைகள் புலிகளுக்கு ஒரு வழிவகையாக அமையும்.

இவ்வாறான காரணங்களால் இரு தரப்பும் பேச்சுவார்த்தைக்கு செல்ல நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். ஆனாலும் இப்பேச்சுவார்த்தையில் நடுவர்களாக இயங்கும் நோர்வே அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் கருத்தாக வலியுறுதி விதித்துள்ள ஐரு விதிகளுக்கும் இவர்களால் உடனபட முடியுமா என்பதும் கேள்வியாகவே உள்ளது. பிரிவினையற்ற ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுகாணப்பட வேண்டும், தமிழ் மக்களின் அபிலாஷைகள் உச்ச மட்டத்தில் ஈட்டப்பட்டவேண்டும் என்பனவே அவர்களது இரு அடிப்படை விதிகள். இவற்றுக்குப் புறம்பாக தற்போது மற்றுமொரு தடையும் முளைவிட்டுள்ளது. இந்தியா புலிகள் தலைவர் பிரபாகரனை தமது நாட்டுக்கு நாடு கடத்தும்படி இலங்கையைக் கோரியுள்ளது. இது முன்னரும் கோரப்பட்ட ஒன்றாயினும் தற்போது பேச்சுவார்த்தைக்கான முனைப் புகள் நிகழும் தருணத்தில் இவ்வாறு கோருவது அதற்கு முட்டுக்கட்டை போடும் வகையில் அமைந்துள்ளது.

ஆகவே இப்பேச்சுவார்த்தைகள் சூழ் நிலை நெருக்கடிகாரணமாக ஆரம்பித்தாலும் இருதரப்பிலும் மட்டுமல்ல, இந்தியா முதற் கொண்ட பல்வேறு அரசியல் சக்திகள் மட்டத்திலும் விரைவில் முறிவும் என்ற எதிர்பார்ப்பே உள்ளது. இந்த முறிவு எல்லைக்குள் யார் இப்பேச்சுவார்த்தையைப் பயன்படுத்தி கூடுதல் லாபம் பெற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்பது மட்டுமே இங்குள்ள போட்டியாக காணப்படுகிறது.

என்வே சமாதானம்....

இப்பேச்சுவார்த்தைகளுக்கு அப்பால்தான் தேடப்படவேண்டிய பொருளாகிவிட்டது! ▲

நரன்

செய்திச் சிதறல்

◎ மன்னார் மாவட்டத்திலுள்ள மடு மாதா ஆலயத்தின் மடுமாதா திருச்சொரூபம் இலங்கையின் தென் பகுதிகளுக்கு ஊர்வலமாக எடுத்து வருவதற்குக் கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்த மறை மாவட்ட ஆயர்கள் ஆயத்தங்களைச் செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் சகல இன மக்களுக்குமிடையில் உறவை ஏற்படுத்துவதற்கும், யுத்தப் பேரபாயம் நீங்கி அமைதி நிலைநாட்டப்படுவதற்கும் வேண்டியே இந்தத் திருச்சொரூப ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இலங்கை வாழ் அனைத்து மக்களும் மடு மாதா மீது பக்தி கொண்டவர்கள். அத்திருப் பதியில் இடம்பெறும் வருடாந்த ஆராதனைகள் மற்றும் உற்சவங்களின் போதும் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கில் பக்தர்கள் யாத்திரை செல்வது வழக்கம்.

◎ கடந்த தீபாவளித் தினத்தன்று மட்டக்களப்பு ஆரையம்பதியில் டெலோ இயக்கத்தைச் சேர்ந்த நால்வர் அதே ஊரைச் சேர்ந்த ப.யுகேந்திரன் என்ற இளைஞனை கடுமையாகத் தாக்கியுள்ளனர். சிகரெட் வாங்கி வரும்படி யுகேந்திரனை அனுப்பியிருந்தனர். அந்த இளைஞன் வருவதற்கு தாமதம் ஏற்பட்டமையினால் யுகேந்திரனுக்கு தண்டனை வழங்கியுள்ளனர். அவன் முச்சுத்திணறி வீழுந்ததும் அவர் இறந்து விட்டார் என நினைத்து மணலில் மடுவொன்றைத் தோண்டி அவ் விளைஞனை புதைத்துவிட்டுச் சென்று விட்டனர். யுகேந்திரனின் நண்பன் மண்ணைத் தோண்டி அவரை வெளியே எடுத்துப் பார்த்தபோது, அவர் உயிருடன் காணப்பட்டார். மட்டக்களப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். இந்த இளைஞன் கடந்த ஞாயிற்றுக் கிழமை மரணமடைந்து விட்டார்.

இந்தக் கொலையில் தொடர்புடையவர்கள் எனக்கருதப்படும், கடந்த பொதுத் தேர்தலில் டெலோ அமைப்பின் வேட் பாளரான பரதம் என்ற ரஞ்சன் மற்றும் கோகுலராஜா என்ற இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றும் இருவர் தேடப்பட்டு வருவதாக தெரியவருகிறது. இந்த நான்கு இளைஞர்களும் டெலோ இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டவர்கள் என்று ரெலோ அமைப்பின் தலைவர் அடைக்கலநாதன் எம்.பி.அறிவித்துள்ளார்.

◎ சர்வதேச மனித உரிமைகள் தினம் இலங்கையின் பல பாகங்களிலும் அனுசரிக்கப்பட்டன. ஊர்வலங்களும் பொதுக் கூட்டங்களும் கடந்த 10ம் திகதி நடைபெற்றன. யாழ்ப்பாணத்தில் சமாதானப் பேரணியொன்றை நடத்துவதற்கு யாழ் மாவட்ட நீதிக்கும் சமாதானத்திற்குமான அமைப்பு யாழ் பொலிஸ் அதிகாரிகளிடம் அனுமதி பெற்றிருந்தனர். இருப்பினும் இராணுவ அதிகாரிகள் அத்தகைய பேரணியை நடத்துவதற்கு மறுத்துவிட்டனர். இதனைத் தொடர்ந்து யாழ் மரியன்னை தேவாலயத்தில் விசேட திருப்பலி பூஜையும் வழிபாடும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

◎ நாட்டின் அமைதியை நிலை நாட்டுவதற்கு பல பிரயத்தனங்கள் உள் நாட்டிலும் சில ஐரோப்பிய நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன. இப்பிரயத்தனங்களுக்குச் சார்பாகவும் எதிர்ப்பாகவும் குரல்கள் எழுந்த வண்ணமுள்ளன. 'எது எவ்வாறானாலும் எமது குறிக்கோள்கள் யுத்தத்தைத் தொடர்வதே' என்ற தோரணையில் படையினர் மும்முரமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். யாழ் குடாநாட்டில் படையினர் ஆரம்பித்த 'ஹினிகிர-05' நடவடிக்கையின் காரணமாக யாழ் குடா நாடு அதிர்ந்தவண்ணமே உள்ளன. விடுதலைப் புலிகளும் தங்களுடைய எதிர்நடவடிக்கைகளை விடாப் பிடியாக மேற்கொண்டே வருகின்றனர். இந்த மோதல்கள் காரணமாக யாழ் மாவட்டத்தில் ஒரு கட்டமும் உருப்படியாக மிஞ்சப் போவதில்லை என்று தெரிகிறது. நாளாவட்டத்தில் யாழ் குடாநாடு ஒரு பாலைவனமாக மாறி விடும் நிலைதான் தோன்றியிருக்கிறது என்று அண்மையில் கொழும்புக்கு வந்த ஒரு வயோதிபர் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

அண்டை மண்டலத்தில்....

ஈழவேந்தன் வெளியேற்றம்

தமிழ்நாட்டில் புலி பற்றிய கிலி

தமிழ் ஈழ விடுதலை முன்னணியின் செயலாளர் ஈழவேந்தன் கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார். அவர் தீவிர விடுதலைப்புலிகள் ஆதரவாளர் என்பதாலேயே இந்த நடவடிக்கை. புலிகளின் ஆஸ்தான கவிஞர் காசி ஆனந்தனும் விரைவில் திருப்பி அனுப்பப்படக்கூடும் என்று சில ஊகங்கள்.

ஏற்கெனவே ராஜ்குமார் மீட்பில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் பங்கு வகித்ததன் காரணமாக விடுதலைப் புலிகள் மீண்டும் மாநிலத்தில் செல்வாக்கு பெறத் தொடங்கிவிட்டார்கள் என்று பத்திரிகைகள் எழுதித்தள்ளிக் கொண்டிருக்கும் வேளையில், தமிழ் நாடு விடுதலைப்படையினரின் இணையத்தளத்தில் ஈழத்தையும் உள்ளடக்கிய தனித்தமிழகம் வேண்டும் என்று கோரப்பட்டிருப்பது தெரிய வந்திருக்கிறது. தேசபக்தர்களெல்லாம் கொதித்தெழுந்திருக்கின்றனர்.

பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் ப.கண்ணன் சக அமைச்சர் தேனி ஜெயகுமாருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பிருக்கிறது எனக் குற்றம் சாட்டி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறார். அங்கே கூட்டணி அரசு எந்நேரமும் கவிழும் நிலை.

விடுதலைப்புலிகள் ஈழத்தை உருவாக்குகிறார்களோ இல்லையோ தொடர்ந்து இந்தியாவில் மத்திய, மாநில அரசுகள் கவிழக் காரணமாயிருக்கிறார்கள் என்று பெருமைபட்டுக்கொள்ளலாம்.

ஈழவேந்தன் 15 ஆண்டுகளுக்கு முன்பு தனி ஈழம் வேண்டும் என்று கூறும்அறிக்கைகளை பிரசுரிக்கச் செய்யவேண்டி ஒவ்வொரு பத்திரிகை அலுவலகமாக ஏறி இறங்குவார். அவருக்கென்று பெரிய ஆள்பலமில்லை. நல்ல பேச்சாளர், அவ்வளவே. ஏதோ அங்குமிங்கும் அலைந்துகொண்டிருப்பார். ஆனால் பிரச்சனைகளை மிகத்துல்லியமாக விளக்குவார். நாளடைவில் விடுதலைப்புலிகளின் ஊதுகுழலாவிட்டார். வெளி நாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் தாங்கள் புலி ஆதரவாளர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் கொள்கிறார்கள் என்பது உண்மையே. அந்த வட்டாரத்து மக்களின் மதிப்பை பெறுவதற்கோ என்னவோ ஈழவேந்தனும் அப்படி ஒரு நிலைப்பாட்டினை எடுக்கத்துவங்கினார்.

பிரபாகரனை ஆதரிப்பவர் சிவசேனை வெறியன் பால்தாக்ரேயாக இருந்தாலும் சரி, அந்த ஆதரவை மகிழ்ச்சியோடு மற்றவர்களிடையே எடுத்துக் கூறி வந்தார்.

சமீபத்தில் சிவசேனைக் கட்சியினர் விடுதலைப்புலிகளை ஆதரித்து ஒரு விநாயகர் ரத யாத்திரையினை பம்பாயிலிருந்து ராமேஸ்வரம்வரை நடத்தினர். இந்தியாவிலேயே மிக மோசமான காலிகள் கும்பல், பிற்போக்காளர்களின் கூடாரம் என்றால் அது சிவசேனைதான். அவர்கள் தான் ஏதோ ஸ்டண்ட் அடிக்கிறார்கள் என்றால் நெடுமாறன் நடத்தும், 'தென்செய்தி' வாரஏடு அந்த ஊர்வலத்தைப் பற்றி விரிவாக எழுதி, சிவசேனைக்கு நன்றி கூறியது.

அவருடன் இருக்கும் சில இந்துமத எதிர்ப்பாளர்கள் சற்று நெளிந்தார்கள். ஏன்? எதற்குவெட்கப்படவேண்டும், ஆதரவு எந்த முகாமிலிருந்து வந்தாலும் மனமுவந்து ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றாராம் நெடுமாறன்- சற்றுக் கடுமையாகவே. ஈழவேந்தனும் இந்துத்துவ கொள்கைகளை முன்னிறுத்தும் பாரதிய ஜனதாவினரின் ஆதரவு தனக்குண்டு, வைகோ, வாஜ்பேயிக்கு நெருக்கமானவர் என்ற நம்பிக்கையில், தனது புலி ஆதரவு பிரசாரத்தில் தீவிரமாக இறங்கினார். ஆனால் தமிழ்நாட்டில் நிலை வேறு ஜெயலலிதா போன்ற சாமியாடும் புலி எதிர்ப்பாளர்களை எதிர்கொண்டு, தனது பதவியை தக்கவைத்துக் கொள்ள முதல்வர் கருணாநிதி எதுவும் செய்வார் என்பதை ஈழவேந்தன் உணரவில்லை.

ஏற்கெனவே கருணாநிதி அரசுதான், அவரையும் இன்னும் ஒரு சிலரையும் விடுதலைப்புலிகளுக்காக மருந்து கடத்தினார்கள் என்று கூறி சிறையிலடைத்தது. பின்னர் வை.கோ. சென்னையில் ஒரு மாநாட்டில் உலகத்தமிழரிடையே இருக்கும் தொப்புள் கொடி உறவைப் பற்றி முழங்கி, ஈழப் போராட்டத்தில் ஒவ்வொரு தமிழரும் தனது பங்கினை ஆற்றுவது மாபெரும் வரலாற்றுக் கடமை என்று அறிவுறுத்திவிட்டு, புதுடில்லிக்குப் பறந்துவிட்டார். அன்றுதான் ஈழவேந்தன் வெளியேற்றப்பட்டார். நடந்து ஒரு வாரமாகிறது, இன்னமும் வை.கோ. வாயைத் திறக்கவில்லை.

நாடாளுமன்றத்தில் பிரதமர் வாஜ்பேயி, அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவது இந்திய மக்களின் தணியாத தாகம் என்று ரைத்தபோது, கருணாநிதி உட்பட எந்த திராவிடத் தலைமும் விமர்சிக்கவில்லையே. பதவிக்காக எதையும் செய்யத்தயாராயிருக்கும் அரசியல்வாதிகளை நம்பி செயல்பட்டதன் பலனை ஈழவேந்தன் இப்போது அனுபவிக்கிறார்.

பாண்டிச்சேரி ஒரு சிறிய நகரம். அதற்கென்று ஒரு சட்டமன்றம், முதலமைச்சர். இதில் அவர்களுக்குள் அடிதடி. த.மா.கா. விலிருந்து சமீபத்தில் விலகிய ப.கண்ணன், த.மா.கா. அமைச்சர் ஜெயகுமாருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பிருக்கிறது, அவர் அமைச்சரவையிலிருந்து நீக்கப்படவேண்டும் என்று சட்டமன்றத்திலேயே தர்னா போராட்டம் நடத்தினார் ஆதாரமிருக்கிறதென்றார். எனன ஆதாரம்? தம்பி பிரபாகரனுடன் எப்போதோ ஜெயகுமார் எடுத்துக் கொண்ட புகைப்படம்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் ஜெயலலிதாவுடன் தானு, சிவராசன் புகைப்பட மெடுத்துக் கொண்டனர் என்று கருணாநிதி ஒரு புரளியைக் கிளப்பியது பலருக்கு நினைவிருக்கலாம்.

அப்புறம் பாருங்கள் தலித்ஸ்தான் என்ற அமைப்பின் இணைய தளம் தமிழின வாதிகளுக்காக இடம் ஒதுக்கியிருக்கிறது. அதில் பிரிகேடியர் வீரப்பன் என்றும், பிரபாகரன் மகோன்னத தலைவர் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ தென்னிந்தியா முழுமையும், இலங்கையின் ஈழத்தமிழர் பகுதியெல்லாவற்றையும் உள்ளடக்கிய வரைபடத்தை அந்த தளம் வெளியிட்டு, அதுவே எதிர்கால தனித்தமிழ்நாடு என்று கூறியிருக்கிறது.

கானகன்

பத்திரிகைகளெல்லாம் பரபரப்பாக செய்தி வெளியிடுகின்றன. "ஆஹா, இந்திய இறையாண்மைக்கு மாபெரும் ஆபத்து காத்திருக்கிறது, அரசுகளே விழித்துக் கொள்ளுங்கள்!" என்று அலறல்.

எவ்வளவு பேர் இணையத்தளத்தைப் பார்க்கப்போகிறார்கள், அப்படியே பார்த்தாலும், புரட்சியில் குத்துவிடுவார்களா என்ன அது ஒரு பிரசாரசாதனம்அவ்வளவே, ஆனாலும பதறுகிறார்கள்.

இந்த எடுத்துக்காட்டுகளையெல்லாம் கூறுவதற்கு காரணம், இத்தகையதொரு சூழலில் ஈழவேந்தனுக்கு நடந்தது முற்றிலும் எதிர்பார்த்ததே! அதில் ஒன்றும் வியப்பில்லை என்பதை வலியுறுத்தவே.

ராஜீவ் பிரதமராக இருந்த காலத்தில் தந்தை செல்வாவின் மகன் சந்திரஹாசனையும், விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தையும் நாடு கடத்த முயற்சித்தபோது, அது இந்தியாவையே உலுக்கி விட்டது.

பாலசிங்கம் இங்கிலாந்து பாஸ்போர்ட் வைத்திருந்தார். லண்டனுக்குப் போய் விட்டார். சந்திரஹாசனை அமெரிக்காவில் இறக்கிவிட முயற்சி செய்தார்கள். அவருக்கு அமெரிக்க பாஸ்போர்ட் இல்லை. அவர் இறங்க மறுத்தார். விமானத்திலேயே இருந்து சத்தியாக்கிரகம் செய்தார். இந்திய அரசிற்கு பெரும் அவமானமாகிவிட்டது.

அவரைத் திரும்ப இலங்கைக்கு அனுப்பும் துணிச்சல் அப்போது ராஜீவ் அரசிற்கு இல்லை. அந்த அளவு மக்கள அனுதாபம், ஆதரவு ஈழத்தமிழர்கள் பாலிருந்தது.

அந்த நிகழ்ச்சிக்குப் பின் போராளிக் குழுக்களுடன் நேரடித்தொடர்பில்லாத ஒரு இலங்கைத் தமிழர் வெளியேற்றப்படுவது இதுதான் முதல்முறை. ஆனாலும் பொது மக்களோ, பத்திரிகைகளோ ஈழவேந்தனுக்கு இழைக்கப்பட்ட அநீதியினை எதிர்த்துக் குரல் கொடுக்கவில்லை. பொதுவாக இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள், சகோதரப் படுகொலைகள் தமிழக மக்களை அதிகமாக பாதித்ததில்லை. ஈழவிடுதலைப் போரில் இதெல்லாம் சகஜம் போலும் என்ற எண்ணமே இங்கே மேலோங்கியிருந்தது.

ஆனால் 1990ல் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச் சேர்ந்த பத்மனாபாவும் மற்றத் தோழர்களும் படுகொலை செய்யப்பட்டபின்னரே விடுதலைப் புலிகள் பற்றிய பயம் தமிழ்நாட்டில் பரவ ஆரம்பித்தது. ஆனால் அந்த நேரத்தில கூட ஜெயலலிதா அவர்களுக்கு தனது ஆதரவைத் தெரிவித்து வந்தார் என்பதை நினைவு கூர வேண்டும். ராஜீவ் காந்தி கொலைக்குப் பிறகே அந்த இயக்கத்தினர் மீது வெறுப்பும் அவர்களைக் குறித்த பீதியும் அதிகரிக்கத்தொடங்கியது.

அதன்பிறகோ ஜெயலலிதா, சுப்பிரமணியசுவாமி, வாழப்பாடி ராமமூர்த்தி போன்ற அரசியல்வாதிகளுக்கும் சோராம சாமி, இந்து பத்திரிகை ஆசிரியை மாலினி பார்த்தசாரதி போன்றோருக்கும் விடுதலைப் புலிகள் இங்கிருக்கிறார்கள், அங்கிருக்கிறார்கள், இங்கே வன்முறை, அங்கே கலவரம், குண்டுவெடிப்பு, நாட்டு ஒற்றுமைக்கு பங்கம், எல்லாம் புலிகள் செயல் என்று ஓயாமல் ஒலமிடுவது வாடிக்கையாகிவிட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரை தமிழின தீவிரவாதம் பேசும் ஒரு சில குழுக்கள், வை.கோ.வின் ம.தி.மு.க., ராமதாசின் பா.ம.க. போன்ற சிறிய கட்சிகள் ஆகியவற்றைத் தவிர வேறு எந்தப் பகுதியினரும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு ஆதரவு தருவதாக இல்லை. இன்னுஞ் சொல்லப் போனால் பலவேறு இன்னல்களுக்குள்ளாகும் அப்பாவி ஈழத்தமிழர்கள் பற்றி கவலைப்படுவோரின் எண்ணிக்கையே கணிசமாகக் குறைந்துவிட்டது. "இவர்களுக்கு வேறு வேலையென்ன, சண்டை போட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்!" என்பதுதான் பரவலான கருத்து.

ஆண்டுக்கணக்கில் அகதிமுகாம்களில் வாழும் ஈழத்தமிழர்களும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜெயலலிதா அட்சிக் காலத்தின் போது நடந்தது போலலாது, இப்போது அகதிகள் துன்புறுத்தப்படுவதில்லை. அலைக்கழிக்கப்படுவதில்லை. விரோதிகள் போல பார்க்கப்படுவதில்லை. ஆயினும் அகதிகள் முகாம்களிலுள்ள அவல நிலை பற்றியோ, போராளிக் குழுக்களுடன் தொடர்பிருப்பதாக சந்தேகிக்கப்பட்டு, சிறைகளை விட கெடுபிடி அதிகமாக உள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் நபர்களின் எதிர்காலம் பற்றியோ யாரும் பேசுவதில்லை. அவர்களுக்காக போராடுவதில்லை.

ஒரு பக்கம் விடுதலைப் புலிகள் பூச்சாண்டி காட்டுவோர், இன்னொரு புறம் விடுதலைப்புலிகளே உலக மகா உத்தமர்கள் வீரர்கள் என்ற ரீதியில் பேசும் தீவிரவாதக் குழுக்கள். விளைவு, ஈழத் தமிழர் பிரச்சனையின் உண்மை நிலவரம், அந்த நாட்டிலும் இங்கும்தொடரும் மனித உரிமை மீறல்கள் எல்லாம், அடிபட்டுப்போகின்றன.

★★★

பிந்திக் கிடைத்த செய்தி

ஈழவேந்தன் நாடு கடத்தப்பட்ட செய்தி.மு.தி.மு.க.த்தலைவர் வை.கோபால சாமிக்கு முதலில் தெரிந்திருக்கவில்லை. புதுடில்லி சென்ற வை.கோ. அவர்கள், ஈழவேந்தன் நாடு கடத்தப்பட்டதை அறிந்து உடனடியாக பிரதமர் வாஜ்பேயி அவர்களைச் சந்தித்து, இந்த நாடு கடத்தல் விரும்பத்தகாத செயல என்றும் இந்திய அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் சம்பவம் என்றும் விளக்கியிருக்கிறார்.

இதனைத் தொடர்ந்து பிரதமர், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடனடியாகப் பரிகாரம் தேடும்படி வற்புறுத்தியிருக்கிறார்.

அமைச்சர் சிங், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கை அரசாங்கத்தால் அல்லது வேறு பேரினவாதிகளால் ஈழவேந்தனுக்கு எத்தகையதுன்பமும் நேராது பார்த்துக் கொள்ளுமாறு பணிந்துள்ளார்.

இந்தச் செய்தி இலண்டனிலுள்ள தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திப் பிரிவினால் முரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. ■

பார்த்தேன்...! எழுதுகிறேன்...!

அம்பும் வில்லும் கொண்டு ஆட்சிக்கு வரத் துடித்தவர்களின் அட்டகாசம் மீண்டும் ஆரம்பித்துவிட்டது. நோர்வே மட்டுமல்ல எந்த வல்லரசு தலையிட்டாலும் எதிர்ப்பைக் காட்டுவோம் என மீண்டும் உறுமல்.

சிஹல உறுமயவைத்தான் குறிப்பிடுகின்றேன்.

இனவாத நெருப்பிற்கு எண்ணை ஊற்றுவதே எம்பணி என செயல்படும் இவர்களின் அண்மைய செயல்கள் இலங்கையில் இன்னமும் டைனோசர்கள் வாழும் சந்தேகத்தை பிரித்தானிய அமைச்சருக்கு ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் உள்நாட்டுவிடயத்தில் எந்தநாடு தலையிட்டாலும் எதிர்ப்பதாக கூறும் இவர்களது சின்னம் மட்டுமல்ல, சிந்தனையும் உலக நடப்பை அறியாத காட்டுவாசிகளின் செயலாகவே பார்க்கிறேன்.

இலங்கையின் இனப்பிரச்சனை உள்நாட்டு பிரச்சனை என்றால் அகதிகளாக உலக நாடுகளில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சனையை என்னவென்பது.

இதுவெறும் உள்நாட்டுப் பிரச்சனை என்றால் அண்டை நாட்டில் திம்புவில் நடந்த அரச-போராளிகள் பேச்சுவார்த்தையில் சிஹல உறுமயவின் ஸ்தாபக தலைவர் எஸ்.எல்.குணசேகரா கலந்து பேசியது என்ன ஏற்றுமதி வியாபாரமா?

அடித்து விரட்டப்பட்ட தமிழர்கள் புகலிடம் தேடிய நாடுகளின் அகதிப் பிரச்சனை என்ன அவர்களது உள்நாட்டுப் பிரச்சனையா? இது கூடத் தெரியாத சுத்த ஞான சூனியங்களா இவர்கள்?

எந்த வல்லரசு வந்தாலும் எதிர்ப்போம் என்பவர்களுக்கு ஜே.ஆர்.ஜயவர்த்தனா படித்த பாடம் மறந்துவிட்டதா?

போர் என்றால் போர் என முழக்கமிட்டு எம்.ஜி.ஆர். முதல் இந்திரா காந்தி வரை விமர்சித்து, அமெரிக்காவும் இஸ்ரவேலும் கொடுத்த ஆதரவில் ஆடியவர் இந்திய ஆகாய விமானங்கள் அத்துமீறி பிரவேசிக்க அடங்கிப் போய் ஒப்பந்தம் செய்யவில்லையா?

ஜே.ஆர்.காலத்தில் எழாத எதிர்ப்பு கோஷங்களா; எரிக்காத கொடும்பாவிகளா?

சமாதான ஏற்பாட்டாளர் சொல்ஹெய்மின் கொடும்பாவியை எரித்து தம் வீரவிளையாட்டை காட்டியுள்ளனர் சிஹல உறுமயவினர்.

நோர்வே ஒரு நல்லநாடு. யாரோடும் நோகாத நாடு. அவர்கள் இந்த நிகழ்ச்சி பற்றி எந்த மனக்கசப்பையும் காட்டவில்லை. ஆனால் இந்த நாட்டை 400 ஆண்டுகளுக்கு மேல் ஆண்ட பிரித்தானியாவின் பிரதிநிதி இவர்களை விட்டுவைக்கவில்லை.

அதனால்தான் பத்திரிகையாளர் மாநாட்டில் "ஜூராசிக் காலத்தில் வாழ்ந்து அழிந்துபோன டைனோசர்கள் போன்று இலங்கை அரசியலிலும் சில டைனோசர்கள் உள்ளனர்" என பீற்றர் ஹெய்னிடம் வாங்கிக்கட்டினார்கள்.

புலிகளை அழித்துவிட்டால் அனைத்து பிரச்சனையும் தீர்ந்துவிடும் என கூறும் உலக அரசியல் அரிச்சுவடி கூட தெரியாத இந்த அறிவிலிகள் வெறும் பாராளுமன்ற கதிரை சுகத்திற்காக தலைவருக்கே காலை வாரியவர்கள் என்பதை முழுநாடும் அறியும்.

~குத்தியன்~

தொடரும் யுத்தத்தால் அழிந்து போவது தமிழர்களும் அவர்களது சொத்துக்களும் மட்டுமல்ல, கிராமப்புற அப்பாவி சிங்கள இளைஞர்களும், இந்த நாட்டின் பொருளாதாரமும் தான் என்பதை இவர்கள் ஏன் எண்ணிப்பார்ப்பதில்லை.

கிராமத்து இளைஞர்கள் இராணுவத்தில் இணைந்து புலிபிடிக்கப் போய் பலியாவதால் தாம் வயோதிப காலத்திலும் கொழுத்தும் வெயிலில் வயல் காட்டில் கஷ்டப்படும் பெற்றோரைப்பற்றிய எந்த சிந்தனையுமின்றி தான் மட்டும் கோட்டு சூட்டுடன் சொகுசுவாகனத்தில் ஏ.சீ குளிரில் பாராளுமன்றம் போய் வரும் அதன் தலைவருக்கு உறுமல் வெறும் பொழுதுபோக்கா?

சொந்தச் சகோதரங்கள் செத்து மடிதல் கண்டும் சிந்தை இரங்காத இவர்கள் பதவி சுக பிரியர்களே. இனத்தை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்பவர்கள். வாய்ச்சவடால் வீரர்கள்.

இனப்பிரச்சனையை வெறுமனே உள்நாட்டு பிரச்சனை எனக் கூறி கொடி பிடித்து, கொடும்பாவி எரிக்கும் இவர்களுக்கு உலகவரலாற்றில் உள்நாட்டு யுத்தம் என்ற பெயரில் நடந்த மனித உரிமை மீறல்களால் கொதித்தெழுந்த உலக நாடுகளின் பொருளாதாரத்தடை உட்பட பலநேரடி தலையீடுகளுக்கு முகம் கொடுத்து தம் வாலை சுருட்டிய நாடுகளின் சரித்திரம் தெரியாதா?

சமாதான ஏற்பாட்டாளர் ஏதோ கத்தியோடு கேக் வெட்ட வந்தவர் போல, நாட்டை துண்டாடப் போகிறார் என கோஷம் போடுவதுதான் வேடிக்கையானது.

கடந்த பாராளுமன்றத்தில் ஓர் ஆசனம் மட்டும் வைத்திருந்த ஜே.வி.பி. இம்முறை 10 ஆசனங்களை பெறுவதற்கு காரணமாக அமைந்த வழிமுறைகளை தாமும் கையாண்டால் இம்முறை குருடன் பெண்டிலுக்கு அடித்ததுபோல் கிடைத்த ஓர் ஆசனத்தை பத்து ஆசனமாக்கலாம் என்ற கதிரைக் கனவில் சொந்த நாட்டை கொடூரயுத்தம் சூறையாடினாலும், பாராளுமன்ற சுகம் தொடரவேண்டும் என்ற சுயநல போக்கே இந்த உலகை எதிர்க்கும் உக்கிரதாண்டவம்.

தங்கள் உண்மையான நிலை, தரம், தராதரம் என்பன நன்கு அறிந்துதான் எத்தனையோ சின்னங்கள் இருக்க அம்பையும் வில்லையும் தெரிவு செய்துள்ளார்கள்.

காட்டுவாசிகள் வேட்டைப்பிரியர்கள்தானே. அதனால் தான் கோட்டு சூட்டுபோட்டும் கோவணப்புத்தி மாறவில்லை. ■

இலங்கைக் கடற்படைக்கு இந்தியக் கப்பல் சயுரா!

இலங்கைக் கடற்படை தனது ஐம்பதாவது ஆண்டைக் கடந்த வாரம் பூர்த்தி செய்திருந்தது.

இந்த ஐம்பது ஆண்டுகாலப் பூர்த்தியை முன்னிட்டு இலங்கைக் கடற்படை புதிதாக மூன்று கப்பல்களை சேவையிலீடுபடுத்தியிருந்தது. இம் மூன்று கப்பல்களில் பெரிதான அமைப்பைக் கொண்ட 'சயுரா' என்ற கப்பல் இந்தியாவிடமிருந்து வாங்கப்பட்டதாகும். ஏனைய இரு கப்பல்களும் இஸ்ரேலிடமிருந்து பெறப்பட்டிருந்தன.

இலங்கையில் ஒரு முடிவைக்காணாது தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தில் முப்படைகளுமே முழு அளவில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

ஒரு தீவிரவாத அமைப்புக்கெதிராக முப்படைகளையும் முழுஅளவில் ஈடுபடுத்தியுள்ள ஒரேயொரு நாடு உலகில் இலங்கை மட்டுமே என்பதைக் குறிப்பிடமுடியும்.

இதன் மூலம் இலங்கையின் முப்படைகளும் எதிர்கொண்டுவரும் தீவிரவாத அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஒருபலம் மிக்க நிலையில் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் இராணுவம் கடந்த ஆண்டில் அதன் 50வது வயதைப் பூர்த்தி செய்திருந்தது. இதன் பின்னர் கடற்படை தனது 50வது ஆண்டை தற்போது பூர்த்தி செய்துள்ளது.

இலங்கையின் வடக்கு-கிழக்கு யுத்தம் சூடுபிடிக்கும் வரை இலங்கையின் முப்படைகளுமே சிறியளவிலேயே இருந்து வந்தன. ஆட்பலம் மட்டுமல்ல; ஆயுத தளபாடங்களின் தொகைகூட சிறியளவிலேயே இருந்துவந்தது.

ஆனால் வடக்கு-கிழக்கு யுத்தம் ஆரம்பித்ததையடுத்தே இலங்கையில் கடந்த 17 வருடகாலமாகப் பெரும் ஆயுதப் போட்டி புலிகளுக்கும், இலங்கை ஆயுதப் படைகளுக்குமிடையே நிலவுவதைக் காணமுடிகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவ்வியக்கம் பெருந்தொகையான நவீனரக ஆயுதங்களை இலங்கையின் ஆயுதப்படைகளுக்கு நிகரானமுறையில் கொண்டுள்ளது.

சில சமயங்களில் புலிகளிடம் நவீன ஆயுதங்கள் இருப்பதை அறிந்து கொண்ட பின்னரே இராணுவத்தரப்புக்கும் அந்த ஆயுதங்களையொத்தவை, அல்லது அவற்றை விடத் தரமானவை வாங்கப்படுகின்றன என்று இராணுவ அவதானிகள் கருத்து வெளியிடுவதையும் அறியமுடியும்.

உலகின் பல்வேறுநாடுகளிலும் பிரிவினைப் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தியா, வடஅயர்லாந்து, பாலஸ்தீனம், இந்தோனேஷியா எனப் பல்வேறு நாடுகளிலும் ஆயுதமேந்திய தீவிரவாதப் போராட்டம் நடந்து வருகின்றது. இருந்தபோதிலும் இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகளே உலகில் மிகவும் பலம் வாய்ந்த நவீனரக ஆயுத தளபாடங்களைக் கொண்டிருக்கும் ஒரு தீவிரவாத அமைப்பாக இருப்பதாகவே சர்வதேச சமூகம் தனது அபிப்பிராயத்தை வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பலம் என்பது வெறுமனே தரையில் இராணுவத்தினரை மட்டும் எதிர் கொள்வதாக இருக்கவில்லை. கடலில் கடற்படையினரையும், ஆகாயத்தில் விமானப்படையினரையும் எதிர்ப்பதாகவே புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

கடந்த இருபது வருடகால வடக்கு-கிழக்கு யுத்தத்தில் இராணுவத்தினர் தரப்பில் உயிர்ச்சேதங்களை ஏற்படுத்தியும் அவர்களது ஆயுத தளபாடங்களைக் கைப்பற்றியும், தாக்கியழித்துமே புலிகள் போரைத் தொடருகின்றனர்.

இராணுவத்தினருக்கு மட்டுமல்ல. விமானப்படை, கடற்படை என்பவற்றுக்குக் கூட பெருமளவு சேதங்கள் புலிகளினால் ஏற்படுத்தப்பட்டிருப்பதையே காணமுடிகின்றது.

வடக்கு-கிழக்குக் கடல் பிரதேசங்களில் பல்வேறு ரகத்திலுமான கடற்படைக்கப்பல்கள் புலிகளின் தாக்குதல்களினால் முழ்கடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் இலங்கைக் கடற்படையின் தளபதியாகவிருந்த கிளென்லி பெர்னாண்டோ என்பவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த தற்கொலைக் குண்டுதாரி ஒருவரினால் கொல்லப்பட்டிருந்தார்.

1995ம் ஆண்டு திருகோணமலைக் கடற்படைத்துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த இரு பீரங்கிக் கப்பல்களைப் புலிகள் தாக்கியதையடுத்தே சந்திரிகா அரசுக்கும் புலிகளுக்குமிடையே மோதல்கள் வெடிக்க ஆரம்பித்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே முப்படைகளுமே போதுமானளவு ஆயுத தளபாடங்கள், கப்பல்கள், விமானங்கள் என்பவற்றுடன் புலிகளை எதிர்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தமே இராணுவத்தரப்பில் காணப்படுகின்றது.

இலங்கைக்கு இதுவரைகாலமும், இஸ்ரேல், சீனா, தென்னாபிரிக்கா, ரஷ்யா, செக், மற்றும் ஸ்லோவாக்கியா ஆகிய நாடுகளே ஆயுத தளபாடங்களை விற்பனை செய்து வரும் முக்கிய நாடுகளாக இருந்து வந்தன.

இந்த நாடுகளின் பட்டியலில் தற்போது இந்தியாவும் இலங்கைக்கு இராணுவத் தளபாடங்களை வழங்கும் ஒரு நாடாக மாறியிருப்பதையே இலங்கை கடற்படை புதிதாகப்பெற்றுள்ள 'சயுரா' என்ற கப்பல் புலப்படுத்துவதாக இருக்கிறது.

இந்தியாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள 'சயுரா' என்ற கப்பல் இலங்கைக்குப் புதிதானதாக இருக்கலாம். ஆனால் அக்கப்பல் இந்தியக் கடற்படையினால் ஏற்கனவே பாவிக்கப்பட்டதொன்றென்பது குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும் 'சயுரா' கப்பலின் வருகையோடு இலங்கைக் கடற்படை தனது விமானப் பிரிவையும் முதல் தடவையாக ஆரம்பித்துள்ளதையே அறியமுடிகின்றது.

140 கடற்படைச் சிப்பந்திகளைக் கொண்டிருக்கக் கூடிய 'சயுரா' கப்பலின் பின்புறத்தே ஹெலிகாப்டர் விமான மொன்றையும் நிறுத்தி வைக்கக் கூடிய வசதி காணப்படுகின்றது.

அத்துடன் இலங்கை இதுவரை காலமும் வாங்கிய கப்பல்களில் பெரிதானதாகவும் இந்த இந்தியக் கப்பலான 'சயுரா'வே விளங்குகின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கைக்கு இந்தியா இராணுவ ரீதியாக உதவியளிப்பது இது முதல் தடவையல்ல. ஏற்கனவே பலதடவைகள் இந்தியா ஜீப்வண்டிகள், மற்றும் ட்ரக் வண்டிகள் போன்றவற்றை இலங்கைக்கு விற்பனை செய்திருந்தது. தற்போது முதல் தடவையாக கடற்படைக்குக் கப்பலொன்றை இந்தியா விற்றுள்ளது.

இந்தியா அண்மைக் காலங்களில் தனது இராணுவத் தளபாட உற்பத்திகளை அதிகரித்தேயிருக்கின்றது.

இந்திய இராணுவம் உலகில் நான்காவது தரத்தில் இருக்கின்றது. இந்தியாவின் மேற்கே பாகிஸ்தானிடமிருந்தும், கிழக்கே சீனாவிடமிருந்தும் இந்தியா சிறிய ரக மற்றும், கனரக ஆயுதங்களை கடந்த பல காலமாகவே இந்தியா சுயமாகத் தயாரித்து வருகின்றது.

வெறுமனே துப்பாக்கிகள், பீரங்கிகள் என்பவற்றை மட்டுமல்ல. யுத்த டாங்கிகள், கவச வாகனங்கள், நெடுந்தூர ஏவுகணைகள் என்பவற்றையும் இந்தியா தயாரித்தே வருகின்றது.

இராணுவ நடவடிக்கைகளுக்குத் தேவையான ஹெலிக்காப்டர்கள் கூட இந்தியாவில் தயாராகின்றன.

இவ்வாறு தனது ஆயுத தளபாட உற்பத்திகளை மேற்கொண்டுவரும் இந்தியா சுயமாகவே நீர் மூழ்கிக் கப்பல்கள், மற்றும் கடற்படைக்கப்பல்கள் என்பவற்றையும் தயாரிக்க ஆரம்பித்துள்ளதென்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இலங்கையில் நீடிதது செல்லும் வடக்கு-கிழக்கு யுத்தம் இந்தியாவையும் ஒரு முக்கிய ஆயுத விற்பனையாளனாக மாற்றியுள்ளதையே அவதானிக்க முடிகின்றது.

1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதையடுத்து இலங்கையின் வடக்கு-கிழக்குப்பகுதியில் அந்த ஒப்பந்தத்தை அமுலாக்க இந்தியா இராணுவத்தை அனுப்பிவைத்திருந்தது.

இந்தியாவின் இந்த இராணுவ ரீதியிலான நடவடிக்கை, 1971ம் ஆண்டு பாகிஸ்தானுடன் இந்தியா நடத்திய போருக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலாவது இராணுவ நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனையைப் பொறுத்தவரை இந்தியா ஒரு முக்கிய சக்தியாகவே இருக்கின்றது. இலங்கையின் வடக்கு கிழக்குத் தமிழ் அரசியல் வட்டாரம் மட்டுமல்ல. இலங்கை அரசாங்கமும் இந்தியாவின் உதவி ஒத்தாசைகளை வடக்கு கிழக்குப் பிரச்சனை தொடர்பாக எதிர்பார்க்கின்றது. அத்துடன் இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வில் அக்கறை காட்டும் சர்வதேச சமூகமும் இந்தியாவை அனுசரித்தே இலங்கையின் மீது தனது கண்ணோட்டத்தைச் செலுத்துகின்றது.

அண்மைக் காலங்களில் இலங்கை இனப்பிரச்சனைத்தீர்வு தொடர்பாக சர்வதேச சமூகத்திடமிருந்து நிறையவே கரிசனை வெளியிடப்பட்டு வருகின்றது.

இலங்கை இனப்பிரச்சனைக்கான சமரச அச்சுறுத்தல்களை எதிர் நோக்கியிருக்கின்றது.

இந்த இரு நாடுகளுடனும் இந்தியா போரிட்டுமுள்ளது. அண்மையில் இந்தியா கார்கில் மலைச்சாரல் சார்சை தொடர்பாக பாகிஸ்தானுடன் மோதலில் குதித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இந்திய இராணுவம் எப்போதுமே மிகுந்த பலத்துடனிருக்கவேண்டிய நிலை காணப்படுவதுடன், இடையறாது ஆயுத்தளபாட உற்பத்திகளில் ஈடுபட வேண்டிய அவசியமும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி தமிழீழவிடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரனைக் கைது செய்யும் எண்ணத்தை இந்தியா கைவிடவில்லை எனக் கூறியிருந்தார்.

இலங்கை இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக அரசியல் ரீதியான அணுகுமுறைகளை ஆதரித்து வந்த இந்தியா தற்போது இராணுவ அணுகுமுறைகளுக்குத் தூபம் போடத் தொடங்கியுள்ளதையே 'சயுரா' கப்பலை இலங்கைக்கு விற்றுள்ள நடவடிக்கை புலப்படுத்துவதாக இருக்கின்றது.

இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வு முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயும் ஒரு முக்கிய இராணுவ பலம் கொண்ட நாடென்பது குறிப்பிடத்தக்கது.

பூகோளத்தின் வடகடல் பகுதியில் நோர்வே பலம் மிக்க ஒரு இராணுவ சக்தியாகவே இருந்து வருகின்றது. இராணுவ சாதனங்கள், ஆயுதத் தளபாடங்கள் என்பவற்றை நோர்வேயும் தயாரித்தே வருக்கின்றது.

இருந்த போதிலும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நாட்டுக்கு ஆயுதத் தளபாடங்களை விற்பனை செய்வதையோ அல்லது இராணுவ ரீதியிலான உதவிகளை வழங்குவதையோ நோர்வேயின் அரசியலமைப்பு அனுமதிப்பதாக இல்லை.

உலக சமாதானம் என்ற ரீதியில் நோர்வே இராணுவ தளபாடங்களை யுத்தத்திலீடுபட்டுள்ள நாடுகளுக்கு வழங்குவதைத் தவிர்த்தேயிருக்கின்றதென்பதையே அந்நாட்டின் இராஜதந்திர வட்டாரங்கள் மூலமாக அறிய முடிகின்றது.

இருநாடுகள் தம்மிடையே இராணுவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் ஒத்துழைப்புக்களைக் கொண்டிருப்பதற்குப் பூரண உரிமை கொண்டுள்ளன.

ஆயினும் இராணுவ நடவடிக்கைகளைப் பொறுத்தவரை காலமறிந்து, களமறிந்து, வல்லரசுப்பலத்தைக் கொண்டிருக்கும் நாடுகள் நிதானமாகச் செயற்படவேண்டியதே அவசியமானதாகின்றது.

இலங்கைக்கு இந்தியா கப்பல்களை விற்பனை செய்யலாம். காலப்போக்கில் விமானங்கள், ஏவுகணைகள், என்பவற்றைக்கூட வழங்கலாம். இதன் மூலம் இந்தியாவின் ஆயுத தளபாட விற்பனைக்கான சாதகமான சூழ்நிலை இலங்கையில் நாளுக்குநாள் அதிகரித்துச் செல்வதாகவே இருக்கும்.

ஆனால் இலங்கை இதனால் ஒரு யுத்தபூமியாகத் தொடர்ந்து இருந்து வருமே தவிர அமைதி, சமாதானம் என்பவை எவ்விதத்திலும் தோற்றம் பெறமாட்டா.

இந்நிலையில் இந்தியா இலங்கைக்குக் கத்தியைத் தீட்ட உதவி வழங்குவதைவிட அரசியல் ரீதியாகப் புத்தியைத் தீட்ட உதவ வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

அதிரடி அய்யாத்துரை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறை விரிவாக்கப்படவுள்ளதாம். இனங் காணப்படாத சடலங்களை பல நாட்களுக்கு வைத்திருக்க வேண்டிய அவசியம் உணரப்பட்டிருப் பதாலேயே இந்த நடவடிக்கையாம். உயிரிழப்புகளைத் தடுக்க வழி பார்க்காமல் சடலங்களை பாது காத்து வைச்சாப் போல ஆறுதல் கிடைச்சிடுமோ?

கூட்டணிக்காரர்களில் ஒருவருக்கு வரவேற்பு வைக்க, கோபப்பட்ட மற்றவர் சட்டைக் கொலரைப் பிடித்துக் கோபக் கனல் கக்கினாராம். மாலை போடுறதுக்காக கழுத்தை நீட்டின சங்கதி கொலரைப் பிடிச்ச லிங்கத்தால சங்கடப்பட்டுப் போச்சாம்.

இந்த நூற்றாண்டின் மாமனிதர் அகிம்சாமூர்த்தி மகாத்மா காந்தி. அவரை நேரில் சந்திக்காத குறை அவரது பேரனான அயலகத் தூதுவரைச் சந்தித்ததால் நீங்கிப் போச்சு. தூதுவரகத்திற்கு படியேறிப் போன செல்வமானவரோடை போனவர் எடுத்து விட்டாராம். உச்சி வெயிலுக்குள்ளால எப்படி இவ்வளவு "ஜஸை" அள்ளிக்கொண்டு வந்தியள் எண்டு மலைச்சே போனாராம் அயலகத்தின் காந்தி.

ராஜகிரியவிலிருந்து கோட்டேயுக்கு மாட்டுவண்டியில் போன விசயத்தைப் பாராத மறமாய் போச்சு பாராளுமன்றம். ஈஸ் வரனார் புலம்புரார். காரைநகரிலிருந்து காலி வரைக்கும் காரில் போகப் போறதாய் சொன்னவர் அப்படியே திரும்பி மாட்டுவண்டியில் வவுனியாவுக்கு அங்கால போய்ப் பார்த்தால் நல்லதாய் இருக்கும் எண்ணுகினம் ஊராக்கள்.

லங்கா முதித்த போய் வருகுது. சிற்றி ஒப்-டிரிங்கோ மட்டும் காலநிலை சரிமில்லையாம். அது இயற்கையின் விளை யாட்டில்லை. அரசியல் காலநிலை தான் காரணமாம். பருத்தித்துறை வரைக்கும் போக பச்சைக் கொடி காட்டுறவை காங்கேசன்துறைக்கு போக ஒ.கே. சொல்லேல்லையாம். பருத்தித்துறையில் பாக் கரைக்கு போக அலையடிக்குது. ஐ.சி.ஆர்.சி.யால் ஒயாத அலையைக் கட்டுப்படுத்த ஏலாமல் கிடக்கு.

காங்கேசன் துறையில் சனம் துறைமுகத்தில் கப்பலால நேர இறங்கிப் போகுது. கூடவே சீருடைக்காரரும். என்னது பயணியளோட படையினரும் எண்டு கேட்டினம். "இது எங்களுக்குரிய சேவை. சனம் பாவமெண்டு மனம் இரங்கினால் எங்களையே கேள்வி கேக்கிறியளோ? எங்கடை நாடு, எங்கடை மக்கள், எங்கடை சேவை. பாதுகாப்புக்குத் தான் முதலிடம். குரல் தரவல்ல சீருடை அதிகாரியின் விசய விளக்கம்.

திகில் தொடர்

யோகேஷ் நம்ப முடியாதவனாக மூக்கை தேய்த்தான். பேயாவது... ஏவுதாவது... இந்த கம்ப்யூட்டர் யுகத்தில் இப்படியும் நடக்குமா?

யோசித்தான்.

ஏரிக்கரையில் ஹீரோயின் ரத்னாவின் இடுப்பை வளைத்தபடி பாடி, ஆடிக் கொண்டே கரையில் புரண்டதையும், அப்போது ரத்னா திடீரென்று அலறி, அவனை விடாப்பிடியாக பிடித்து ஏரியில் விழுந்து மூழ்கியதையும், தான் அவர்களைக் காப்பாற்ற எடுத்துக் கொண்ட முயற்சிகளையும் நினைத்துப் பார்த்தான்.

"இப்போது சொல் வாட்ச்மேன்! தீர்த்தகிரி என்று சொன்னாயே அது யார்?"

வாட்ச்மேன் சம்பூர்ண் தலையை உயர்த்தி மேலே பார்த்தான்.

லஸ்தர் விளக்குகளின் குவியல் தொங்கிக் கொண்டிருந்தது.

திடீரென்று இனம் காணமுடியாத ஓர் அகோர முகம் லஸ்தர் விளக்குகளின் மத்தியில் தோன்றி, அசிங்கமாகக் கண்ணடிப்பது போல் தெரிந்தது.

மனித முகமான ஆண் பெண் இனமா அல்லது ஏராள முடிகளுடன் தலையில் ஒற்றைக் கொம்பு முளைத்த பண்டைக்கால மிருகமா என்பதை அவனால் அனுமானிக்க முடியவில்லை.

ஆண் சிங்கத்தின் தலை போலவும் இருந்தது. கரடி தலை போலவும் தெரிந்தது.

அது இன்னதாக இருக்கக் கூடுமோ என்று யூகித்த போதே முகத்திலும், கழுத்தோரமாகவும் வியர்வை வழிந்தது.

தன்னையும் அறியாத ஒரு வித நடுக்கத்தோடு 'புஸ் புஸ்' என்று மூச்சிறைக்க பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய முகம் திடீரென்று விகார மடைவதையும், பெருச்சாளி போல் மூச்சிறைப்பதையும் கவனித்த யோகேஷ் 'தாத்தா' என்று கூறி தோளைத் தொட்டு உலுக்கியதும், அவன் பதறிப் போய் நடு நடுங்கினான்.

கையை மேலே உயர்த்தி "அ... அதோ நோக்கணும்... ரத்தக் காட்டேரியின்ட முகம்," என்று தவித்தான்.

"அ... அங்ஙனே கண்டோ... லஸ்தர் லேம்பை நோக்கணும்."

அவன் மேலும் மேலும் தவித்துத் தத்தளித்து தடுமாறவே யோகேஷ் அவன் சுட்டிக் காட்டிய லஸ்தர் விளக்குகளைப் பார்த்தான்.

பல நூதன வேலைப்பாடுகளுடன் கூடிய கொத்து விளக்குகள் அங்கே தொங்கிக் கொண்டிருந்தன.

ஆனால், வாட்ச்மேன் மிரண்டு, பயந்து நடுங்குவதற்கேற்ப அச்சமூட்டும் எதுவுமே அங்கே தென்படவில்லை.

"எதுவும் இல்லையே..." என்ற யோகேஷை, கிழவன் ஏறஇறங்கப் பார்த்தான்.

"உங்களுக்கு பார்வையில் தெற்று உண்டோ... அதோ பேய் முகம். இன்னிக்கி பவுர்ணமி என்கிறதினால அது வந்துட்டுது."

"எதுவுமே வரவில்லை. வீணாக பைத்தியம் போல் பிதற்றாதே!"

"நான் பைத்தியம் இல்லே தம்பி... ம்... இப்போது எனிக்கு அது தெரியல... எச்சரிக்கை காட்டி விட்டு அது மாயமாக மறைஞ்சு போயிட்டுது."

கிழவன் சொல்லி விட்டு, முகத்தை இயல்பான நிலைக்குக் கொண்டு வர முயன்றான்.

"கள்ளம் வேண்டாம் என்றே பொன்னு தம்பி... நான் விழித்துக் கொண்டிருக்கும் போதே எனக்கு கெட்ட சொப்பனங்களா வருது... அதோ நோக்கு... சுடுகாட்டில் யாரோ ஒலம் போட்டு அழுது... கேட்குதா?"

"இல்லையே...."

"நீண்டே காது செவிடோ?"

"காதும் செவிடு இல்லை! கண்களும் குருடு இல்லே..."

"பின்ன நான் கேட்கும் கூட்டு ஒப்பாரிச் சப்தம்!"

"கிழவனாரே... இது ஒரு பிரம்மாண்டமான ஹால் இடையிடையே தூண்கள் இருகிறதனால நாம் பேசும் போது எதிரொலி கேட்கிறது!"

கிழவன் பலமாக கைகளை ஆட்டி மறுத்தான். "இல்லவே இல்லா... அவ்விடம் நோக்கு"

"எவ்விடம்!"

"அதோ சுவரில் மாட்டப்பட்டுள்ள அந்த படம்...."

பார்த்தான்....

பிரமமண்டமான அளவில் ஒரு குறுநில மன்னரின் ஓவியம் நூலம்படை பரவி, தூசடைந்து அதன் ஒளி குன்றிக் காணப்பட்டது.

குறுநில மன்னரின் கண்கள் இரண்டும் வெறித்துப் பார்த்த படியே பளிச்சென்று தெரிந்தன. கொத்தான மீசைக்குள் புன்னகைச் சிரிப்பு உறைந்திருந்தது.

"ஏதெங்கிலும் ஆ படத்திலே கண்டோ?"

"கண்டேன். நூறு ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு குறுநில மன்னர் பரம்பரை, படமாகி சிரித்துக் கொண்டிருக்கிறது."

"இப்போது பாருங்க...."

பார்த்தான் யோகேஷ். 'டக்' கென்று சுத்தியலால் நெஞ்சுக் கூட்டில் தட்டியது போல் அதிர்ந்தான்.

இங்கே மாய வித்தை ஏதாவது நடக்கிறதா? ஓவிய மனிதரின் கண்கள் இரண்டும் அமைதியாக மூடி இமைகள் சிப்பி போல் இடைவெளியின்றிப் பொருந்தியிருந்தன.

மீசைக்குள் தெரிந்த புன்சிரிப்பில் இப்போது எல்லா பற்களும் வரிசையாக தெரிந்தன.

'எப்படி இந்த மாயம்? தனக்கே எதுவும் ஆகியிருக்கிறதா?'

யோகேஷ் தன்னைத் தானே கேட்டுக் கொண்ட போதிலும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

நெற்றியில் அரும்பியிருந்த வியர்வை துளிகளை கர்சிப்பால் ஒற்றி எடுத்த யோகேஷ், பார்த்ததை அப்படியே கூறினான்.

"இது ஏதாவது மாஜிக் வித்தையா?"

"இல்லா.. ஏவல் சூனியவேலை... பைசாச சக்தி இவிடே கிறங்கி வருது.. மரிச்சுப் போன கொண்டல் ராஜாவின்டே கெட்ட ஆவியான ஆவி இன்னும் ஜீவிக்குது."

கிழவன் நடுக்கக் குரலில் சொன்னதை யோகேஷ் அலட்சியப்படுத்தவில்லை.

தீவிரமாக ஆராய்வது என்ற முடிவுக்கு வந்தான். ஏற்கனவே மூடியிருந்த டிடெக்டிவ் ஏஜன்சி மீண்டும் திறப்புவிழாவுக்கு அழைப்பது போல் இருந்தது.

இங்கே நிலவும் பயங்கரமான ஆவி நடமாட்டத்திற்கு நிரந்தரமான தீர்வு கண்டு பிடித்தே ஆக வேண்டும்.

"தாத்தா..."

அதே துப்பறியும் பாணி விசாரணை.

கிழவன் தோள்பட்டையை குலுக்கிக் கொண்டு பார்த்தான். ஒடுங்கி குழி விழுந்த கண்களில் ஒரு பாந்தம்.

"சொல்லுங்க தம்பி."

"ஆவியை நம்ப முடியவில்லை."

"நமபாமல் வேறு வழியேஇல்லை. இங்கே ஞான் சத்திய வாக்கு பறயின்னு... ஆவிக்கு மரிப்பு இல்லா... கொண்டல் ராஜாவின்டே ஆவியை ஒருத்தன் ஏவுறான், இன்று பவுர்ணமி! அதன் அட்டகாசம் கூடும். சினிமாகளிகாரன் மரிச்சதும், ஆ துஷ்ட ஆவியிண்டே வேலையாக்கும். இவ்விட மஞ்சள் கிழங்கு போல ஒரு குட்டி அதிண்டே பேரு... ஓர்மை யில்லா..."

"ரத்னா..." என்றான் யோகேஷ்.

"அதே... அதே... ஆ பெண் குட்டியை ஆவி பிடிச்சிருக்கு. அவ தேகத்தில ஜீவிக்குது... அதுதான் நீச்சம் பெற்று சினிமாகாரனையும் இழுத்துக் கொண்டு, ஏரி வெள்ளத்தில இழுத்துத் தள்ளி கொன்னு...."

கிழவன் சொல்லச் சொல்ல யோகேஷ் வியர்த்தான்.

(திகில் தொடரும்)

தீகில் கதை மன்னன் பி.டி.சாமி

பிறகு, சிறிது நேரம் சுவாசம் விட்டு ஆசுவாசப்படுத்திக் கொண்டு, "எனிக்கு என்றைக்குமே இல்லாத அளவுக்கு நெஞ்சு பகீர் பகீர்னு அடிச்சிக்குது. இன்னிக்கி பவுர்ணமி என்கிறதினால சகாலம் எனக்குத் தான் வந்திட்டுதோன்னு பேடியாகுன்னு... எழுத்துக்காரா... யாரோ விக்கான் சப்தம் கேட்குதோ?" என்று தடுமாறி எழுந்திருக்க முயன்று மறுபடியும் உட்கார்ந்தான்.

நின்று போயிருந்த வியர்வை மீண்டும் ஊற்றெடுத்து வழிய ஆரம்பித்தது.

கிழவனுக்கு ஏதோ ஆகிவிட்டது.

கிழவனுடைய வினோதமான பார்வையும், செயலும் யோகேஷை அப்படித்தான் நினைக்கத்தூண்டின.

திடீரென்று ஒரு சந்தேகம்... பேய் கிழவன் என்பார்களே... அது இவன் தானோ....?"

"பயப்படதே தாத்தா... யாருமே கூப்பிடவில்லை" என்றான் யோகேஷ்.

தத்துவம் பாடிய முத்தையா 6

டாக்டர்.சு.சண்முகசுந்தரம்



"தெய்வீகமான விஷயங்களை எழுதும்போது மிகுந்த லயம் உடம்பிலே ஒடும். தாலாட்டு எழுதும்போது ஒரு லயம் ஒடும். காதல் எழுதும்போது போதையும் உற்சாகமும் இருக்கும். ஆனால் சென்டிமென்ட் அதிகமாகத் தோன்றுவது தாலாட்டிலும் தெய்வீகத்திலும்தான். இந்த இரண்டிலும் எனக்குச் சமமான அளவுக்கு ஆசையும் வேறியும் உண்டு இரண்டிலேயும் நான் லயித்துப் போகிறேன். காரணம் குழந்தைகளிடத்தில் எனக்குப் பிரியம் அதிகம், அதுபோல் ஆண்டவனிடத்தில் பக்தி அதிகம்.

"தெய்வத்தைப் பற்றி எழுதும் போதும் அது என் ரத்தத்திலேயே ஊறிப் போமிருப்பதால் மெய் சிலிர்க்கிறது. திருவாசகம் போன்ற நூல்களைப் பலர் எழுதி வைத்திருப்பதால் வார்த்தைகள் சரமாரியாக வந்து விழுகின்றன. தாலாட்டு எங்க ஊர் தாய்மார்களிலிருந்து பலர் பாடிப்பாடிக் கேட்டு வந்த காரணத்தால் அதுவும் மனதிலே படிந்துவிட்ட ஒன்றாகி விடுகின்றது. இந்த இரண்டிலேயும் என்னை அதிகமாக லயிக்க வைப்பது தாலாட்டு, இரண்டாவது தெய்வீகம்", இன்பார் இவர்.

மாடர்ன் தியேட்டர்ஸுக்கு இவர் எழுதிய பாடலே இவருக்கு மிகவும் பிடித்ததாம்.

"நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி
நினைத்தால் எல்லாம் உனக்குள்ளே"

வேதாவின் இசையில் அமைந்த இப் பாடலை இவரே அடிக்கடி பாடுவதுண்டு.

"நான் எழுதிய முதல் பாட்டு, இப்போது படித்துப் பார்த்தால் மிகவும் சாதாரணமானதுதான். அதிலே ஒரு தெம்பு எற்பட அடுத்தடுத்து உற்சாகமாக எழுத முடிந்தது" என்றும் கூறியிருக்கிறார். திறமையுள்ளவனுக்கு வாய்ப்பு என்பது சீனிப்பட்டாசுமாதிரி. ஒரு முனைமில் தீப்பற்றினால் போதும், தொடர்ந்து வெடித்துக் கொண்டே இருக்கும். இவரும் தொடர்ந்து எழுதினார்.

"மெட்டுக்குப் பாட்டு எழுதுவது என்பது கிடுக்கிக்குள் சிக்கிக் கொண்ட எலி மாதிரிதான். சொல்ல வரும் விஷயத்தைச் சொல்ல முடியாது. பாடலுக்கு இலக்கணம் இருக்காது. படித்துப் பார்த்தால் வசனம் மாதிரி இருக்கும். அனாவசியமான வார்த்தை நீட்டல்கள் இருக்கும். சினிமாப் பாடல்களில் ஒரிஜினாலிட்டி இருக்கவும் இடமில்லை. சம்பவத்திற்கேற்ப பாடல்கள் தேவை. அவ்வளவுதான். டைரக்டர்களும் தயாரிப்பாளர்களும் சொல்கிறபடி எழுத வேண்டி இருக்கிறது." (சினிமா எக்ஸ்பிரஸ்: 15-4-81)

"இன்று பாட்டெழுதப் போய் உட்கார்ந்தால் காட்டுப் புறத்தில் கள்ளி பொறுக்கியவன் எல்லாம் பாட்டுக்கு விளக்கம் கேட்கிறான்" என்று வருத்தப்படுகிறார்.

"இன்று புதிதாகப் பாடல் எழுத வருகின்ற எல்லோருமே என்னுடைய வரிகளை வைத்துக்கொண்டே விளையாடுகிறார்கள். புதிய சிந்தனை, புதிய கண்ணோட்டமும் இல்லை. அவர்கள் குறை எல்லாம் நான் ஏற்கனவே அனைத்தையும் சொல்லி விட்டேன், என்பதுதான். ஆனால் ஒரே மாதிரி விஷயத்தைப் பல மாதிரி சொல்லலாம் என்பதை அவர்கள் மறந்து போகிறார்கள்"-இது கண்ணதாசன் கவலை.

"பாடல் 'கம்போஸிங்' நடக்கும்போது பலமுறை அவரைப் பார்த்திருக்கிறேன். அடடா! என்ன அற்புதமான காட்சி. அறை முழுவதும் பரப்பப்பட்ட மெத்தை; அவருக்காகச் சில திண்டுகள். ஒரு பாதுஷாவுக்குரிய கம்பீரத்தோடு கவிஞர் அதில் சாய்ந்திருப்பார். அவர் அருகில் ஆர்மோனியத்தில் விரல்களை வைத்தபடி எம்.எஸ்.விசுவநாதன். டைரக்டர் காட்சியை விளக்குவார். விசு உற்சாகத்தோடு மெட்டுப் போடத் தொடங்குவார். அடுத்தடுத்து புதுப்புது மெட்டுகள் வந்து கொண்டே இருக்கும். பொருத்தமான ஒன்றைத் தேர்வு செய்வார்கள். அதை மீண்டும் மீண்டும் வாசிப்பார் எம்.எஸ்.வி. கண்களை முடிய படி மோன நிலையில் அதைக் கேட்டுக் கொண்டிருப்பார் கவிஞர். திடீரென்று போதுமென்ற பாவனையில் கைகளைக் காட்டுவார் கவிஞர். இசை நீற்கும். கவிஞரின் தமிழ் கனிந்த உதடுகளில் இருந்து அருவியென வார்த்தைகள் வந்து கொண்டே இருக்கும். உதவியாளர்கள் அவற்றினைக் குறித்துக் கொள்வார்கள். சொல்லி முடித்ததும் போதுமா என்பது போல எம்.எஸ்.வி.யைப் பார்ப்பார். அவரோ பதில் சொல்லாமல் பல்லவியைப் பாடத் தொடங்கி விடுவார். அது ஒரு காவிய காலம்" என்பார் புரொபஸர் ராமு. கவிஞர் பாட்டெழுதும் அழகை வருணனை செய்கிறார்.

பிடித்தமான டிசைன்களில் புடவை வாங்க வந்திருக்கும் வாடிக்கையாளர் களைத் திருப்தி செய்வதற்காக வண்ணச் சேலைகள் பலவற்றைப் பீரோக்களில் இருந்து எடுத்துப் போட்டு மலைபோல குவித்து எதை வாங்குவது என்ற தவிப்பை-குழப்பத்தை, வாங்குபவர் மனதில் ஏற்படுத்துகின்ற திறம்பெற்ற ஜவுளிக்கடைக்காரரைப் போல் பெருந்தன்மையும் பேராற்றலும் பெற்றவர் கவிச் சக்கரவர்த்தி என்று கவிஞரின் திறமையை ஒருவர் வியப்பார்.

பாடலாசிரியர்களில் பலர் மழைக் காலத்தில் பறந்து வரும் ஈசல்களாக-வேடந்தாங்கல் சீசனுக்கு வருகை புரியும் வெளிநாட்டுப் பறவைகளாகக் காட்சி தருகின்றனர். ஆனால் இவர் மட்டும் திரைவானில் நிலையாக இடம் பெற்று திகழும் துருவ நட்சத்திரமாகச் சுடரொளி வீசிக கொண்டிருக்கிறார்.

"பெரும்பாலும் என்னுடைய எழுத்தைப் பொறுத்தவரை என் இஷ்டத்துக்குத்தான் விடறாங்க. சிலபேர் கொஞ்சம் அர்ரகண்டாகவும் அடிக்கடி வரிகளை மாத்துவாங்க. யார் திருத்தினாலும் நானும் ஒத்துக்கிடறது. தமக்கு இது கமர்ஷியல்தானே," என்கிறார் கவிஞர்.

"முடியும் முடாமலும், திறந்தும் திறக்காமலும் சொல்ற விஷயங்கள ஜனங்களுக்குப் புடிக்கிறது. நேரிலே பார்க்கும்போது ஓர் அர்த்தம் வரும். உள்ளே பிரிச்ச பார்க்கும்போது ஓர் அர்த்தம் வரும். அப்போது பார்க்கிறவனுக்கும் கேட்கிறவனுக்கும் கொஞ்சம் மூளைக்கு வேலையும் கிடைக்கும். குஷியாகவும் இருக்கும்" என்று தனது பாடல் பாணியை இவரே விளக்குகிறார்.

ஸ்ரீதரின் 'உரிமைக்குரல்' படத்திற்கு இவர், "விழியே கதையெழுது கண்ணீரில் எழுதாதே" என்று எழுதினார். அது, கவிஞருக்கும் எம்.ஜி.ஆர்.க்கும் ஆகாத நேரம், எனவே கவிஞர் வாலியின் பேரை போடச் சொன்னார். படப்பிடிப்பில் எம்.ஜி.ஆர். "இது கண்ணதாசன் வரிபோல இருக்கிறதே!" என்றார். உடனே ஸ்ரீதர் உண்மையை ஒப்புக் கொண்டார். அதற்கு எம்.ஜி.ஆர். வருத்தப்பட்டு வாலி பெயரை நீக்கச் சொல்லிவிட்டு, கண்ணதாசன் பெயரைப் போடச் சொன்னாராம். மறைந்தாலும் மறையாத மகிமை கண்ணதாசன் வரிகளுக்கு உண்டு என்பதை இது காட்டும்.

மற்றவர்களின் பாடல்களும் கண்ணதாசன் பேரில் வெளிவந்துள்ளன.

"பாட்டுப்பாட வாயெடுத்தேன்
-ஏலேலோ அது
பாதியிலே நின்னுபோச்சு ஏலேலோ"

பஞ்ச அருணாசலம் எழுதிய இந்தப் பாடலுக்குக் கண்ணதாசன் கையெழுத்துப் போட்டு பணமும் வாங்கி விட்டதாக பஞ்சவே சொன்னாராம்.

இவருக்கும் சில விசித்திரமான அனுபவங்கள் பாடல் எழுதும் போது ஏற்பட்டிருக்கின்றன. 'சிவகங்கைச் சீமை'யில்,

"குடை நிழலிலிருந்து குஞ்சரம்
-ஊர்ந்தோர்
நடை மெலிந்திங்கே நடக்கின்றார்"

என்ற பாடலை எழுதினார். ஆனால் அதில் இடம் பெறவில்லை. அதே மெட்டில் 'பாகப் பிரிவினை'யில்,

"தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும்
தரத்தினில் குறைவதுண்டோ"

என்று எழுதினாராம்.

இது போலவே பாரதி பிலிம்ஸ்க்காக எழுதிய "மண்ணில் வீழுந்தாலும் மடிமில் கிடந்தாலும் பொன்னின் நிறம் மாறுமா" என்ற பாடலை அதே மெட்டில் பாசமலருக்காக, "மலர்ந்தும் மலராதப் பாதி மலர்போல" என்று எழுதினாராம்.

'அம்பிகாபதி' படத்தில் பானுமதி ஒரு பாடலைப் பாடவேண்டும். பாட வந்தவரைப் பார்த்ததும் பாடல் திசை மாறிற்று. "பானுமதி மாறிவரும் வான கத்து மீனே பார்க்க உன்னைத் தேடுதடி கன்னி இளமானே" என்று எழுதி வைத்தார். பானுமதியும் மகிழ்ந்தார்.

வைஜயந்திமாலாவை 'பேபி' என்றுதான் (எம்.பி.அல்ல) திரை உலகத்தில் ஒரு காலத்தில செல்லமாக அழைத்து வந்தனர். 'தேனிலவில்' அவருக்காக ஒரு பாடல் எழுத வேண்டும். "ஓஹோ எந்தன் பேபி-நீ வாராய் எந்தன் பேபி" என்று 'டூயட்' எழுதினார். அவரோடு ஆடியவர் ஜெமினி கணேசன். அவருக்கோ 'காதல் மன்னன்' என்று பட்டம், அதே பாட்டில், "அதில் மன்னன் அல்லவா" என்று எழுதினாராம்.

(தொடரும்)

தகவல் பெட்டி

விண்ணில் பறந்த வண்ண பலூன்கள்

விழாக்கள், போட்டிகள் போன்ற வைபவங்கள் தொடங்கும் போது வண்ண வண்ண பலூன்களை கட்டி விண்ணில் பறக்க விடுவார்கள். இங்கே மனிதர்களை ஏற்றியபடி நூற்றுக்கணக்கான பலூன்கள் பறந்து கொண்டிருப்பது ஸ்பெயின் நாட்டின் ஒல்பேர்க் நகரத்தில். அண்மையில் 'கொடக்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஸ்பெயினில் நடைபெற்ற சர்வதேச பலூன் விழாவிலேயே பலூன்கள் பறக்க விடப்பட்டன.

நாய்களின் ஊர்வலம்

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் சமீபத்தில் ஜெர்மன், அமெரிக்கன் நாய்களின் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட பல நாய்கள் வினோதமான முறையில் சென்றன. இதில் அழகிய அலங்கார வண்டியொன்றை இழுத்துச் சென்ற நாய் ஒன்று பலரது கவனத்தையும் கவர்ந்தது.

ஊர்வலத்தில் அலங்கார வண்டியை இழுத்துச் செல்லும் நாய்க்கு அதைப் பூட்டி விடுகிறார் ஒரு பெண்மனி. அவர் வேறுயாரு மல்ல அந்த நாயின் உரிமையாளர் தான்.



சீன மங்கையரின் சாகசம்

ஒருவரின்மேல் ஒருவராக ஏறிநின்று இறப்பர் போல் வளைந்து, நெளிந்து சாகசம் புரியும் இந்தப் பெண்களுக்கு முள்ளந்தண்டு என்று ஒன்று இருக்கிறதா என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா?

அண்மையில் தென்கொரியாவில் உள்ள 'லோட்டே வேர்ல்ட் ஹொட்டலில் சீன மங்கையர் நடத்திய சாகசத்தின் ஒரு சிறு பதிவு தான் இது.

எந்தத் தலைக்கு எந்த உடல் சொந்தம் என்று உங்கள் தலையைப் பீய்த்துக் கொள்ளாதீர்கள்.

(பட உதவி: அஹமட் நியாஸ்-சியோல்)

மிகப் பெரிய பூசணிக்காய்

இராட்சத சைஸில் இருக்கும் இந்தப் பூசணிக்காய்தான் உலக சவால் கிண்ணத்தை வென்ற பூசணிக்காய் ஆகும். இதன் நிறை 940 இறாத்தல். இது 4 அடி 10 அங்குல உயரமும் 11 அடி 7 அங்குல சுற்றளவும் கொண்டது.

அமெரிக்காவின் ஒரிகன் நகரைச் சேர்ந்த கேர்க் மொம்பேர்ட் என்பவர் கலிஃபோர்னியாவில் நடைபெற்ற பூசணிக்காய் போட்டியில் வெற்றி பெற்றார்.

பூசணிக்காயின் ஒவ்வொரு இறாத்தலுக்கும் 5 டொலர் வீதம் மொத்தம் 4 ஆயிரத்து 700 டொலர் (நம்நாட்டுமதிப்பில் சுமார் 3 இலட்சத்து 76 ஆயிரம் ரூபா) பூசணிக்காயின் அருகிலிருக்கும் மொம் பேர்டிற்குக் கிடைத்தது.

காதோடு சொல்லுகிறோம்

நடிகராகியுள்ள இரண்டெழுத்து தாடிக்கார இயக்குநரை உடும்புப்பிடியாகப் பிடித்துக்கொண்டு விட்டாராம் 'கறுப்புக் கலரை விரும்பும் அந்த 'மா' நடிகை. படவாய்ப்புக்காக நடிகை பாதை மாறியதால் அவரைக் காதலித்து வந்த முன்றெழுத்து இளம் நாயகன் கடும் கோபத்தில் இருக்கிறாராம்.

நடித்தால் நாயகனாகத்தான் நடிப்பேன் என்று அடம் பிடித்த 'அரிவாள்' நடிகருக்கு ஒரு புதுப்படம் கூட வரவில்லையாம். இப்போது நடிக்கும் ஒரிரு படங்களும் விலைத்தனமான இரண்டாவது கதாநாயக வேடங்கள் தானாம். இதுவும் சரிவராவிட்டால் மறுபடியும் விலைவனாக நடிக்கத் தொடங்கிவிடப் போகிறாராம்.

கடலில் மலரும் மலர்கள் படத்தில் அறிமுகமாகும் உயரமான புதிய நடிகை அதில் நடிக்கும் முன்றெழுத்து கறுப்பு நடிகருடன் நெருக்கமாகி விட்டாராம். இதன் காரணமாக அந்த நடிகரின் வீட்டில் பெரும் புகம்பமே ஏற்பட்டிருக்கிறதாம்.

கலைத்தாவிலிருந்து வந்து தமிழில் நடித்துக் கொண்டிருக்கும் அந்த 'லட்சுமி' கரமான நடிகை, தனக்கு ஆன்யம் வைத்துவிட்டதாக 'தேவ' நடிகை மீது குற்றஞ்சுமத்தி வருகிறாராம். அந்த நடிகைக்குப் போட்டியாக குடும்பப்பாங்கான வேடங்களில் தான் நடித்து வருவதால் பொறாமைகாரணமாக 'தேவ' நடிகை இப்படிச் செய்து விட்டதாக எல்லாரிடமும் கூறி வருகிறாராம் இந்த நடிகை.

முரளி-ரம்பா இணையும் 'பாட்டுச்சத்தம் கேட்குதம்மா'

'தேசியகீதம்' தோல்விப்படத்தில் இணைந்து நடித்த முரளி-ரம்பா அப்படத்தின் பின் 'தென்றலைத் தூது விட்டு', 'ஆனந்தம்' போன்ற படங்களில் இணைந்து நடித்து வருகிறார்கள்.

இவர்கள் இருவரும் மறுபடியும் இணைந்து நடிக்கும் புதிய படம் 'பாட்டுச்சத்தம் கேட்குதம்மா'.

கிராமிய மணங்கமழும் பல படங்களை இயக்கிய கஸ்தூரிராஜா இப்படத்தின் கதை-திரைக்கதை-வசனம் எழுதி-இயக்குகிறார். இளையராஜா இசையமைக்கிறார்.

முரளி-ரம்பா ஜோடியுடன் இளம் ஜோடி ஒன்றும் அறிமுகமாகிறது.

பிஸியான கஜேந்திரன்

'பட்ஜெட் பத்மநாதன்' வெற்றிகரமாக ஓடியதைத் தொடர்ந்து தனது அடுத்த பட வேலையைத் தொடங்கி விட்டார் இயக்குநர் டி.பி.கஜேந்திரன்.

புதிய படத்திற்கு 'பந்தா பரமசிவம்' என்று பெயரிட்டுள்ளார். நட்சத்திரத் தேர்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன. தேர்வுகள் முடிந்ததும் விரைவில் அறிவிப்பு வெளியாகும்.

இளம்பெண் இயக்கத்தில் அர்ஜுன்

அர்ஜுன் முதல் முறையாக பெண் இயக்குநர் ஒருவர் இயக்கும் படமொன்றில் நடிக்கவுள்ளார். மணிரத்னத்திடம் உதவியாளராகப் பணியாற்றிய பரியா என்ற இளம் பெண் தான் அர்ஜுனை நாயகனாக வைத்து அடிதடிப்படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

முரளி - பிரதிக்ஷா
படம்: மனுநீதி

வருத்தத்தில் விக்ரம்

'சேது' படம் வெளியாகி பல மாதங்களாகியும் விக்ரம் நடித்த புதிய படங்கள் எதுவும் இன்னமும் வந்தபாடாகத் தெரியவில்லை. இவர் பல படங்களில் நடித்து வருகிறார் என்பது வேறு விஷயம்.

ஆனாலும் விக்ரம் வருத்தத்தில் காணப்படுகிறார். இவரது வருத்தத்திற்குக் காரணம், 'சேது' பட வெற்றியின் பின், இவர் நடித்த பிறமொழிப் படங்கள் பல மொழி மாற்றப்பட்டு வரிசையாகத் தமிழ் பேசி வருவது.

மொழிமாற்றுப்படங்கள் தனது மார்க்கெட்டை இல்லாமல் செய்து விடுமோ என்று அஞ்சுகிறார் விக்ரம்.

இவர் நடித்த தெலுங்குப் படம் ஒன்று 'கண்டேன் சீதையை' என்ற பெயரில் தமிழுக்கு வருகிறது. இதில் விக்ரம் விலைத்தனமான நாயகனாக நடித்திருக்கிறார்.

வித்தியாசராஜ்

வித்தியாச வேடங்களை ஏற்று நடிக்க விரும்பும் பிரகாஷ்ராஜ், 'அப்பு' படத்தில் அலி வேடத்தில் அசத்தினார். இதையடுத்து இவர் இப்போது 'லிட்டில் ஜான்' என்ற மும்மொழிப்படத்தில் 'சாத்தான்' என்ற வேடத்தில் வித்தியாச தோற்றத்தில் நடித்து வருகிறார்.

நக்மா
படம்: தீனா

மினி சினி

☆ பாண்டியராஜன் இயக்கத்தில் பிரபுதேவா-மீனா நடித்த 'டபுள்ஸ்' படம் இப்போது தெலுங்கில் மொழிமாற்றப்பட்டு வருகிறது. தெலுங்கில் இப்படத்திற்கு 'யுவரசிகொடா' என்று பெயரிடப்பட்டுள்ளது.

☆ சரண் இயக்கிய 'அமர்க்களம்' படத்தில் 'மகா கணபதி...' பாடலுக்கு நடனமாடிய லாரன்ஸ், சிரஞ்சீவி கதாநாயகனாக நடிக்கும் 'மிருகராஜ்' என்ற தெலுங்குப் படத்தில் அவருடன் சேர்ந்து ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

☆ மலையாள இயக்குநர்: ஷாஜி கைலாஷ் இயக்கத்தில் விஜயகாந்த் நடிக்கும் 'வாஞ்சிநாதன்' படத்தில் சாக்ஷியுடன் இரண்டாவது கதாநாயகியாக ரம்யா கிருஷ்ணன் நடித்து வருகிறார்.

☆ அண்மையில் வெளியான 'அன்புடன்' படத்தை தொடர்ந்து அருண்குமார் 'புத்தன்' படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தின் உச்சக்கட்ட (க்ளைமாக்ஸ்)க் காட்சிக்காக அருண்குமார் மொட்டை அடித்து நடிக்கவுள்ளார்.

☆ விக்ரமனின் 'வானத்தைப் போல' படத்தைத் தயாரித்த ஆஸ்கார் ஃபிலிம்ஸ் பட நிறுவனம் அடுத்து விஜய-அஜித்குமார்-மாதவன் ஆகியோரை நாயகன்களாக வைத்து ஒரே நேரத்தில் மூன்று படங்களைத் தயாரிக்கிறது.

☆ பல படங்களில் பிளியாக நடித்து வரும் விக்ரம் பொப் அல்பம் ஒன்றில் சொந்தக் குரலில் பாடியுள்ளார். அத்துடன் 'விண்ணுக்கும் மண்ணுக்கும்', 'தோழன்' ஆகிய படங்களிலும் இவர் சொந்தக் குரலில் பாடுகிறார்.

☆ பவித்ரன் இயக்கத்தில் சரத்குமார் இரட்டை வேடங்களில் நடக்கும் 'புகழ்' படத்தில் தெலுங்கு நடிகை பூமிகா நாயகியாக நடிப்பதாக இருந்தது. இப்போது பூமிக்காவுக்குப் பதிலாக பூனம் நாயகியாக நடிக்கிறார்.

☆ சூர்யா-ஜோதிகா இணைந்து நடித்த 'உயிரிலே கலந்தது' படத்தை இயக்கிய கே.ஆர்.ஜெயா அடுத்து இயக்கும் படத்திற்கு 'நான் பார்த்ததிலே' என்று பெயர் சூட்டியிருக்கிறார்.

பின்புலத்தில் பொலிஸ் ஸ்டேஷன்

சரண் இயக்கிய 'அமர்க்களம்' படத்தில் திரையரங்கு ஒன்றையும், 'பார்த்தேன் ரசித்தேன்' படத்தில் நகரப் பேரூந்து ஒன்றையும் பின்புலமாக வைத்துக் கதை அமைத்திருந்தார்.

இப்போது சரண் இயக்கிவரும் 'அல்லி அர்ஜுனா' படத்தில் ஒரு பொலிஸ் நிலையத்தைப் பின்புலமாக வைத்துக் கதை பின்னியுள்ளார்.

இப்படத்தில் மனோஜ்-புதுமுகம் ரிச்சா ஜோடியாக நடித்துவருவது தெரிந்ததே.



அர்ஜுன்-அபிராமி
படம்: வானவில்

முகப்பில்: விக்ரம் - தேவ

விசிட்

பாலுமகேந்திராவின் 'என் இனிய பொன் நிலாவே'

சில வருடங்களுக்கு முன் பாலுமகேந்திரா கதை, திரைக்கதை, வசனம் எழுதி ஒளிப்பதிவு செய்து இயக்கிய 'என் இனிய பொன் நிலாவே' படம் வெளியிடப்படாமல் இருந்தது. இப்போது இந்தப்படம் நூசு தட்டப்பட்டு வெளியாகவுள்ளது.

வீட்டை விட்டு ஓடி வரும் காதலர்கள் அதன் பின் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை வைத்து இப்படத்தின் கதை பின்னப்பட்டுள்ளது.

பாண்டியராஜன், மௌனிகா, சுரேஷ் சக்கரவர்த்தி, விசித்ரா நடித்துள்ள இப்படத்திற்கு இளையராஜா எம்.எஸ்.விஸ்வநாதன் இணைந்து இசையமைத்துள்ளனர்.

'மெல்லத்திறந்தது கதவு', 'செந்தமிழ்ப் பாட்டு' ஆகிய படங்களுக்குப் பின் இளையராஜா-எம்.எஸ்.விஸ்வநாதன் இணைந்து இசையமைத்திருக்கும் முன்றாவது படம் இது.

சத்யராஜ் பூரிப்பு

சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் 'மிஸ்டர் தாரதர்' படத்தின் படப்பிடிப்புக்கள் தமிழ் நாட்டில் உள்ள கடற்கரையோரப் பிரதேசமான முட்டம் என்ற பகுதியில் நடந்து வருகின்றன.

படப்பிடிப்பில் பிறந்த நாளைக் கொண்டாடிய சத்யராஜிற்குப் படத்தில் பணியாற்றிய உதவி இயக்குநர்கள் ஒன்று சேர்ந்து கடல் சங்கு, சிப்பிகள் கொண்டு கோர்க்கப்பட்ட மாலையை அணிவித்துள்ளார்கள்.

புதுமையான பரிசைக் கண்ட சத்யராஜ் பூரித்துப் போய் விட்டாராம்.

இரண்டெழுத்துப் படங்கள்

'வாலி', 'குஷி', 'மாயி' என்று இரண்டெழுத்துப் படங்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 'நியூ', 'ஹிட்', 'டிக்' என்று பல இரண்டெழுத்துப் பெயர்கள் ஃபிலிம் செம்பரில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

குறைத்தார் தேவயாணி

தேவயாணிக்கு படவாய்ப்புக்கள் குறைந்து கொண்டு போவதை அடுத்து தனது ஊதியத்தை அதிரடியாகக் குறைத்து விட்டார்.

சம்பளக் குறைப்பின் பின் இவருக்கு 'நினைக்காத நாளில்லை!' 'ஆனந்தம்' உட்பட மூன்று புதிய படங்களில் நடிக்கும் வாய்ப்புக்கள் வந்துள்ளன.

3 நாயகன்கள் நாயகிகள்

மம்முட்டி, முரளி, அப்பாஸ் ஆகிய மூன்று பெரும் இணைந்து நடிக்க சூப்பர் குட் ஃபிலிம்ஸ் தயாரிக்கும் படம் 'ஆனந்தம்'. இதில் தேவயாணி, ரம்பா-ஸ்நேகா ஆகிய மூவரும் நாயகிகளாக நடிக்கிறார்கள்.

விக்ரமனிடம் உதவியாளராக இருந்த லிங்குசாமி என்ற புதியவர் இப்படத்தை இயக்குகிறார்.

கே.ரங்கராஜ் இயக்கும் 'இனிய உதயம்'

'உதயக்கும்', 'உயிரே உனக்காக' உட்பட பல வெற்றிப் படங்களை இயக்கியவர் கே.ரங்கராஜ் இவர் சமீபத்தில் 'குடும்பம்' என்ற தொலைக்காட்சித் தொடரை இயக்கியவர்.

இப்போது இவர் 'இனிய உதயம்' என்ற படத்தை இயக்குகிறார். ஏற்கனவே விஜயகாந்த்-அமலா நடித்த படமொன்று 'ஒரு இனிய உதயம்' என்ற பெயரில் வெளியாகியுள்ளது.

கே.ரங்கராஜ் இயக்கத்தில் உருவாகும் 'இனிய உதயம்' படத்தில் பானுப்பிரியா கதாநாயகியாக நடிக்கிறார். இவருடன் 'தலைவாசல்' விஜய், பாலாசிங், பானு பிரகாஷ், பூரணி உட்பட பலர் நடிக்கின்றனர்.

இந்திய தேசிய திரைப்படக் கழக நிதியில் தயாராகும் இப்படத்தின் கதையை எழுதி இயக்குகிறார் கே.ரங்கராஜ்.

'தோஸ்த்'தின் நண்பர்கள்

எஸ்.ஏ.சந்திரசேகர் இயக்கத்தில் சரத்குமார் நடிக்கும் படத்திற்கு 'தோஸ்த்' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. இந்திச்சொல்லான 'தோஸ்த்'திற்கு தமிழில் 'நண்பன்' என்று அர்த்தம்.

இதில் 'தோஸ்த்' சரத்குமாருக்கு தோஸ்த்துகளாக ரகுவரனும் பிரகாஷ்ராஜும் நடிக்கவுள்ளனர்.

விஜய் - சூர்யா
படம்: ப்ரண்ட்ஸ்



ஜனகராஜ்-அல்போன்ஸா-செந்தில்
படம்: உள்ளத்தைக் கிள்ளாதே

திரையுலக மறுபக்கம் — மும்பை நடிகையின் வலையில் விழுந்த முன்னணி நடிகர்கள்

179 தமிழ்நாட்டிலிருந்து மயன்

சகலகலாவல்லவர் என்றழைக்கப்படும் இயக்குநரால் அறிமுகப்படுத்தப்பட்ட அந்த மும்பை நடிகை அடிக்கும் 'ஓட்டிக்கு' அளவே இல்லாமல் போய் விட்டது.

இவரது வலையில் விழுந்து வரும் பிரபல நடிகர்களின் பட்டியல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

'உயரமான' நடிகர் நடித்த 'பொலிஸ்' படத்தில் இளம் நாயகனுக்கு ஜோடியாக இந்த நடிகை நடித்தார். அப்போது 'உயர' நடிகருடன் ஏற்பட்ட பழக்கத்தை நெருக்கமாக்கிக் கொண்டார் நடிகை.

விளைவு, அந்த 'உயர' நடிகர் நடிக்கும் படங்களில் இந்த நடிகை கண்டிப்பாக இருக்கவேண்டும் என்று அந்த நடிகரே உத்தரவு போட்டு விட்டார்.

அடுத்தவர் ஒரு 'பெரிய' பிரபல நடிகர் முன்பு பெரிய 'பட்ஜெட்' படங்களில் நடித்த இந்த நடிகர் இப்போது சின்ன 'பட்ஜெட்' படங்களில் நடித்து வருகிறார்.

அப்படி ஒரு சின்ன 'பட்ஜெட்' படத்தில் நடிகர் நடித்த போது, இந்த நடிகை வேறொரு படத்தில் ஆடிய நடனம் ஒன்றைப் பார்த்துக் 'குஷி'யாகி விட்டார்.

உடனே தனது படத்திலும் கிட்டத்தட்ட அப்படியானதொரு நடனம் இடம்பெறவேண்டும் அதுவும் அந்த நடிகையைக் கொண்டே ஆட வைக்க வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்தார் அவர்.

இப்படி இந்தப்படத்தில் இருவரும் இணைந்து நடித்த பின் நடிகை இந்த நடிகரின் அன்புக்குரியவராகி விட்டார். முதற்கட்டமாக தான் நடிக்கும் 'பெரிய நாட்டாமை' என்று பொருள்படும் படத்தில் நடிகைக்கு வாய்ப்பு வாங்கிக் கொடுத்திருக்கிறார் நடிகர்.

இப்படத்தின் வெளிப்புறப் படப்பிடிப்பின்போது நடிகையும் நடிகரும் சேர்ந்தே இருந்து வருகிறார்கள். இதன் மூலம் தான் நடிக்கும் அடுத்தடுத்த படங்களிலும் நடிகை இடம்பெற வாக்குறுதி கொடுத்திருக்கிறார் நடிகர்.

தற்போது நகைச்சுவையில் கலக்கிக் கொண்டிருக்கும் ஒரு நடிகரும் நடிகையின் வலையில் விழுந்திருக்கிறார். நடிகைக்குப் படப்பிடிப்பு இல்லாத நாட்களில், நடிகரும் படப்பிடிப்புக்குக் 'கட்' அடித்து விட்டு நடிகை தங்கியிருக்கும் நட்சத்திர ஹோட்டலில் காணப்படுகிறார்.

கடைசியாக நடிகையின் வலையில் விழுந்திருக்கிறார் ஓர் இளம் நாயகன். இன்னமும் திருமணமாகாத இந்த இளம் நடிகர், நடிகையுடன் 'நட்சத்திர' படம் ஒன்றில் ஒரு பாடல் காட்சியில் நடித்த போது இவரைத் தன் வலையில் விழ்த்தி விட்டார் நடிகை.

நடிகையின் 'அன்பில்' மயங்கிய இந்த இளம் நடிகர் தான் நடிக்கும் புதிய படமொன்றில் நடிகையைத் தனக்கு ஜோடியாகப் போடுமாறு தயாரிப்பாளர் ஒருவரை கேட்டிருக்கிறார்.

இந்த நடிகரைக் கண்கொத்திப்பாம்பாகக் கவனித்து வரும் இவரது தந்தை (இவரும் நடிகர்தான்) இப்போது நடிகையிடமிருந்து தனது மகனை மீட்டெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

...ாணி, படம்: வீண்ணுக்கும் மண்ணுக்கும்

சின்ன வயதில் சிங்



இந்திய அணியில் இடம்பிடித்திருக்கும் புதிய புயல் யுவராஜ் சிங், பஞ்சாப் மாநிலத்தின் தலைநகர் சண்டிகாரில் 1981ம் ஆண்டு பிறந்த யுவராஜ் அறிமுகமான முதல் போட்டித் தொடரிலேயே அனுபவம் வாய்ந்த ஆட்டக்காரர் போல் அதிரடித்தாக்குதல் தொடுத்தவர்.

டிசம்பர் 12ம் திகதி (ரஜினி பிறந்த நாளன்று தான்) தனது 19வது பிறந்தநாளைக் கொண்டாடிய யுவராஜ், முதலாவது பிறந்தநாளின் போது பாட்டியுடனும், பிரபல கிரிக்கெட் வீரர் சந்தீப் பட்டீலுடனும் கீழேயிருக்கும் படங்களில் காட்சியளிக்கின்றார்.





தேன் கிண்ணம்

நிதர்சனங்கள்...

வாழ்க்கை
உன்னை
வாவென்று வரவேற்காது
அதற்காய் வெறுத்துப் போகாதே!
***
வசந்தம்
எப்போதும்
உன்னோடு இருக்காது;
அதற்காய் வாடிப்போகாதே!
***
உண்மை
சொன்னால்
உடனே பலனிருக்காது;
அதற்காய் பொய் சொல்லாதே!
***
உதவி
செய்தால்
உனக்கு நலனிருக்காது;
அதற்காய் உதவிட மறுக்காதே!
***
நேர்மை
வழி நடந்தால்
நீதி உடன்கிடைக்காது;
அதற்காய் கைவிட்டிடாதே!
***
தோல்வி
எப்போதும்
உனக்கு ஏற்படலாம்;
அதற்காய் துவண்டு போகாதே!
***
அவநம்பிக்கை
சில வேளை
உனக்கு ஏற்படலாம்;
அதற்காய் நம்பிக்கை இழக்காதே!
***
பொறாமை
பிறர்மீது
உனக்கு ஏற்படடிலாம்;
அதற்காய் கைப்பிடிக்காதே!
***
கோபம்
எந்நேரமும்
உனக்கு ஏற்படலாம் ;
அதற்காய் வாழ்நாளை இழக்காதே!
***
மரணம்
வாழ்வில்
எப்போதும் ஏற்படலாம்;
அதற்காய் பயந்து போகாதே!

எஸ். தேவகி–வவுனியா.

ஏற்றிடுவோம்

சாலையோர
சாவடிகளை
சாகடிப்போம்!
***
அடையாள
அணிவகுப்பை
அழித்திடுவோம்!
***
மரணித்து விட்ட
மனிதாபிமானத்தை
மீளச்செய்வோம்!
***
சோதனை எனும்
வேதனையை
ஒழித்திடுவோம்!
***
இனங்களை எரித்து!
மதங்களை மறந்து
பேதங்களை துரத்தி
***
இனவாதப் பேயினை
தொலைத்திருவோம்
ஏற்றிடுவோம்
சமாதானம்–எனும்
தீபத்தை!

ஏ. எல். முஹம்மட் றஸ்மி–அட்டாளைச் சேனை 02.

தீபத்தை..!

காலம் கடந்த ஞானம்

இந்த உலகம்–ஒரு
தபால் பெட்டி
உயிர்–அதில்
கடிதங்கள்
பிரிக்கப்பட்ட
உடலெனும் உறைகள்
மண்ணுக்குள்
மௌனமாகி விட
குற்றவாளிக் கூண்டில்
அகப்பட்ட
ஆத்மாக்கள்
"நீதிதேவனை நோக்கி
கனம்
கோட்டார்
அவர்களே!
சாட்டையடிகளையும்
நாம்
சாகும் முன்பே
பெற்று
கொண்டோம்!
விதியின் மிரட்டல்களால்
விளைந்த பாவங்கள் தான்
எம்மை
பாவிகளாக்கிவிட்டன;
இன்னும் மூன்று
மாதம்
அவகாசம்
கொடுங்கள்!
புண்ணியங்களைச்
செய்து
புத்தனெனும் பேரில்
சுவர்க்கலோகத்தில்
மீண்டும்
சந்திக்க....

சி. லதா–கெங்கல்ல.

தூண்டில் மீன்

தூண்டில் மீன்
சமாதானம்
துகில் உரியப்பட்டு
மனிதம்
தூண்டில் மீனாக
தவிக்கிறது.
***
தூண்டிற்காரன்களாகவும்
துச்சாதனன்களாகவும்
நாமே இருக்கிறோம்!
***
அமைதிக்கு
ஆடைதரும்படி–யாரோவெல்லாம்
அமெரிக்க–நோர்வே
கண்ணன்களை
அழைக்கிறார்கள்!
***
ஆனால்....
அவிழ்க்கப்படும்
ஆடை நுனியை அழைக்கும்
அவர்களுடைய கைகளே
பிடித்திருக்கின்றன; யாருக்கும்
அதைவிட மனமில்லை!
***
வன்முறையில்
தோய்ந்த கைகள்
சாந்த புத்தனுக்கு
அல்லி மொட்டுக்கள்
அவிழ்க்க இரத்தக்
கறை காய்ந்த கைகள்
கற்பூரம் எரிக்கின்றன...
கடவுள்களுக்கு.....!

எம். வதனரூபன்–சம்பூர் 05.

மீண்டும் எழுது!

பரீட்சைக்குதிரை
இடறியதால்,
அன்றிரவெல்லாம்
நீ அழுததாக
உன் அந்தப்புர தோழி வந்து
முறையிட்டுப் போனாள்
இளவரசி!
***
அழாதே..!
கண்ணீர் தீ சுட்டு
உன் நிலா முகம்
கறுத்து விடப்போகிறது.
***
நீ கெட்டிக்காரி!
அதனால் தான் உன்
விடைகளைப் புறக்கணித்த
தேர்வு முடிவுகளை
உன்னால் ஜீரணிக்க
முடியவில்லை!
***
புத்திசாலிகள்
இப்படி எதிர்பாராமல்
எப்போதாவதுதான் தோற்பதுண்டு;
அதற்காக அவர்கள்
அழுவதுமில்லை....!
***
தோல்வியென்பது
முயற்சியாளர்களுக்கு
வீழ்ச்சியல்ல;
அது வெறும் சறுக்கல்தான்.
***
வாழ்க்கையில் விழக்கூடாது;
வீழ்ந்தால்
எழுந்து நிற்கும்
தைரியம் வேண்டும்!
***
நீ தைரிய சாலியல்லவா....?
அப்படியென்றால்
கண்களில் வடியும்
கவலைகளை வழித்து
எறிந்து விட்டு,
எழு! எழுது!!
அடுத்த ஆண்டிலும்
மற்றொரு பரீட்சை வரும்.

தோப்பூர் நிலா நேசன்

அழகு...

பூக்களின் அழகு மடியும் வரை.....
பௌர்ணமி அழகு விடியும் வரை.....
சிலைகளின் அழகு உடையும் வரை....
கூந்தலின் அழகு உதிரும் வரை.....
நிலவின் அழகு தேயும் வரை.....
நெற்கதிரின் அழகு அறுக்கும் வரை....
கீற்றின் அழகு பழுக்கும் வரை.....
பெண்மையின் அழகு தாய்மை வரை....
கனவின் அழகு கண் திறக்கும் வரை.....
உடலின் அழகு உயிர் பிரியும் வரை....
கதிரவன் அழகு இருட்டும் வரை.....
நதிகளின் அழகு சங்கமிக்கும் வரை....
வானவில்லின் அழகு வர்ணம் உள்ளவரை....
அன்பின் அழகு இறுதிவரை.....!

அ. சுதர்சன்–மட்/கல்லடி.

நில்–கவனி–முன்னேறு

உலகில் முன்னேற்றம் கண்டவர்கள் அனைவருமே முயற்சியால் தான் சாதனை படைத்திருக்கிறார்கள். அந்தச் சாதனையாளர்களின் வாழ்க்கையைக் கூர்ந்து பார்த்தால் தெரியும்.

நமக்கு முயற்சி என்றாலே கஜினி முகம்மதுவும், ஸ்காட்லாந்து மன்னனும் ஞாபகத்திற்கு வருவார்கள். வெற்றியைத் தொடும் வரை தொடர்ந்து பல்வேறு தோல்விகளைச் சந்தித்த ஆபிரகாம் லிங்கனைப் போல நம்மிடையேயும் மனிதர்கள் உள்ளன.

வறுமையும், தடைகளும் ஏற்படுகிற போது நமக்குத் தேவை, முயற்சி மட்டுமே. விடாமுயற்சியால் மட்டுமே தடைகளைத் தகர்த்தெறிய முடியும்.

இன்றைய இளைஞர்களுக்கு நட்டவுடனே அறுவடை செய்துவிட வேண்டும். உலையில் போட்ட உடனேயே அரிசி வெந்துவிட வேண்டும்; முடிகிற காரியமா?; முயற்சி என்றாலே முனகுகிறார்கள். சின்ன வேலைக்குக் கூட முயற்சி தேவைப்படுகிறது.

சிலர் கேட்கிறார்கள். வெற்றி, பெறுவது எப்படி? என்ற நூலைப் படித்தால் முன்னேறிவிட முடியுமா? ஏன் முடியாது? முடியும். எப்போது? அந்த வழிமுறைகளை, திட்டங்களை நடைமுறை வாழ்க்கையில் பயன் படுத்துகிறபோது, முன்னேற்றம் வரும்.

எதையுமே பயன்படுத்தாமல் வெறும் புத்தகப் புழுவாக இருந்தால் முடியாது. பயன்பாட்டில் தான் முன்னேற்றமே. வழி முறைகளை வரைமுறைப்படுத்துவதில்தான் வளர்ச்சிகளே. அப்போது சாதனைகள் சாத்தியமே.

எப்பொழுதுமே உம்மணாமூஞ்சியாக இருந்து விடாதீர்கள். நண்பர்களுடன் நம்பிக்கையோடு கை குலுக்குங்கள். மலர்ச்சியோடு காட்சியளியுங்கள். உங்களின் படிப்பைவிட, ஆடையை விட, வேலையை விட மலர்ந்த முகமே அடுத்தவரிடம் அறிமுகப் படுத்தி வைக்கிறது.

என்னதான் படித்திருந்தாலும், பதவியில் இருந்தாலும் உம்மாணா மூஞ்சியாக இருந்தால் "அவன் ஒரு முசுடு" என்று பட்டம் கட்டி விடுவார்கள். அப்போது நம் முயற்சிகளுக்கு முனை அளவு வெற்றிகூடக் கிடைக்காது.

'மனோதத்துவம்' என்ற நூலில் சொல்வது போல, நாமெல்லாம் வாழ்க்கை என்னும் பள்ளியில் பயிலும் மாணவர்கள். இந்தப் பள்ளியில் யாரும் தைரியத்தை இழக்க வேண்டியதில்லை.

உங்களுடைய சின்ன வெற்றிகளுக்கு, முயற்சிகள் அஸ்திவாரங்களாக அமையட்டும். முயலுங்கள். உங்களால் முடியும். உறங்காமலும் விடியும்.

நண்பர்கள்

பேனா

பெயர்: எஸ்.கமலதாஸ்
வயது: 20
முகவரி: வைத்தியசாலை வீதி, பனங்காடு, அக்கரைப்பற்று.
பொழுது போக்கு: கிரிக்கெட், பத்திரிகை.

பெயர்: எம்.மனோகரி
வயது: 22
முகவரி: 979,பாலையூற்று, திருகோணமலை.
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி.

இந்தவாரம் உங்கள் பலன்

17.12.2000 முதல் 23.12.2000வரை

ஜோதிடர் 'கானா'

மேடம் :
எடுத்த விடயங்கள் வெற்றியாக முடிவுறும். எதிலும் நம்பிக்கை தென்படும். நோய் துன்ப நிவர்த்தியுடன் பெரிய வெற்றிகள் கிடைக்கும். கல்வி, பரீட்சை முடிவுகள் திருப்திகரமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 20, 22.

இடபம் :
சனியின் பார்வை பாதிப்பதால், மனதில் அச்சமும் முடிவுகளைச் செயற்படுத்த முடியாத நிலையும் தென்படும். எடுத்த முடிவுகளில் மாற்றங்கள் ஏற்படக்கூடிய நிலை உள்ளது. தொழில் வசதிகள் ஓரளவு உயர்வைக் கொடுக்கும். திருமணக்காதல் தொடர்புகள் சிக்கல்கள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 20, 21.

மிதுனம் :
சகோதரர்களின் அரவணைப்பு கிடைக்கும். எதிரிகள் எதிர்ப்புகள் குறையும். நீண்ட நாள் கனவு பலிக்கும். தடைப்பட்ட நாட்பட்ட விடயங்கள் கைகூடும். திருவாதிரைக்காரருக்கு பல அதிஷ்ட வாய்ப்புக்கள் கூடும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 21, 23.

கடகம்:
முயற்சிகள் சிரமமின்றித் தொடரும். புத்திர பந்து சொந்தங்களால் நன்மைகள் ஏற்படும். அத்துடன் நீண்டகால சிக்கல்கள் மறையும் பூச நட்சத்திரருக்கு வசதிகள் பெருகக் கூடிய பலன் உள்ளது.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 18, 20.

சிங்கம் :
நண்பர்களால் உதவிகள் கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். பயண முயற்சிகள் என்பன வெற்றியைக் கொடுக்கும். எதிலும் நிலையான சாதகமாகும். ஆலயதரிசனமும் பயண வெற்றியும் அமையும். மகநட்சத்திரர் பெரிய வெற்றிகளைப் பெறுவர்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி, .
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 19, 23.

கன்னி :
சில முடிவுகள் தள்ளிப்போகும். திருமண நற்கருமவிடயங்கள் நடைபெறப் பலன் உள்ளது. சமய சம்பந்தப்பட்ட விடயங்கள், பிள்ளைகளின் வேலைப்பாடுகள், முன்னேற்றமடையும், இரும்பு, ஆபரணத் தொழில் செய்வோர்களால் நன்மை ஏற்பட இடமுள்ளது.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 17, 22.

துலாம் :
எதிலும் நிலையான முடிவான செயற்பாடுகள் இடம்பெறும். பணம் பொருள் வரவுகள் அதிகரிக்கும். தூர இடத்து செய்திகள் மனதைச் சந்தோஷப்படுத்தும். முக்கிய உறவினர்கள் திருமணம், காதல் சம்பந்தப்பட்ட விடயங்கள் இடம் பெறும். சுவாதி நட்சத்திர பெண்களுக்கு பெருமையான வாரமாகும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 21, 23.

விருட்சிகம் :
தொழில் தடைகள் விலகக்கூடிய காலம். எதிலும் நம்பிக்கை பிறக்கும். முக்கிய உறவினர்கள் இடம்விட்டு இடம் மாறுவார்கள். திருமணப்பேச்சுக்கள் வெளியூர் பயணங்கள் சித்தி அடையும். மகர ராசிக்காரர் உதவுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 20, 23.

தனுசு :
உயர்வுள்ள கல்வி பெருகும். தொழில் கிடைக்கக் கூடிய பலன். பல நாள் எதிர்பார்ப்பு நிறைவு பெறும். மருத்துவச் செலவுகள் மாற்றம் பெறும். கொடுக்கல் வாங்கல்கள் பெரிய அளவில் நடைபெறும். பயண ஏற்பாட்டு வசதிகள் பெருகுகல்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், புதன்.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 21, 23.

மகரம் :
பிரிந்த குடும்ப உறவினர்கள் ஒன்று சேர்வார்கள். உடலில் உள்ள நோய் துன்பம் குறைவடையும். எதிலும் தயக்கமான நிலை மாறி. துணிகரமாக இயங்கும் பலன் உள்ளது. தடுமாற்றங்கள், தடைகள், விலகிக் கொள்ளக் கூடும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்சிவப்பு; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 20, 22.

கும்பம் :
திடீர் என்ற சிக்கலான நிலை தோன்றும், நோய் செலவு என்பன அதிகரிக்கும். பிரிந்த உறவினர்கள் ஒன்று சேர்வார்கள். வெளியிடத் தொடர்புகள் பெருகும். செய் தொழில் மூலம் பணப் பெருக்கம் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 18, 21.

மீனம் :
மனக் குறை, கடன் பிரச்சனைகள் மறையும். அத்துடன் எதிலும் சிக்கல்கள் குறையும் கல்வி வெற்றிகளைத் தரும். பெயர், புகழைக் கொடுக்கும் வரவு செலவும் அதிகரிக்கும். கை நழுவிய விடயங்கள் கைக்கு வரப்பெறும்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 18, 19.

லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

சோர்வைப் போக்குவது எப்படி?

இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையில் பெண்களுக்கு சோர்வு, அமைதியின்மை, மயக்கம் போன்றவை ஏற்படுவது சகஜம். இது போன்று அடிக்கடி ஏற்பட்டால் அது ஏதேனும் உடல் கோளாறின் அறிகுறியாக இருக்கலாம். அதனால் மருத்துவ பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

மருத்துவரிடமும் ஆலோசனை பெறலாம். ஆனால் சில பெண்களுக்கு வேலைக்குச் செல்வதாலும், வீட்டிலும் அயராத வேலைகள் இருப்பதாலும் உடலில் சத்து குறைந்து பலவீனம் ஏற்படலாம். இவற்றை சரிவிகித உணவு முறை பழக்கத்தின் மூலம் மாற்றிவிடலாம்; புத்துணர்ச்சியுடன் விளங்கலாம்.

பெரும்பாலான பெண்களுக்கு காலை உணவு சாப்பிடுவதற்கு நேரம் இருக்காது. அதற்காக காலை உணவை தவிர்த்துவிடுகின்றனர். அவ்வாறு செய்வது மிகவும் தவறு. இரவில் நீண்ட நேர தூக்கத்திற்கு பிறகு அன்றைய நாளில் உடலும் மனமும் நன்கு வேலை செய்யத் தயாராக இருக்கும். அப்போது அதற்குரிய சத்துக்களை தந்தால் தான் அன்று முழுவதும் சுறுசுறுப்பாக வேலை செய்ய முடியும். மேல்நாட்டில் 'பிரேக்பாஸ்ட்' எனப்படும் காலை உணவைத்தான் முக்கியமாக கருதுவார்கள்.

அவ்வாறு காலை வேளையில் அமர்ந்து ஆற அமர சாப்பிட முடியாதவர்கள், பாதாம்பருப்புகளை நான்கு என்ற கணக்கில் எடுத்து இரவில் ஊறப் போட்டு வைத்து விட வேண்டும். காலையில் அந்த பருப்புகளை தோல் நீக்கி சாப்பிடலாம். பேரீச்சம் பழங்களை சாப்பிடலாம்.

உணவில் கட்டாயம் தினமும் ஏதாவது முளை கட்டிய பயறு வகையைச் சேர்த்துக் கொள்வது அவசியம். நெய் கொழுப்பு சத்து மிகுந்தது என்று கூறப்பட்டாலும் பலவீனமான பெண்களுக்கு ஊட்டம் தரக் கூடியது துவரம்பருப்பு. பயத்தம் பருப்பை குழைய வேக விட்டு அதில் இரண்டு ஸ்பூன்கள் நெய் கலந்து சாப்பிட்டு வர உடலுக்கு தெம்பு கிடைக்கும்.

நெல்லிக்காய்களை அடிக்கடி சாப்பிட்டு வருவது நல்லது. நெல்லிக்காய் கிடைக்காத காலத்தில் நெல்லிவத்தலில் தயிர் கலந்து பச்சடி போல் உண்ணலாம். மிக களைப்பாக உணரும்போது மிதமான சூட்டில் உள்ள வெந்நீரில் ஒரு டீஸ்பூன் தேன் கலந்து பருகலாம். எலுமிச்சை சாற்றில் தாராளமாக உப்பு சேர்த்து பருகலாம். மோரில் சுக்கு மற்றும் புதினா கலந்து பருகினால் புத்துணர்வு கிடைக்கும்.

வாரம் ஒரு முறையாவது ஏதேனும் பழச்சாறு அல்லது காய்கறிச்சாற்றை வீட்டிலேயே செய்து நிறைய குடிப்பது நல்லது. பீட்ரூட், காரட் போன்றவற்றிலிருந்து சாறு எடுத்துக் குடிக்கலாம். வேப்பங்கொழுந்துகளை அவ்வப்போது பறித்து கடித்து மென்று தின்ன வேண்டும். சற்று கசக்கும் ஆனாலும் பரவாயில்லை.

உலர்ந்த சருமமா உங்களுக்கு?

உலர்ந்த தோல் கொண்டவர்கள் அடிக்கடி சவர்க்காரம் போட்டு முகம் கழுவக் கூடாது. சோப்பு, தோலை மேலும் வறண்டு போகச் செய்துவிடும். பாதம் எண்ணெய், கிளிசரின் போன்றவற்றை அடிக்கடி தோலில் பூச வேண்டும். 'மாய்ச்சரைசர்' கிரீம்கள், திரவங்கள் கடைகளில் கிடைக்கின்றன. இவை தோலில் ஈரப்பதத்தை ஏற்படுத்தி, தோல் வறண்டு சுருக்கம் விழாமல் தடுக்கும்.

ஆனால், இந்த மாய்ச்சரைசர்களை தடவும் போது தோல் சற்று ஈரப்பதமாக இருந்தால் தான், தோலில் அடி ஆழம் வரை இவை ஊடுருவி வேலை செய்யும்.

அதனால் குளித்ததும் உடலை துவாய் கொண்டு நன்றாக துடைத்து முற்றிலுமாக ஈரத்தை எடுத்துவிடக்கூடாது. தோல் சற்று ஈரமாக இருக்கும் போதே மாய்ச்சரைசர் தடவ வேண்டும்.

வறண்ட தோல் உடையவர்கள் அடிக்கடி சொறிந்து கொள்வார்கள். இப்படிப்பட்டவர்கள் கை நகங்களை ஒட்ட வெட்டிவிட வேண்டும். அப்போதுதான் சொறிந்தாலும் தோலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

ஏ.சி. அறைகளில் வேலை செய்வோருக்கு வறண்ட தோல் இருந்தால் பிரச்சனை தான். அடிக்கடி உதடுகள் உலர்ந்து போகும். கைகள் வறண்டு சாம்பல் நிறமாகி விடும். இப்படிப்பட்டவர்கள் கையோடு, பெட்ரோலியம் ஜெல்லி, கிளிசரின் போன்ற வற்றை எடுத்துச் செல்லவும்.

மிகவும் வறண்டு போனால் உதடுகளிலும், கைகளிலும் அவற்றை தடவிக் கொள்ளவும். வறண்ட தோல் உடையவர்கள் வாரம் ஒரு முறை தலை மட்டுமல்லாது, உடல் முழுவதும் நல்லெண்ணெய் அல்லது ஒலிவ் எண்ணெய் பூசி மாசாஜ் செய்து குளிக்க வேண்டும். அப்படி குளிக்கும் போது தலை முடிக்கு சீயாக்காய் அல்லது முலிகைத்தூள் தேய்த்துக் குளிக்கலாம்.

உடலுக்கும் சவர்க்காரம் பயன்படுத்தாமல் கடலை மாவு அல்லது மூலிகைத் தூள் தேய்த்துக் குளிக்கலாம். அதிக மணமிக்க பவுடர், சோப், சென்ட்களை உபயோகிப்பதை தவிர்க்கவும்.

மோனிக்காவிடம், எம்மில் தொலை பேசியில் தொடர்பு கொண்டு அவளுடைய தாயுடனோ வேறு சினேகிதிகளிடனோ பேசலாம் என்று கூறினார். தொடர்ந்து ஜனாதிபதி கிளின்டனுடன் கூட பேசலாம் என்று மற்றுமொரு அதிகாரி சற்றுக் கிண்டலாகவே கூறினான்.

இந்தத் தகவல் அறிவிக்கப்பட்ட பின் மோனிக்கா பெற்றிகியூரியுடன் தொடர்பு கொண்டு தன் நிலமையைச் சொல்லலாம் என்று யோசித்தாள். எம்மில் தொலைபேசித் தொடர்புகள் அனைத்தும் ஒலிப்பதிவு செய்யப்படும் என்று எச்சரித்தமையினால், பெற்றி கியூரியுடன் தொடர்பு கொள்ளலாம் என்ற எண்ணத்தைக் கைவிட்டு விட்டாள். சில நாட்களுக்கு முன்னர் தான் கியூரி தனது சகோதரனைப் பற்றி கொடுத்திருந்தாள். அதுமட்டுமல்லாமல் அவளுக்கும்பல குடும்பத் தொல்லைகள்.

'கியூரி மிகவும் நல்ல சுபாவம் உள்ளவள். எனக்கு எவ்வளவோ உதவிகளைச் செய்திருக்கிறாள். அத்தகைய அப்பாவிப் பெண்ணை வீணாக இந்தக் கழுகுகளிடம் மாட்டி விடுவது நியாயமில்லை' என்று கருதினாள்.

தன்னுடைய வழக்கறிஞர் காட்டனுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாமா என்று எம்மிலிடம் கேட்டாள். ஆனால் அவருடன் தொடர்பு கொள்ள முடியாது என்று கூறி விட்டனர்.

வழக்கறிஞர் காட்டரிடம் மோனிக்கா தொடர்பு கொண்டால், அவள் புலனாய்வுத் துறையினரால் விசாரிக்கப்படும் சங்கதி வெர்னன் ஜோர்டனுக்குத் தெரிந்துவிடக் கூடும். பின்னர் அவர் மூலம் ஜனாதிபதிக்கும் மோனிக்கா விசாரிக்கப்படும் சம்பவம் தெரிய வந்துவிடும். எனவே தான் விசாரணை அதிகாரிகள், மோனிக்கா, அவளுடைய வழக்கறிஞருடன் தொடர்பு கொள்ளுவதற்கு அனுமதிக்க மறுத்தனர்.

'அமெரிக்கச் சட்டப்படி பல கொலைகளைச் செய்த குற்றவாளியும் கூட அவனுடைய வழக்கறிஞரைக் கண்டு ஆலோசனை பெற உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. அப்படி இருக்கும் போது எனக்கு மட்டும் ஏன் என் வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க அனுமதி மறுக்கிறார்கள்' என்று தனக்குள் குமுறினாள் மோனிக்கா.

இத்தகைய யோசனையுடன் மோனிக்கா மற்றோரு புறம் இருந்த லின்டா ட்ரிப்பை ஒரு முறை பார்த்தாள். அவளோ எதுவுமே நடை பெறாததுபோல் அமைதியாக இருந்து ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். லின்டாவை எரித்து விடுவது போல் மோனிக்கா அவளை ஒரு தடவை பார்த்தாள். அதே வேளை மற்றுமொரு அதிகாரி லின்டாவை அறைக்கு வெளியே அழைத்துச் சென்றார். அவளுக்குப் பதிலாக ஒரு பெண் அதிகாரி உள்ளே வந்து லின்டா அமர்ந்திருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டாள். அவள் லின்டாவிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஏற்கனவே மோனிக்காவின் அருகில் கொண்டு வந்து வைக்கப்பட்ட ஒலிப்பதிவு கருவியில் ஒரு நாடாவைப் பொருத்தி விட்டு, "மோனிக்கா இதில் நாங்கள் எதையும் ஒலிப்பதிவு செய்யப் போவதில்லை. சில நாட்களுக்கு முன்னர் இதே ஹொட்டலில் லின்டா ட்ரிப்பிடம் நீ நடத்திய உரையாடல் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட நாடா இது. உனக்காக இதனைப் போட்டுக் காட்டலாம் என்று கருதி இதனை இங்கு வைத்துள்ளோம்; கேட்டுப் பார்க்கிறாயா?" என்று கிண்டலாகக் கேட்டாள். வேண்டாம் என்று தனது தலையை ஆட்டிய வண்ணம் மோனிக்கா மறுத்து விட்டாள்.

"எம்மில் மீண்டும் அவள் அருகில் வந்து, 'உன்னுரையாடலை நீ கேட்க விரும்பவில்லையானால், இதோ இதற்குள் இருப்பவற்றை எடுத்துப்பார்' என்று ஒரு காகித உறையை அவளிடம் நீட்டினான். அந்த உறையைக் கையில் எடுத்த மோனிக்கா நடுங்கும் தனது கைகளால் பிரித்துப் பார்த்தாள். அந்த உறைக்குள் பல புகைப்படங்கள் இருந்தன.

சில நாட்களுக்கு முன்னர் அந்த ஹொட்டலில் லின்டா ட்ரிப்புடன் மதிய உணவு உட் கொள்வதற்கு வந்தது முதல், உணவருந்தியது, உரையாடியது, இறுதியில் ஹொட்டலை விட்டு வெளியேறியது போன்ற அத்தனை காட்சிகளும் படம் பிடிக்கப்பட்டிருந்தன. படங்கள் ஒவ்வொன்றிலும் படம் பிடிக்கப்பட்ட திகதியும் நேரமும் கூட பதிவு செய்யப்பட்டிருந்தன.

புகைப்படங்களைப் பார்த்ததும் மோனிக்காவுக்கு ஏற்பட்ட மனக்கொந்தளிப்பு, அதே கால கட்டத்தில் லின்டா ட்ரிப் அந்த அறையிலேயே இருந்திருந்தால் அவள் மீது ஒரு புலியைப் போல் பாய்ந்து அவளைக் கீறிக் கிழிக்கத் தூண்டியிருக்கும். இத்தகைய உணர்ச்சி மோனிக்காவிடம் ஏற்படும் என்பதை முன்னதாகவே தெரிந்து வைத்திருந்த கென் ஸ்டாரின் உதவியாளர்கள், லின்டாவை முன் னெச்சரிக்கையாக அறையை விட்டு வெளி யேற்றி விட்டனர்.

என்னை இத்தகைய கொடூரமான ஒரு சூழ்நிலைக்குள் மாட்டி விடுவதற்காகவா திட்டமிட்டு என்னுடன் மிக நெருக்கமாக உறவாடியிருக்கிறாள் அந்தக் கிராதகி' என்று லின்டா ட்ரிப்பை மனதாரத் திட்டித் தீர்த்தாள். 'லின்டா நீண்ட காலமாக கென்ஸ்டாரின் உதவியாளர்களுடன் சேர்ந்து தனனைப் பொறியில் மாட்டுவதற்காக நன்கு திட்டமிட்டிருக்கிறாள்' என்று எண்ணிக் கொண்டாள்.

வழங்குவது

67 புவனா

மோனிக்கா என்

மோனிக்கா

கெடுபிடியில் அகப்பட்ட காரிகை மோனிக்கா

புலனாய்வுத் துறையைச் சேர்ந்த எம்மில் மீண்டும் மோனிக்கா அருகில் வந்தார். "மோனிக்கா, நீ இங்கு கொண்டுவரப்பட்டு மூன்றரை மணி நேரமாகி விட்டது. நாங்கள் இந்த நாட்டின் நீதிவிசாரணைகளைத் தொடர்பவர்கள்; சட்டத்தை நிலைநிறுத்த நடவடிக்கை எடுப்பவர்கள். எங்களுடைய கோரிக்கையின்படி எங்களுடைய விசாரணைகளுக்கு நீ ஒத்துழைப்பு தரவேண்டும்.

காலம் கடந்து போய் கொண்டிருக்கிறது. எங்களுடைய விசாரணைகளுக்கு நீ ஒத்துழைப்பு தருவாயானால் உனக்கு அளிக்கப்படும் தண்டனை 5 வருடங்களாக குறைக்கப்பட இடமிருக்கிறது. ஆகவே மேலும் காலம் கடத்தாமல் எங்களுக்கு ஒத்துழைப்பு தருவதாக நீ ஒப்புக் கொண்டாக வேண்டும்," என்று சொன்னார்.

எம்மில் முகத்தில் முன்பு இருந்ததை விட இறுக்கம் அதிகரித்திருப்பதை மோனிக்காவால் உணர முடிந்தது. எம்மிலை ஏற இறங்க ஒரு தரம் பார்த்துவிட்டு, "எனக்கு இன்னும் சில நேரம் அவகாசம் தர வேண்டும். பாரிய குற்றவாளிகளுக்கும் அவர்களுடைய வழக்கறிஞர்களைக் கண்டு அல்லது தொடர்பு கொண்டு ஆலோசனைக் கேட்பதற்கு இந்த நாட்டுச் சட்டம் இடந்தந்திருக்கிறது. நீங்கள் அத்தகைய அனுமதி எனக்குத் தர மறுப்பது சட்டத்திற்கு விரோதமானது என்பதை நான் நன்கறிவேன்," என்று ஏதோ ஒரு வகைத் துணிவுடன் சற்றுக் கடுமையாகவே எம்மிலிடம் கூறினாள்.

மோனிக்காவிடமிருந்து இத்தகையதொரு பதிலை எம்மிலோ மற்ற வர்களோ எதிர்பார்க்க வில்லை. எம்மில் தன்னுடைய இருக்கையிலிருந்தெழுந்து ஏனைய அதிகாரிகளிடம் சென்று ஏதோ உரையாடினார்.

இதனைத் தொடர்ந்து மற்றும் ஓர் அதிகாரி மோனிக்காவின் அருகில் வந்தார். "மோனிக்கா நீ ஒரு வழக்கறிஞருடன் கலந்துரையாட வேண்டுமென்று விரும்பினால் நாங்களே உனக்கொரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்து தருகிறோம். அவர் இங்கேயே வந்து உனக்குரிய ஆலோசனைகளைத் தருவார். என்ன சொல்லுகிறாய்," என்று அந்த அதிகாரி சொன்னார். ஆனால் மோனிக்கா அதற்குச் சம்மதமளிக்கவில்லை.

இவர்கள் ஏற்பாடு செய்து தரும் வழக்கறிஞர் எப்படியும் அவர்களுக்குச் சாதகமாகவே நடந்து கொள்வார்.

ஆகவே அத்தகைய ஒரு வழக்கறிஞருடைய ஆலோசனை எனக்கு வேண்டியதில்லை', என்று திடமாகக் கருதினாள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த அறைக்குள் திடீரென்று ஒரு பரபரப்பான நிலை உருவானது. மேலும் நான்கு அதிகாரிகள் அங்கு வந்தனர். அவர்களில்லொருவரை மோனிக்கா ஓரளவு தெரிந்திருந்தாள். ஜக்கி பெர்னட் ஜூனியர் என்ற அந்த அதிகாரியின் படம் அடிக்கடி பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளதை மோனிக்கா பார்த்திருக்கிறாள். சாட்சிகளை அல்லது குற்றவாளிகளை விசாரணை செய்வதில் பெர்னட் சில கடுமையான முறைகளைப் பிரயோகிப்பவர் என்பதை மோனிக்கா அறிந்திருந்தாள்.

பெர்னட், எம்மில் போன்ற ஏனைய சில அதிகாரிகளுடன் பேசிவிட்டு நேராக மோனிக்காவிடம் வந்தார். "மோனிக்கா, மேலும் தாமதமானால் நிலை மோசமடையலாம் ஆகவே நீ உடனடியாகவே ஒரு முடிவுக்கு வந்தாக வேண்டும் என்று சற்றுக் கடுமையாகவே அவளிடம் கூறினாள்.

மோனிக்காவின் கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந்தது "என்னுடைய அம்மாவுடன் கூட தொடர்பு கொள்ள அனுமதிக்கமாட்டீர்களா?" என்று விம்மலுடன் கேட்டாள். இதற்கு பதிலிறுத்த பெர்னட், "மோனிக்கா, நாங்கள் அறிந்தபடி உனக்கு இப்பொழுது வயது 24. உனக்குரிய செயற்பாடுகளை நீயே தீர்மானிக்க வேண்டியவள், அவ்வாறிருக்கும் போது சிறு பிள்ளையைப் போல் அம்மாவுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்று கேட்கிறாயே?" என்றார்.

மோனிக்கா, "எப்போதும் எனது தாயார் இந்த நேரங்களில் என்னோடு தொலை பேசியில் தொடர்பு கொண்டு என் நலன்களைப் பற்றி விசாரிப்பவர். (உண்மையில் மோனிக்காவின் தாயார் மார்சியா மூன்று தடவைகள் அவளுடைய தொலைபேசியில் தொடர்பு கொண்டு 'பேஜ'ரில் செய்தியைப் பதிவு செய்திருந்தாள்) இதுவரை என்னைப்பற்றிய தகவல் தெரியாதமையினால் நிச்சயமாக எனது அம்மா பொலிசாருடன் தொடர்பு கொண்டு என்னைத் தேடிக் கண்டுபிடிக்கும் படி கேட்டிருப்பாள்" என்று கூறினாள்.

மோனிக்கா இவ்வாறு கூறியதும் பெர்னட்டின் முகத்தில் இருந்த கடுமை சற்று விலகியது. " நீ உன்னுடைய அம்மாவுடன் தொடர்பு கொள்ள அனுமதி தருகிறோம்; ஆனால் உன்னுடைய பேச்சு மிகமிகச் சுருக்கமாக இருக்க வேண்டும். தொலைபேசியில் அம்மாவிடம் நான் நலமாக இருக்கிறேன். என்னைத் தேடி அவதிப்படவேண்டாம். என்று மட்டும் கூறி முடித்துவிடு!" என்றார். அங்கிருந்த தொலைபேசிக்கு அருகில் மோனிக்கா சென்றாள். தாயாரது இலக்கத்திற்கு எடுத்து பேசத் தொடங்கியதும், புலனாய்வுத் துறை அதிகாரிகள் மூவர் அவளருகே வந்து நின்றனர். அவர்களில்லோர் அதிகாரி, தொலைபேசியில் தொடர்புக் கம்பியை தனது வலதுகையால் பிடித்துக் கொண்டார். மோனிக்கா அவளுடைய தாயாருடன் மேலதிகமாக எதையும் கூற நேர்ந்தால் உடனடியாகத் தொடர்பைத் துண்டித்து விடுவதற்கு ஆயத்தமாகவே அவ்வாறு காத்து நின்றான்.

மோனிக்கா தன் தாயார் தொலை பேசியின் அடுத்தமுனையிலிருந்து பேசியதும், "அம்மா நான் நலமாக இருக்கிறேன்; இங்கு ஓர் அலுவலாக இருக்கிறேன். இதனால தொடர்பு கொள்ளத் தாமதமாகிவிட்டது. சற்று நேரத்தின் பின்னர் நானே உன்னுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறேன்!" என்று கூறி தொடர்பினைக் கத்தரித்துக் கொண்டாள்.

(வரு வாள்)

பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் | மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை IT

பெயர்:.....

முகவரி:.....

.....

தொழில்:.....

கையொப்பம்:.....

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-12-2000

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

இறத்தோட்டை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

திருமதி.எம்.ராமநாதன்,
நிக்கலோய கீழ்ப்பிரிவு,
இறத்தோட்டை போஸ்ட், இறத்தோட்டை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

பாப்பா முரசு சிறுகதை

கோழிக்குஞ்சுக்கு ஏற்பட்ட கதி

ஒரு கோழிக்குஞ்சு இருந்தது. அது தன் வயதுக்கு மீறி எல்லா உயிரினங்களையும் கேலி செய்யும்.

ஒரு குருவியையும் கேலி செய்யும். ஒரு யானையையும் கேலி செய்யும்.

அதன் கேலிப் பேச்சுக்களிலிருந்து இதுவரை எந்த உயிரினமும் தப்பியதாக சரித்திரம் இல்லை.

கோழிக்குஞ்சின் இந்த மோசமான குணம் அதன் தாய்க்குப் பிடிக்கவில்லை.

'இப்படி கேலி பேசியே பிறர் மனதை புண்படுத்தக் கூடாது என்று அது கோழிக் குஞ்சுக்குப் புத்தி சொல்லாத நாள் இல்லை.

ஆனால், தாயின் சொற்களை யெல்லாம் ஒரு காதில் வாங்கி மறுகாதில் விட்டுவிடும் கோழிக்குஞ்சு.

'பிறரது மனதைத் துன்பப்படுத்தும் நீ, ஒருநாள் துன்பப்படத்தான் போகிறாய். பார்த்துக் கொண்டே இரு,' என்று தாய்க் கோழி சொல்லிவிட்டு, அப்படியே விட்டு விட்டது.

கோழிக்குஞ்சு வயிறு நிறையத் தின்று விட்டு, கண்ணில் படும் உயிரினங்களை யெல்லாம் கேலி பேசிப் புண்படுத்து வதையே தொழிலாகக் கொண்டது.

அப்படிச் செய்வதால் அதற்கு நிறைய மகிழ்ச்சி உண்டாயிற்று.

ஒரு நாள்

வயிறு நிறைய உணவைத் தின்று விட்டு, எந்த உயிரினமாவது கண்ணில் படுகிறதா என்று தேடித் திரிந்தது கோழிக்குஞ்சு.

நீண்ட நேர அலைச்சலுக்குப்பின் 'கொறுக் கொறுக்'கென்று ஒரு காரட் கிழங்கை கடித்து தின்று கொண்டிருந்த ஒரு முயலை அது பார்த்தது.

உடனே அதன் முகத்தில் சந்தோஷம் பூத்தது.

அது முயலிடம் சென்று ஒரு கேலிப் பேச்சை அவிழ்க்க முயன்ற போது, மேலே பறந்து கொண்டிருந்த ஒரு வல்லூறு 'விர்ர்ர்'ரென்று கீழே வந்து, கிழங்கைத் தின்று கொண்டிருந்த முயலை 'லபக்'கென்று தன் கால்களால் பற்றி எடுத்துக் கொண்டு அதே வேகத்தில் மேலே பறந்தது.

வினாடி நேரத்தில் நடந்து விட்டது அந்த சம்பவம்.

முயல் மரண பயத்தால் கால்களை உதறியபடி கதறியது. வல்லூறிடமிருந்து விடுபடப் போராடியது.

தனது மரண துடிப்பைக் கண்டு எள்ளி நகையாடிய கோழிக்குஞ்சு, "என்ன முயல் பயலே! என்னமோ நான் தான் வீரன் என்பது போல் பேசிக் கொள்வாயே இப்போது எங்கே போயிற்று உன் வீரம்? அந்த வல்லூறின் வேகத்தைப் பார். உன் பேச்செல்லாம் உதவாக்கரை என்று இப் போதுதான் தெரிகிறது. நீ ஒரு பொய்யன், புரட்டன்... ஹா...ஹா...ஹா...." என்று கேலி

பேசிச் சிரித்தது.

அதை சுட்டெரிக்கும் கண்களால் பார்த்த முயல், "ஏய்! வெந்தபுண்ணில் வேல் பாய்ச் சாதே. நான் இங்கு சாகக் கிடக்கிறேன். உனக்குக் கொண்டாட்டமாக இருக்கிறதா? இரு... இரு... நீயும் ஒரு நாள் இதுபோன்ற துன்பத்தை அனுபவிக்கத்தான் போகிறாய். அப்போது தெரியும் அடுத்தவர் மனது எப் படிப் புண்பட்டிருக்குமென்று," என்று சொன்னது.

அதைக் கேட்டு "கிக்... கிக்...கிக்..." என்று சிரித்தது அந்தத் திமிர்ப் பிடித்த கோழிக்குஞ்சு.

அப்போது

வானத்தில் பசியுடன் வட்டமிட்டுக் கொண்டிருந்த ஒரு பருந்து அந்தக் கோழிக் குஞ்சைப் பார்த்தது.

அவ்வளவு தான்!

அடுத்த வினாடி, அது ஒரு ராக்கெட் வேகத்தில் கோழிக்குஞ்சை நோக்கிப் பறந்தது.

இமைக்கும் நேரம் தான்.

கோழிக்குஞ்சைத் தன் கால்களால் 'லபக்'கென்று தூக்கிக் கொண்டு மேல் நோக்கிப் பறந்தது.

"ஐயோ! இதென்ன! ஒரு பருந்து என்னைத் தூக்கிச் செல்கிறதே. ஐயோ... நான் செத்தேன். முயலின் வாக்கு இத்தனை சீக்கிரம் பலிக்கும் என்று தெரியவில்லையே. ஐயோ... இப்போது நான் எப்படித் தப்பிப் பிழைப் பேன்?" என்று கத்திக் கொண்டே பருந்திடமிருந்து விடுபடப் போராடியது அந்தத் திமிர் பிடித்த கோழிக் குஞ்சு.

ஆனால், பருந்து அதை ஒரு உயரமான மலைக்குக் கொண்டு சென்று அதைக் கீழே வைத்துக் காலால் இறுக மிதித்து, ஒங்கி ஒரு கொத்துக் கொத்தியது.

கோழிக்குஞ்சு அலறியது.

"எத்தனை பேர் மனதைக் காயப்படுத்தி இருப்பேன். எத்தனை மமதையுடன் திரிந்தேன். எனக்கு இந்தத் தண்டனை தேவை தான்!" என்று சொல்லிக்கொண்டே தன் உயிரை விட்டது கோழிக்குஞ்சு.



கைமில் பந்துடன் நிற்கும் கண்ணன், கிரிக்கெட் விளையாட்டு மைதானத்திற்குப் போக வழி தெரியாமல் தடுமாறுகிறான். அவனுக்கு நீங்கள் வழிகாட்டுங்கள் பார்க்கலாம்.



சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **23.12.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **373**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 371

பரிசுக்குரியவர்:
பாத்திமா சகீலா,
முன்வதுகொட முஸ்லிம் வித்தியாலயம், தந்துர.

பாராட்டுக்குரியவர்கள்:

சி.கிருஷ்ணபிரசாந், ஸ்ரீ கோணேஸ்வரா, இந்துக்கல்லூரி, திருமலை.	தே.நியோமி டிலாணி, விபுலானந்த வித்தியாலயம், கல்லடி, மட்டக்களப்பு.
என்.தனுஷன், றோமன் கத்தோலிக்க தமிழ் வித்தியாலயம், வத்தளை.	ப.போல்ராஜ், கொம்பனித்தெரு, கொழும்பு-02.
வ.ஜெகதீஸ், சரஸ்வதி ம.மா.வித்தியாலயம், பதுளை.	க.தயாளன், தமிழ் மத்திய, மகாவித்தியாலயம், வவுனியா.
பிரதாப் கிருபாஹரன், புனித ஜோன் பெஸ்கோ கல்லூரி ஹட்டன்.	க.இராஜ்குமார், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா.
ச.டில்ஷிகா, வின்சன்ற் தேசிய பாடசாலை மட்டக்களப்பு.	எம்.எஸ்.சகீபா, அல்மின் ஹாஜ் தேசிய பாடசாலை, ஹுபுகஸ்தலாவை.

விடுகதைகளும் விடைகளும்

1. கொம்புக்களை இறங்கி வருகுது பிடிக்கப் போனால் கொம்பைக் காணோம்.
அது என்ன?

2. வெளிச்சத்தில் உடன் வருவான், இருட்டில் தலை மறைவான்.
அவன் யார்?

3. தண்ணீர் இல்லாத இடத்தில் தாவி ஓடுது கப்பல்.
அது என்ன?

4. ஆடிவரும், ஓடிவரும், பாடி வரும், தேடி வரும்.
அது என்ன?

5. ஊருக்கெல்லாம் இரு விளக்கு, பகலில் ஒன்று இரவில் ஒன்று.
அவை என்ன?

6. பச்சை நிறத்தழகி, பவளவாய்ச் சொல்லழகி, வீட்டிலும் இருப்பாள், காட்டிலும் இருப்பாள்.
அவள் யார்?

7. துடிப்பவன் துடிக்கா விட்டால் துடிக் காதவர்களும் துடிப்பார்கள்
அவன் யார்?

8. காற்றடித்தால் பறப்பான், சில நேரம் வெடிப்பான்.
அவன் யார்?

விடைகள்

1. தேங்காய்
2. நிழல்
3. தரைவண்டி
4. ஆடை
5. ஆகாயத்தில் மின்னும் நட்சத்திரங்கள்
6. ஆசிரியை
7. ஆசை
8. பலூன்

முதல் பெண்மணிகள்

எலிசபெத் பிளக்வெல்	- மருத்துவர் (அமெரிக்கா 1849)
லூஸி ஹொப்ஸ்	- பல் வைத்தியர் (அமெரிக்கா 1866)
அரபெல்லா மேன்ஸ் ஃபீல்ட்	- வழக்கறிஞர் (அமெரிக்கா - 1869)
எஸ்தர் மோரிஸ்	- நீதிபதி (அமெரிக்கா 1876)
மைலி எலிஸி	- விமானி (ஃபிரான்ஸ் 1909)
அலிஸ் ஸ்ரெப்பின் வெல்ஸ்	- பொலிஸ் (அமெரிக்கா 1910)
சிறிமாவோ பண்டார நாயக்க	- பிரதமர் (இலங்கை 1960)
வலன்டினா டெரஸ்கோவா	- விண்வெளி வீராங்கனை (ரஷ்யா - 1963)
மரியா ஸ்டெலா பெரோன்	- ஜனாதிபதி (ஆர்ஜென்டினா 1974)
அன்னே வின்டர்	- புகையிரத ஓட்டுநர் (இங்கிலாந்து 1983)

தொகுப்பு : ஏ.எம்.நிஸ்மி-வாளிப்சேனை 05.

பாம்புக் கழுகு

படத்தில் காணப்படும் இந்தக் கழுகு 'பாம்புக் கழுகு' குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் பெயர் 'பேட் லுயர்' மிக வேகமாக வழுக்கிக் கொண்டு பறக்கும் இது முக்கால்வாசி நேரத் தைப் பறப்பதிலேயே செலவிடும். அதுவும் அறுபதிலிருந்து 150 மீட்டர் உயரம் வரை 56 முதல் 88 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும்.

பறக்கும் போது இதன் பெரிய இறக்கைகள் மேல்புறமாக சாய்வாக வைத்துக் கொண்டு, குட்டியான இதன் வாலை இப்படி அப்படி ஆட் டிக் கொண்டே பறப்பதைப் பார்க்கும் போது, அந்தரத்தில் கட்டப்பட்ட சுமிற்றின் மீது மனிதர்கள் நடந்து வருவது போல் இருக்குமாம்.

இப்படி நடப்பவர்களை ஃபி ரெஞ்சு மொழியில் 'பேட் றுயர்' என்று அழைப்பர். அதனாலேயே இப்பறவைக்கு இந்தப் பெயர் வந்தது.

இந்தப் பறவை வானிலே வித்தை கள் காட்டுவதில் சாம்பியன் போலும் ஆம், பறந்து கொண்டே திடீர் திடீர் என்று திரும்புவது, குட்டிச்சரணம் அடிப்பதில் கில்லாடி இந்தப் 'பேட் லுயர்' பறவை.

மர்மத் தொடர்

03 மேனகாவின் மோகம்

தேவேந்திரனின் கால்கள் பூமியோடு ஒட்டிக் கொண்டு மேலே எழும்ப மறுக்க, விழிகள் பயத்தில் உறைந்து போய்க் கத்தியோடு நின்றவனைப் பார்த்தன.

"நீ... நீ... யா.... யாரு....?

"சாகப்போகிற நீ அதை தெரிஞ்சுகிட்டு என்ன பண்ணப்போற....?" அடிக்குரலில் பற்களைக் கடித்துக் கொண்டே சொன்னவன் சற்றும் எதிர்பாராத ஒரு விநாடியில் தன் கையில் வைத்து இருந்த அந்த ஓரடி நீளக் கத்தியைத் தேவேந்திரனின் அடிவயிற்றில் செருகி ஒரு இழுப்பு இழுத்தான்.

இரத்தம் பீறிட்டு அடிக்க, தேவேந்திரன் வயிற்றைப் பிடித்துக் கொண்டு அப்படியே இரண்டாய் மடங்கி உட்கார்ந்து பின் அப்படியே மல்லாந்தான்.

இரத்தத்தில் நனைந்த கத்தியை, போர்த்தியிருந்த பட்டுச்சேலையில் துடைத்துக் கொண்டு இருட்டில் பின் வாங்கி நடந்து கல்யாண மண்டபத்தின் கடைசிப் பகுதிக்கு வந்து காம்பௌன்ட் சுவரில் தொற்றி ஏறி மறுபக்கம் குதித்தான்.

கார்ப்பரேஷன் விளக்குகள் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தியதன் விளைவு, சாலை இருண்டு போயிருக்க குப்பைத் தொட்டிக்கு அருகே அந்த கவாஸ்கி பைக் ஒரு குதிரை மாதிரி தெரிந்தது. ஏறி உட்கார்ந்து கிக்கரை உதைக்க 'உள்ளேன் ஐயா' என்று சொல்லிய படி என்ஜின் மொத்தமும் 'புக்புக்' என்று சிரித்தது. சேலையைச் சுருட்டி வீசிவிட்டு...

ஆக்ஸிலேட்டரை முறுக்கினான். ஒரு மின்னல் துணுக்கு மாதிரி பைக் பாய்ந்தது

நான்கு நிமிஷத்தில் ஐந்து கிலோ மீட்டர் பயணம். ரோட்டின் வளைவில் ஒரு ஃடெலிபோன் பூத்தைப் பார்த்ததும் நின்றது. பைக்கை ஸ்டாண்டிட்டு வைத்து விட்டு பூத்துக்குள் நுழைந்தான்.

ஒரு ரூபாய் நாணயத்தைத் தயாராக வைத்துக்கொண்டு ரிஸீவரை எடுத்துக் கொண்டு டயல் செய்தான். மறுமுனையில் ரிங் போய் ரிஸீவர் எடுக்கப்பட்டது "ஹலோ" குரல் கேட்டதும் ஒரு ரூபாய் நாணயத்தை பூத்தின் வாயில் திணித்து விட்டுக் குரல் கொடுத்தான்.

"யார் பேசறது....?"

".........."

"இன்னிக்கு மே ஒண்ணாம் தேதி. மே தினம். நீ சொன்ன மாதிரியே மே தினத்தை சிவப்பாக் கொண்டாடிட்டேன்."

"......"

"தேவேந்திரன் இந்த நிமிஷம் கலியாண மாப்பிள்ளை கிடையாது. இன்னும் கொஞ்ச நேரத்தில போலிஸ் மரியாதைக்கு போஸ் மார்ட்டத்துக்கு போகப் போற மாப்பிள்ளை."

".........."

"சந்தேகமே வேண்டாம். தேவேந்திரன் இறந்து விட்டான். ஒரு அடி நீளக் கத்தி காரியத்தைக் கச்சிதமாகவே பண்ணியிருக்கு. சாயந்தர பேப்பர்ல எல்லாம் விவரமா வரும். படிச்சுக்கோ. ராத்திரி முழுக்கத் தூக்கம் இல்லை.

நான் போய்த் தூங்கி ரெஸ்ட் எடுக்கணும்... ராத்திரிக்கு வந்து உன்னைப் பார்க்கிறேன்."

ரிஸீவரை கொக்கியில் மாட்டி விட்டு வெளியே வருவதற்காக பூத் கதவைத் திறந்தான் அவன்.

இருதயத்துக்குள் தோட்டா பாய்ந்த மாதிரியான உணர்ச்சி

வெளியே-

அந்த இன்ஸ்பெக்டர் நின்றிருந்தார்.

"**அ**ய்யா... இந்தப் பொண்ணு கார்லயே வரலை." டிரைவர் சொன்னதும் இன்ஸ்பெக்டர் குணசேகர் முகம் பூராவும் திகைப்பைப் பூசிக் கொண்டு நிமிர்ந்தார்.

"நீ என்ன சொல்றே....?"

"ஆமாங்கய்யா...! இந்தப் பொண்ணு வேற யாரோ...."

குணசேகர் டிரைவரின் கையில் இருந்த டார்ச்சை வாங்கி அந்தப் பெண்ணின் முகத்தில் வெளிச்சத்தை உமிழ்ந்து பார்த்தார்.

முகம் சிதைந்து இரத்தக்களரியாய் தெரிந்தது. உடுத்தியிருந்த சேலையில் திட்டுத்திட்டாய் உறைந்துபோன இரத்தம்.

உடல்களை வெளியே எடுத்துப் போட உதவி செய்த இரண்டு இளைஞர்களில் ஒருவன் குணசேகரிடம் சொன்னான்.

"ஸார்... அந்தப் பொண்ணோட உடல் மரக்கிளையில தொங்கிட்டிருக்கும் போதே எனக்கு சந்தேகம் ஸார். விபத்துக்குள்ளான எல்லாருமே கார்க்குள்ளே சிக்கியிருக்கும் போது அந்தப் பொண்ணோட உடல் மட்டும் எப்படி மரக்கிளையில் மாட்டியிருக்கும்னு யோசிச்சேன். நான் சந்தேகப்பட்டது சரியாயிடுச்சு ஸார்....! ஆக்ஸிடெண்ட் நடக்கறதுக்கு முந்தியே இந்தப் பொண்ணோட பாடியை யாரோ கொண்டு வந்து இந்த மரத்தோட கிளையில் தொங்க விட்டுப் போயிருக்கணும்."

குணசேகர் மறுபடியும் டிரைவரிடம் திரும்பிக் கேட்டார். "உன் பேர் என்ன....?"

"லிங்கய்யா...."

"கார் யாரோடதுன்னு சொன்னே....?"

"அவர் பேர் ராஜேந்திரபாபு. மில் ஓனர். ஆந்திரபார்டரில் இருக்கிற சிராலா சொந்த ஊர்..."

"ஆக்ஸிடெண்ட்ல செத்துப் போனவங்க யார் யாரு?"

"அய்யா! இவங்க எல்லாருமே ராஜேந்திரபாவுவோட ஃப்ரண்ட்ஸ்ங்க. மூணு நாளைக்கு முந்தி சிராலாவில் மில் ஒணணைக் கட்றது விஷயமா பேச வந்தாங்க. மூணு நாள் இருந்து பேசிட்டு புறப்படும் போது இவங்க வந்த ஹர்மடா வேன் திடீர்ன்னு ரிப்பேராயிடுச்சு. அதனால ராஜேந்திரபாபு தன்னோட டாட்டா சுமோ காரைக் கொடுத்தனுப்பினார்.

நல்ல கண்டிஷனோட இருந்த வண்டி, இந்த கார்னர்ல திரும்பும் போது அவுட் ஆஃப் கண்டரோல் ஆயிடுச்சு. வண்டி தறி கெட்டுப் போய் எண்பது மைல் வேகத்துல புளிய மரத்து மேல பாய்ந்துடுச்சு...."

"விபத்துல சிக்கியிருக்கிற இவங்க ஆறுபேரும் ஹஸ்பெண்ட் அண்ட் ஒய்ஃப்பா....?"

"ஆமாங்கய்யா...!"

"இவங்க பேர் அட்ரஸெல்லாம் தெரியுமா?"

"ஒருத்தர் பேர்தான் தெரியும். ராமச்சந்தர். பென்சன்ட் நகர் கலாஷேத்ரா காலனியில் வீடு...."

டிரைவர் லிங்கய்யா சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு ஆம்புலன்ஸ் வேனும், ஒரு ஃபாரன்ஸிக் ஜீப்பும் ஹெட்லைட் வெளிச்சங்களோடு வேகமாய் வந்து நின்றன.

சப்-இன்ஸ்பெக்டர் கார் வண்ணன் நின்ற ஜீப்பினின்று குதித்து இன்ஸ்பெக்டர் குணசேகரை நோக்கி வந்தார். சல்யூட் ஒன்றைக் கொடுத்து விட்டுச் சொன்னார்.

"ஸார்... ஆம்புலன்ஸ்... ஃபாரன்ஸிக் ரெண்டுக்குமே ஃபோன் பண்ணி கையோடு

க்ரைம்சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

கூட்டி வந்துட்டேன்..."

"டாக்டர் வந்திருக்காரா....?"

"டாக்டர் கிரிதர்க்கு ஃபோன் பண்ணினேன். அவெய்லபிளா இருந்தர். அவரையும் அழைச்சுட்டு வந்துட்டேன்..." கார்வண்ணன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, டாக்டர் கிரிதர் மின்னும் வழுக்கைத் தலையோடும் கையில் மெடிக்கல் கிட்டுமாய் வந்தார்.

"வாங்க டாக்டர்...."

"ஸ்பாட் டெத் எத்தனை பேர்...?"

"ஆறுபேர். கணவன் மனைவியா மூணு ஜோடி. ஒரு பெண்ணோட மரணத்துல மட்டும் சந்தேகம்.... டிரைவர் மிராக்கிள் எஸ்கேப். கையிலேயும் காலிலேயும் மட்டும் லேசா அடி. டிரைவரைப் பார்த்து ட்ரீட்மெண்ட் கொடுத்துட்டு அதுக்கப்புறமா இந்தப் பெண்ணைப் பாருங்க டாக்டர்."

டாக்டர் கிரிதர் டிரைவர் லிங்கய்யாவின் காயங்களுக்கு மருந்திட்டு விட்டு, மற்ற உடல்களைப் பார்த்து விட்டு அந்தப் பெண்ணின் உடலுக்குப் பக்கத்தில் வந்து நின்றார்.

குணசேகரின் கையில் இருந்த டார்ச் வெளிச்சத்தை கொட்டியிருக்க டாக்டர் குத்துக்காலிட்டு உட்கார்ந்து பெண்ணின் உடலை மெல்லப் புரட்டினார்.

முகமே தெரியாத அளவுக்கு உறைந்து போன இரத்தம். கழுத்துப் பகுதியில் ஆழமாய்க் கருஞ்சிவப்பாய் மூன்றங்குல நீளத்திற்கு ஒரு காயம்.

டாக்டர் கிரிதர் குணசேகரிடம் நிமிர்ந்தார். "உங்க சந்தேகம் சரிதான். இந்தப் பெண் இந்த விபத்தில் இறந்திருக் முடியாது. காரணம் இரத்தம் உறைஞ்சு போயிருக்கிற கண்டிஷன். இந்தப் பெண் உயிரைவிட்டுக் குறைந்த பட்சம் ஆறுமணி நேரமாவது ஆயிருக்கணும். கழுத்தில இருக்கிற காயத்தைப் பார்க்கிறப்ப இது ஒரு கொலையாய் இருக்க வாய்ப்பு அதிகம்...."

"முகம் பூராவும் ப்ளட்டா இருக்கே டாக்டர்?"

"கழுத்துக் காயத்துல இருந்து வழிந்த இரத்தம் முகம் பூராவும் பரவி உறைஞ்சு போயிருக்கலாம். இப்ப வாஷ் பண்ணிப் பார்த்துடலாம். கெட் மீ சம் ஃபார்மலின்"

ஒரு ஃபாரன்ஸிக் நபர் பிளாஸ்டிக் ஜக்கில் ஃபார்மலினும் ஒரு நைலான் பிரஷ்ஷும் கொண்டு வந்து கொடுக்க டாக்டர் கிரிதர் அதை வாங்கி பிரஷால் பார்மலினைத் தொட்டு அந்தப் பெண்ணின் முகத்தில் படிந்திருந்த இரத்தத்தைத் துடைக்க ஆரம்பித்தார்.

துடைக்கத் துடைக்கத் திடுக்கிட்டார். இரத்தத்தோடு சதையும் சேர்ந்து பிரிப்பிரியாய் வந்தது. மூக்கு பாதி சிதைந்து போயிருக்க, கண்கள் இருக்க வேண்டிய இடத்தில் இரண்டு குழிகள் தெரிந்தது. பல்வரிசை கறுப்பாய்த் துருத்திக் கொண்டு தெரிந்தது.

டாக்டர் கர்ச்சீப்பால் முகத்தைப் பொத்திக் கொண்டு எழுந்தார்.

"ஏதோ ஒரு இரசாயனப் பொருளை உபயோகப்படுத்தி முகம் அடையாளம் தெரியாதபடிக்கு சிதைச்சிருக்காங்க. வெரி வெரி க்ரூயல் மர்டர்..."

இன்ஸ்பெக்டர் குணசேகர் கையில் இருந்த டார்ச்சை அந்தப் பெண் உடம்பின் மற்ற பாகங்களில் அடித்துப் பார்த்தார்.

வலது உள்ளங்கைக்கு டார்ச் வெளிச்சம் வந்தபோது நின்றது.

உள்ளங்கையின் மையத்தில் ஏதோ எழுத்துக்கள் பளிச்சிட்டன.

"டாக்டர் பாடியோட உள்ளங்கையில் ஏதோ எழுதியிருக்கு பார்த்தீங்களா...?"

டாக்டர் டார்ச் வெளிச்சத்தில் உள்ளங்கையைப் பார்த்தார்.

ஆங்கில எழுத்துக்கள்.

I Love You GG

டாக்டர் அந்த எழுத்துக்களைத் தேய்த்துப் பார்த்துவிட்டு குணசேகரை ஏறிட்டார்.

"பச்சை குத்தியிருக்கா. இது ஏதோ காதல் விவகாரம் போலிருக்கு...."

"இந்த GG யார்ன்னு தெரிஞ்சாத்தான் பெண் யார்ன்னு தெரியும்...."

"கார்வண்ணன்...."

"ஸார்...."

"இம்மீடியட்டா போலீஸ் ட்ராக்கை ஸ்பாட்டுக்கு கொண்டு வரச் சொல்லி வயர்லஸ்ல தகவல் கொடுங்க. நேரமாயிட்டா கொலையாளியோட ஸ்மெல் டிஸ்டர்ப் ஆயிடும்...."

கார்வண்ணன் ஜீப்புக்கு ஓடினார்.

சரியாய் முப்பது நிமிஷம். டாக் ரெய்னர் மோசஸ் கன்னுக்குட்டி சைஸில் இருந்த அந்தக் கறுப்பு நாயோடு வந்து சேர்ந்தார்.

"ஷீபா ஸ்மெல் இட்..."

ஷீபா கட்டளையை வாங்கிக் கொண்டு அந்தப் பெண்ணின் உடலை, தலையிலிருந்து கால் வரைக்கும் அங்குலம் அங்குலமாய் முகர்ந்து விட்டு, ரோட்டின் இடது பக்க மாய் ஓட ஆரம்பித்தது.

டாக்ட்ரெய்னர் மோசஸ் தொடர்ந்து ஓடினார். அவர்களுக்குப் பின்னால் போலீஸ் ஜீப்பில் குணசேகரும் கார்வண்ணனும் தொடர்ந்தார்கள்.

நெடுஞ்சாலையில் கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தூரம் ஓடிய ஷீபா அதற்குப் பின் வலது பக்கமாய்ப் பிரிந்து மண் பாதைக்குள் நுழைந்தது.

பாதையின் முகப்பில் வைக்கப்பட்டிருந்த அந்தப் பழைய சிமெண்ட் பெயர்ப் பலகையைப் பார்த்ததும் குணசேகரும், கார்வண்ணனும் திடுக்கிட்டுப் போய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

ஷீபா உள்ளே ஓடிக்கொண்டிருந்தது.

மர்மம் தொடரும்...

இதுவும் ஒரு நடிகையின் கதை 03

ஜெ.பிஸ்மி

சில திரைப்படங்களில் கதாநாயகிகளைப்பார்த்து அவர்கள் பெறும் பொருளாதார வசதிகளைப் பற்றி கேள்வியுற்று மூக்கின் மேல் விரலை வைக்காத எவருமிருக்க முடியாது.

சுவரொட்டிகளிலும் விளம்பரங்களிலும் அந்த நாயகியின் உருவத்தைப் பார்த்து கனவு காணும் இளைஞர்கள் எத்தனைபேர்? ஆனால் அந்த அழகு ஜொலிப்பில் பெண்ணின் வாழ்க்கையின் பின்னால் மறைந்து கிடக்கும் மர்மமான சோகங்களைப் பற்றி எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை. பணமும் புகழும் படைத்த பல நடிகைகள் தற்கொலை செய்து தங்கள் உயிரையே மாய்த்து விடுகிறார்கள்.

இன்று முன்னணியில் ஜொலிக்கும் நடிகைகள் பலரின் பின்னணியை எடுத்துக் காட்டும் கதைகள் சிறிதளவு கற்பனைக் கலப்புடன் தொடராகத் தரப்படுகின்றன.

'டைரக்டர் சக்கர வர்த்தியைப்பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறாள் மாலதி. பல வெற்றிப்படங்களைக் கொடுத்த டைரக்டர். அவர் எதிர்பார்க்கின்ற நடிப்பு வராவிட்டால் அடிக்கவும் தயங்கமாட்டார். கடும் கோபக்காரர்! இன்று உச்சாணிக் கொம்பில் இருக்கும் நிறைய நடிகைகள், அவரிடம் அடிவாங்கியவர்கள் தான்.

அந்த அனுபவம் தனக்கு நேராது என்று நினைத்திருந்தாள் மாலு. மாலதியை 'மாலு'

என்றுதான் அப்பா கூப்பிடுவார். நடிப்பு அவளுக்கு அத்துப்படி. கேரளாவில் ஸ்கூலில் படித்தபோது நிறைய நாடகங்களில் நடித்திருக்கிறாள். பல தடவை பரிசும் வென்றிருக்கிறாள். அந்த அனுபவம் தந்த நம்பிக்கையில் தான் படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு நடிக்க வந்தாள். வந்தது தவறோ என்று இப்போது தோன்றியது.

ஷூட்டிங் ஆரம்பித்ததிலிருந்து டைரக்டர் எதற்கெடுத்தாலும் எரிந்து விழுகிறார். காரணம் இல்லாமலே கண்டபடி திட்டுகிறார்.

"உன்னை நடிக்க வக்கிறதும் ஒண்ணு தான். செத்த பொணத்தை நடிக்க வக்கிறதும் ஒண்ணுதான்..."

ஷூட்டிங்கை வேடிக்கைப்பார்க்க வந்த கூட்டம் கேலியாய்ச் சிரித்தது. மாலதியின் முகம் அவமானத்தில் வெளிறிப்போனது.

"இதபாரு.... ஊரைவிட்டு ஓடிப் போன உன் முறை மாமன் ரொம்ப வருஷம் கழிச்சு ஊருக்கு வர்றான். நீ ஆசையாக ஓடி வந்து பாக்குறே.... அவன் ஒரு பெண்ணைக் கல்யாணம் கட்டிக்கிட்டு வந்து நிக்கிறான். அதப்பார்த்ததும் நீ அதிர்ச்சியாயிடுறே.... இதுதான் சீன். ஒழுங்கா நடி...."

காட்சியை விளக்கியதோடு மாலதி நடிக்க வேண்டியதை நடித்தும் காட்டினார் டைரக்டர். அவரது நடிப்பைக் கவனமுடன் உள்வாங்கி, சிறு பிசிறு கூட இல்லாமல் நடித்தாள்.

யூனிட் மொத்தமும் கை தட்டிப் பாராட்டியது. டைரக்டரின் முகத்தில் மட்டும் திருப்தியின்மை.

"என்ன நடிக்கிறே நீ? முகத்தில் உணர்ச்சியும் இல்லை; ஒரு மண்ணும் இல்லை. நீயெல்லாம் நடிக்க வந்து எதுக்கு என் உயிரை வாங்கணும்?"

டைரக்டரின் கோபத்துக்கான காரணத்தை அவளால் அனுமானிக்க முடியவில்லை.

'எல்லோரிடமும் சிரித்துப் பேசுகிறார். என்னிடம் மட்டும் சிடுசிடுவெனப் பேசுகிறார். ஒரு வேளை, தான் பெரிய டைரக்டர் என்பதை சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பவர்களிடம் தம் பட்டம் அடித்துக் கொள்வதற்காக இப்படி நடந்து கொள்கிறாரா?'

அதே காட்சியை மீண்டும் எடுக்க ஆயத்தமானார். முதல் டேக்கைவிட இம்முறை சிறப்பாகவே நடித்தாள்.

"கட்... கட்....."

கத்திக்கொண்டே அவளை நோக்கி வந்தார். எவருமே எதிர்பார்க்கவில்லை. பளாரென அவளை அறைந்தார். நிலை குலைந்து போனாள். கண்களில் குபுக்கென்று கண்ணீர் பிரவாகம்.

"அழு.... நல்லா அழு... அப்படியே அழுதுகிட்டே இரு. ரெடி டேக்!"

அவளின் அழுகையை கேமரா பதிவு செய்ய ஆரம்பித்தது.

அஸோஸியேட் டைரக்டர் வரதராஜன் பான்பராக்கைக் குதப்பியபடி அறைக்கு வந்தான்.

ஆயாசமாய் சுருண்டு படுத்திருந்த மாலதி விலுக்கென்று எழுந்து உட்கார்ந்தாள்.

"டைரக்டர் ரொம்ப டென்ஷனா இருக்கார். மாலதிக்கு சரியாக நடிப்பு வரலைன்னு ஃபீல் பண்றார். வேற ஹீரோயினைப் போடலாமான்னும் யோசிக்கிறார்...."

வரதராஜனின் பார்வை மாலதியையும், அவளது அப்பாவையும் ஊடுருவியது.

அவளைவிட அவள் அப்பாவின் முகத்தில் தான் அதிக கலக்கம்.

"என்ன ஸார், மிலிட்டிரியில் இருந்தவரு நீங்க..... இதுக்கெல்லாம் கவலைப்படலாமா? டைரக்டர் ஸார் பார்க்கத்தான் முரடு. பழகிட்டா குழந்தை மாதிரி! இப்பரூம்ல ஃப்ரீயாத்தான் இருக்கார். இனிமே ஒழுங்கா நடிக்கிறேன்னு பாப்பா நேரில போய் சொன்னா சமாதானமாகிடுவாரு...."

வரதராஜனின் யோசனை அவரை மலர வைத்தது.

"கிளம்பு மாலு.....டைரக்டர் ஸாரை பார்த்துட்டு வந்துடலாம்...."

"நீங்க என்னத்துக்கு? கூட்டமாப் போனா டைரக்டர் மூட் அவுட்டாயிடுவாரு. பாப்பா மட்டும் போவட்டும்; நாம வேற ஜோலியப் பார்ப்போம்...." என்று கண்ணடித்தான். அவரது காதில் கிசுகிசுத்தான்.

"அஞ்சே நிமிஷம்.... பாப்பாவை டைரக்டர் ரூமுல விட்டுட்டு வந்துடுறேன். வந்ததும் நம்ம பார்ட்டிய ஆரம்பிப்போம்..."

அவர் உற்சாகமாகத் தலையாட்ட, மாலுவுடன் வெளியேறினான் வரதராஜன்.

"டைரக்டர் சொல்றபடி கேளு.... நீ பெரிய ஸ்டாராயிடலாம். ஒரே வருஷத்துல ஓகோன்னு வந்துடலாம். அவர் பேச்சைக் கேக்கலைன்னா, நாளைக்கே வேற ஹீரோயினை புக் பண்ணிடுவாரு. அது மட்டுமில்லே; நம்ம டைரக்டர் உன்னை நீக்கிட்டாருன்னு வெளில தெரிஞ்சா உன்னைய ஒருத்தரும் புக் பண்ண மாட்டாங்க. நடிப்பையே நீ மறந்திட வேண்டியதுதான். புரிஞ்சுதா?"

"ம்...." என்று தலையாட்டியபடி வரதராஜனைப் பின் தொடர்ந்தாள்.

(வளரும்)

எழுத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 33

எஸ்.டி.எஸ். கண்ட பாரதி

கா.பதிமநாதன்

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுடன் இலங்கையில் எனக்கு ஏற்பட்ட தொடர்பின் பயனாக தமிழ் நாட்டின் திரைப்படத் துறையினருடன் எனக்கு ஏற்பட்ட நெருக்கமான உறவினைப் பற்றி ஒரு சில அம்சங்களை வாசகர்களுக்கு ஏற்கனவே தந்திருந்தேன்.

தமிழ் நாட்டில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பலப்பல. அவற்றில் மேலும் பல சம்பவங்களை சந்தர்ப்பம் கிடைக்கும் போது வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்வேன், என்று கூறிக் கொண்டு ஏனைய அம்சங்களை இனித் தொடரலாம் என்று கருதுகிறேன்.

1945ம் ஆண்டுகளின் பின்னர் மட்டக்களப்பு மாநிலத்தில் எழுத்துச்சிற்பி எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் ஏற்படுத்திய சமுதாய, அரசியல் மறுமலர்ச்சி பற்றிய தகவல்களை இயன்றளவு இத் தொடரில் தருவதே எனது நோக்கம். இத்தகைய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அனுசரணையாக விளங்கியது திரு.எஸ்.டி.எஸ் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட பகுத்தறிவு இயக்கமும், அதனைத் தொடர்ந்து தோன்றிய இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தான் என்பதை எடுத்துக்கூற வேண்டியிருக்கிறது. இவ்விரு அமைப்புகளிலும் எம்போன்ற இளைஞர்கள் இணைவதற்கு திரு.சிவநாயகம் அவர்களும், அவருடைய உடன் பிறவா சகோதரருமான திரு.செல்லையா இராசதுரை அவர்களும்தான் காரணக்கர்த்தாக்கள்.

தமிழரசுக் கட்சி மட்டக்களப்பில் வேரூன்றத் தொடங்கியதைத் தொடர்ந்து திரு.இராசதுரை அவர்கள்-1956ஆம் ஆண்டு மட்டக்களப்பு தொகுதியில் பாராளுமன்ற உறுப்பினரானார்.

உரிமைகள் பலவற்றை பறிகொடுத்த இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தந்தை செல்வா தலைமையில் அறப் போராட்டங்கள் நடத்திய போதெல்லாம் பேரினவாதிகளை உள்ளடக்கிய ஆட்சியாளர்களும் வேறுபல இயக்கங்களும் திரண்டு எழுந்து அசுரத்தனமாக நடந்து நாட்டில் அமைதியைச் சீர் குலைத்து வந்தனர்.

இந்த நாட்டில் முதலாவது இனக் கலவரம், 1956ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதா சமர்ப்பிக்கப்பட்டபோது உருவானது.

அன்றைய தினம் மட்டக்களப்பு நகரில் நடைபெற்ற ஒரு சம்பவம் தான் முதலாவது இனக் கலவரமாக வெடித்தது நாட்டின் சிலபகுதிகளில் பரவியது.

அடுத்து 1958ம் ஆண்டு மே மாதம் இரண்டாவது இனக்கலவரம் வெடித்தது. இதற்கும் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஒரு சம்பவம் தான் காரணமாக அமைந்தது.

மேற்படி இரு கலவரங்களும் மட்டக்களப்பில் தான் தொடங்கின என்று நான் குறிப்பிடுவதனால், மட்டக்களப்பிலுள்ள தமிழ் பேசும் மக்களே இவ்விரு கலவரங்களுக்கும் வித்திட்டனர் என்று வாசகர்கள் கருதி விடக்கூடாது. இச்சம் பவங்கள் இரண்டினையும் நேரடியாகவே நான் அவதானித்து இருந்தமையினால், உண்மை நிலமையை அழுத்தம் திருத்தமாக என்னால் எடுத்துரைக்க முடியும்.

இந்தச் சம்பவங்களில் கை வைப்பதற்கு முன்னர் எமது கட்டுரை நாயகனான எழுத்துச் சிற்பி சிவநாயகம் அவர்கள் சமுதாய மறுமலர்ச்சி கர்த்தாவாக எவ்வாறு உருவானார் என்பதனை, அன்னாருடைய கைவண்ணம் மூலமே நாம் தெரிந்து கொள்வது பொருத்தமாகும்.

மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு விழா 1981ம் ஆண்டு டிசம்பர் 11ம் திகதியிலிருந்து தமிழ் கூறும் நல்லுலகம் எங்கணும் கொண்டாடப்பட்டது. அக்கால கட்டத்தில் திரு.எஸ்.டி.எஸ். அவர்கள் ஆசிரியராகப் பணி புரிந்த 'சிந்தாமணி'-வார ஏட்டில் 6.12.1981 இருந்து தொடர் கட்டுரையாக 'நான் கண்ட பாரதி' என்ற தலைப்பில் எழுதி வந்தார். எஸ்.டி. எஸ். அவர்களுடைய சீரிய தமிழ் எழுத்தாற்றலை விளக்கும் இக்கட்டுரையினை இங்கு தொடர்ந்து தருகிறோம். இத் தொகுப்பினை, தினபதி-சிந்தாமணி நிறுவனத்தில் பணிபுரிந்த எமது நண்பர் எஸ்.ஆர்.ஜோதி அவர்கள் எமக்கு தந்து தவினார்.



நான் கண்ட பாரதி

பாரதியார் வாழ்ந்த காலத்தில் நான் பிறக்கக்கூட இல்லை. அப்படியானால் 'நான் கண்ட பாரதி' என்று எப்படிக் கூறமுடியும்?

கேள்வி நியாயமானதுதான்.

ஒரு மஹா புருஷரைக் காண்பதற்கு அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்திருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை.

அதேபோல, ஒரு மஹா கவியைக் காண்பதற்கும் அவர் வாழ்ந்த காலத்தில் நாம் வாழ்ந்திருக்க வேண்டியதில்லை.

'கம்பன் கண்ட ராமன்' என்று எத்தனையோ பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எழுதியும், பேசியும் வருகிறார்கள்.

ராமன் வாழ்ந்தது திரேதயுகம்.

அதன் பின்னர் வந்தது துவாபர யுகம்.

அதைத் தொடர்ந்து இப்போது கலியுகம் நடைபெறுவதாகச் சொல்லப் படுகிறது.

இந்தக் கலியுகத்தில், இன்றிலிருந்து சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் கம்பர். அந்தக் கம்பர் ராமனை நேரில் கண்டாரா?

அப்படியிருந்தும் 'கம்பன் கண்ட ராமன்' என்று கூறப்படுவதை, எழுதப்படுவதை, நாடு ஏற்றுக் கொள்கிறது அல்வா?

'ஷேக்ஸ்பியர் கண்ட ஜூலியஸ் ஸீஸர்' என்றும், 'போனாட் ஷா கண்ட கிளியோபாத்ரா' என்றும் ஆங்கிலத்தில் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. ஸீஸரும், கிளியோபாத்ராவும் வாழ்ந்த காலம் எது? ஷேக்ஸ்பியரும், போனாட் ஷாவும் வாழ்ந்த காலங்கள் எவை?

எனவேதான், 'நான் கண்ட பாரதி' என்ற தலைப்பு அப்படியொன்றும் தவறானதல்ல, பாரதியின் தரிசனத்தை அவன் பாடிய பாடல்கள் மூலம் நான் எப்படிக் கண்டேன் என்பதுதான் இதன் பொருளாகும்.

பாரதியை எனக்கு முதன் முதலாக அறிமுகப்படுத்தி, அடையாளம் காட்டிய வரை இப்போது மிக்க நன்றியுதிதலோடு எண்ணிப் பார்க்கின்றேன்.

இதிலும் ஒருவித 'கோ-இன்ஸிடென்ஸ்' அதாவது நிகழ்வுப் பொருத்தம்-இருக்கக் காண்கிறேன்.

பாரதியாரின் பெயர் சுப்பிரமணியம்.

பாரதியாரை எனக்கு அறிமுகப் படுத்திய அந்த மதிப்புக்குரியவரின் பெயரும் சுப்பிரமணியம்தான்!

திருகோணமலையில் நான் மாணவனாக இருந்த பொழுது ஒரு நாள் இந்த திரு.ஆர்.சிவ.சுப்பிரமணியம் என்பவர் 'பாரதி நூல்கள்' என்ற ஒரு புத்தகத்தைத் தந்து, "இதைப் படி. உனக்குத் தமிழ் அறிவும், தமிழ் ஆற்றலும், கவிதை ரசனையும், தேச பக்தியும், சுதந்திர உணர்ச்சியும் ஏற்படும்!" என்று கூறினார்.

அன்றுவரை பாரதி என்றால் யார் என்று நான் அறிந்திருக்கவில்லை. அப்படி ஒருவரைப் பற்றி, ஒரு கவிஞரைப் பற்றிக் கேள்விப் பட்டும் இருக்கவில்லை.

இந்த, திரு.சிவசுப்பிரமணியம் அவர்கள் இன்றும் திருகோணமலையில் வாழ்ந்து வருகிறார். அப்போது அவர் திருகோணமலை இந்துக் கல்லூரியில் கேம்பிரிட்ஜ் சீனியர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார் என்று ஞாபகம். நான் சென்ட் ஜோஸப் கல்லூரியில் ஏதோ ஒரு கீழ் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். நான் திரு.சிவ.சுப்பிரமணியம் அவர்களை "அண்ணன்" என்று அழைப்பேன். அவர் அன்போடு "தம்பி" என்று அழைத்துக் கொள்வார்.

அவர் கொடுத்த 'பாரதி நூல்கள்' என்ற புத்தகத்தைப் பாசத்தோடு பெற்றுக் கொண்டேன்.

அந்த நூலைப் படித்தால் ஐந்து காரியங்கள்-

தமிழ் அறிவு
தமிழ் ஆற்றல்
கவிதை ரசனை
தேச பக்தி
சுதந்திர உணர்வு

ஏற்படும் என்றும் அவர் சொன்னார் அல்லவா?

அவர் கூறியது பொய்ப்படவில்லை. 'பாரதி நூல்கள்' என்ற அந்தப் புத்தகத்தை வீட்டுக்குக் கொண்டுபோய்ப் படித்துப் பார்த்தேன்.

ஆஹா, என்ன ஆனந்தம், என்ன இனிமை, என்ன புதுமை, என்ன எளிமை, இப்படியும் கவிதைகள் இருக்க முடியுமா என்று அதிசயித்துப் போனேன்.

இத்தகைய ஓர் அற்புத நூலை இரவல் வாங்கிப் படித்துக் கொண்டிருக்க முடியாது. நாமே நமக்கென்று ஒரு நூலை வைத்துக் கொள்ளத்தான் வேண்டும் என்ற ஆசையும், உணர்ச்சியும், உந்தலும், அன்றிரவே எனக்கு ஏற்பட்டு விட்டன.

மறுநாள் காலை திருகோணமலையிலிருந்த 'ஈஸ்ட் லங்கா புக் டிப்போ' என்ற புத்தகக் கடைக்குச் சென்று 'பாரதி நூல்கள்' என்ற புத்தகம் கிடைக்குமா என்று விசாரித்தேன்.

அதிலும் ஓர் அதிசயம்!

ஒரே ஒரு புத்தகம்தான் இருந்தது.

சென்னை, திருவல்லிக்கேணி பாரதி பிரசுராலயத்தால் வெளியிடப்பட்ட புத்தகம். சென்னை தியாகராய நகர் ஹிந்தி பிரசார அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்ட புத்தகம் "விலை ரூபா 2.50 தான்" என்று சொன்னார்கள். உடனே வாங்கிக் கொண்டேன். சரியாக 721 பக்கங்கள் கொண்ட அந்த நூல் முழுவதும் துணி போட்டு கலிகோ பைண்ட் செய்யப்பட்டிருந்தது. ரூபா 2.50க்கு கொள்ளை மலிவு. அந்த நூல் இன்றும் என்னிடம் பாதுகாப்பாக இருக்கிறது.

பாரதியார் இறந்த பின்னர் அவர் சகோதரர் திரு.சி.விசுவநாத ஐயர் பாரதி பிரசுராலயம் என்று ஒரு நிறுவனத்தை உருவாக்கி பாரதி நூல்களை வியாபார ரீதியில் வெளியிட்டு வந்தார்.

அதில் ஒன்றைத்தான் நான் சொந்த மாக்கிக் கொண்டேன்.

இரவல் நூலை மறுதினம் கொடுத்து விட்டு, சொந்த நூலைத் திருப்பித் திருப்பிப் படிக்க ஆரம்பித்தேன்.

பாரதி பாடிய அத்தனையும் அருமையான பாடல்கள்தாம். ஆயினும், முதலில் என்னை அவருடைய சுதந்திரப் பாடல்களோ, தேசிய கீதங்களோ, பாரத நாடு-தமிழ் நாடு என்ற தலைப்புகளில் வந்த பாடல்களோ, வேதாந்தப் பாடல்களோ கவரவில்லை.

நாற்பது நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாகியும், பாரதி பாடல்களில் முதன் முதலில் என் மனதிற் பதிந்த பாடல் எது என்பது இன்னும் எனக்குப் பசுமையாக இருக்கிறது.

பாரதியார் 'காளிப் பாட்டு' என்ற தலைப்பில் இரண்டு பாடல்கள் பாடியிருக்கின்றார். 'காளி ஸ்தோத்திரம்' என்ற தலைப்பில் ஏழு பாடல்கள் பாடியிருக்கின்றார். மொத்தம் இந்த ஒன்பது பாடல்களில் ஐந்து பாடல்கள் என் மாணவப் பருவத்தின் வாலாயப் பாடல்களாக மனதில் பதிந்தன.

அந்த ஐந்து பாடல்களையும் இங்கே தருகின்றேன்.

(இன்னும் வரும்)

கலைஞர் கருணாநிதி

ஆர்.சி.சம்பத்

12

'வேறு ஏதாவது மாற்றி எழுதுங்கள். பேசுகிறேன்!' என்று கருணாதிநியிடமே நறுக்குத் தெறித்த மாதிரி சொன்னார் நடிகை.

'என் வசனத்தையே மாற்றச் சொல்கிற அளவுக்கு இருக்கிற நீங்கள் இந்தப் படத்திலே நடிக்கத் தேவையில்லை. நீங்கள் வீடுக்குப் போகலாம்,' என்று கண்டிப்பாக கூறிவிட்டார் கருணாநிதி.

'இதுவரை ஐயாயிரம் அடி நீளம் இந்த நடிகையை போட்டு படம் எடுத்திருக்கிறோமே....' என்று கையைப் பிசைந்தார்கள், தயாரிப்புக் குழுவினர். அந்த பிலிமைக் கொளுத்திவிட்டு, இந்தக் கேரக்டருக்கு வேறு ஒரு நடிகையைப் போட்டுப் படம் எடுங்கள்!' என்று கூறிவிட்டார் கருணாநிதி.

அதன்படியே, எடுத்தவரை படத்தைக் கொளுத்திவிட்டு, வேறு நடிகையைப் போட்டுப் படமாக்கினார்கள்.

'பராசக்தி' படத்தின் இயக்குநர்களில் ஒருவரான கிருஷ்ணன் சொல்கிறார்: 'பராசக்தி' படத்திற்கு கோர்ட்சீன் எழுதிக் கொண்டு வந்து தந்தார். அவரோடு மதியழகனும் வந்திருந்தார். 'சட்டம் முட்ட வரும் மாடு, என்று ஆரம்பமாகும் அந்த வசனம். படித்துப் பார்த்த நான், 'அவ்வளவு சரியா இல்லையே!, என்று இழுத்தேன். பக்கத்திலிருந்த மதியழகனைக் காட்டி, 'இவர் சட்டம் படித்தவர், இந்த சீனைப் படித்து விட்டு, சட்ட நுணுக்கமெல்லாம் சரியாய் உள்ளதென்றாரே,' என்றார். 'சட்ட நுணுக்கம் இருக்கலாம். நீங்கள் எழுதியிருப்பது 'கிளைமாக்ஸ்! கதாநாயகனை கூண்டில் நிறுத்தும் காட்சி. அவன் பேசும் ஒவ்வொரு வசனமும் கனல் தெறிக்கும் விதத்தில் கைதட்டல் வாங்கும் விதத்தில் அமைய வேண்டுமே தவிர, சட்டம் நுணுக்கம் என்று எழுதினால் எடுபடுமா என்று சற்று யோசித்துப் பாருங்கள்,' என்றேன் நான். கொடுத்த வசனத்தை திரும்ப வாங்கிக் கொண்டு போனவர், மறுநாள் காலையிலேயே வேறொரு சீனை எழுதிக் கொண்டு வந்து தந்தார்,' என்கிறார் கிருஷ்ணன்.

பேசும் படம் அக்டோபர் 1, '52 தேதியிட்ட இதழில் சின்னதாக ஒரு செய்தி:

'சமூகப் படங்களின் வரிசையில் 'வேலைக்காரி' ஏற்படுத்திய பரபரப்பை 'நேஷனல் பிக்சர்ஸ்' தயாரிக்கும் 'பராசக்தி' ஏற்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மு.கருணாநிதி திரைக்கதை வசனம் எழுதியுள்ள இப்படம் விநியோகத்துறையில் இருக்கும் 'நேஷனல் பிக்சர்சாரை' படத் தயாரிப்பிலும் ஈடுபட வைத்திருக்கிறது. ஏ.வி.எம்., ஸ்டுடியோவில் தயாராகும் இப்படத்தை கிருஷ்ணன் பஞ்சு இருவரும் டைரக்ட் செய்து வருகின்றனர்.'

மூட நம்பிக்கைகளைச் சாடி, சீர்திருத்தம் பேசிய 'பராசக்தி' படத்தின் படப்பிடிப்பு, சிவாஜி கணேசன் 'சக்ஸஸ்! சக்ஸஸ்!' என்று பேசுகிற வசனத்தோடு துவங்கப்பட்டது. (அப்படி பேசி எடுத்தால் படம் வெற்றியடைந்து விடும் என்ற மூட நம்பிக்கைதான்)

'பராசக்தி' படம் ரிலீசாவதற்கு முன்பே மே 1 '52 அன்று சிவாஜிகணேசனுக்கு கும்பகோணம் சுவாமி மலையில் திருமணம் நடந்தது. வைதீக முறையில் மந்திரம் ஓதாமல், திருக்குறள் படித்து விட்டு, பிறகு மணமகள் கழுத்தில் தாலி கட்டினார் சிவாஜி. இந்த மணவிழாவில் கருணாநிதி சிறப்புரை ஆற்றினார். ''பராசக்தி'க்கு முன்பே எம்.ஜி.ஆருக்கும், சிவாஜிக்கும் சிநேகம் இருந்ததால் எம்.ஜி.ஆரும் இந்த கல்யாணத்தில் வந்து கலந்து கொண்டார்.



'கோயிலின் புனித்தைக் கொச்சைப் படுத்திய-ஆண்மீகர்களின் உள்ளங்களை புண்படுத்தும் இந்தப் படத்தை சென்சர் போர்டு எப்படி அனுமதித்தது? உடனே படத்தை தடை செய்ய வேண்டும்,' என்று 'பராசக்தி' பற்றி தேசீயப் பத்திரிகைகள் கொதித்து எழுந்தன. பக்கம் பக்கமாய் எழுதின. இதுவே ஒரு பெரிய விளம்பரம் ஆகி படம் 42 வாரங்கள் ஓடியது.

'பராசக்தி' படத்தில்தான் கருணாநிதி முதன் முதலாக இரண்டு பாடல்கள் எழுதினார். 'இல்வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம் என் இதயராணியே' என்ற பாடலும், 'பூமாலை நீயே' என்ற பாடலும் கருணாநிதியால் எழுதப்பட்டது. கருணாநிதி, உடுமலை நாராயணகவி, அண்ணல் தங்கோ, காமாட்சி சுந்தரம், பாரதிதாசன், பாரதியார் ஆகிய ஆறு கவிஞர்கள் இந்தப் படத்தில் பாட்டெழுதினார்கள்.

'பராசக்தி' படத்தை கேலிசெய்து 'தினமணிக்கதிர்' அட்டைப்படமாக கதை-வசவு தயாநிதி. படம்-பரப்பிரும்மம்' என்று காட்டூன் போட்டது. கருணாநிதி கோபமடைந்து 'பரப்பிரும்மன்' என்ற பெயரிலேயே புதிய நாடகம் எழுதி அரங்கேற்றினார்.

தன்னிடமிருந்து பிரிந்து போன அண்ணாத்துரையும், கருணாநிதியும் அவர்களைச் சார்ந்த சிலரும் தமிழ் சினிமா வசனகர்த்தாக்களாகி அதன் மூலம் மக்களிடம் செல்வாக்குப் பெறுவதை கண்டு கோபம் கொண்ட பெரியார் தனது 'விடுதலை'யில் எழுதினார்: 'பார்ப்பான், பத்திரிகை, அரசியல் கட்சி, தேர்தல், சினிமா-இவை ஐந்தும் நோய்கள்!'

இதற்கு கருணாநிதி தனது 'முரசொலி' மே 29, '59 இதழில் பெரியாருக்கு பதில் எழுதினார்: பார்ப்பன் நோய் என்றால் பொதுத் தேர்தலிலே எத்தனையோ பார்ப்பன்களை ஆதரித்தீர்களே, அதற்கு என்ன பெருள்? 2) பத்திரிகை நோய் என்றால் விடுதலை'யும் அந்த பட்டியலில் சேர்ந்து விடலாமா? 3) அரசியல் கட்சியும் நோயா? அத்தகைய கட்சியாகிய காங்கிரசிற்காக புயல் வேகப் பிரசாரம் செய்திருக்கலாமா நீங்கள்? 4) தேர்தலை நோயென்று எழுதுகிறீர்களே; சுயேச்சையாக தேர்தலில் நின்று வெற்றியும், தோல்வியும் பெற்றிருக்கிறார்களே அநேக திராவிடர் கழகத்தார்-அதற்கென்ன சொல்கிறீர்கள்?-இப்படி முதல் நான்கு குற்றச்சாட்டுக்களுக்கும் பதில் சொன்ன கருணாநிதி ஐந்தாவதான சினிமா பற்றிய குற்றச்சாட்டுக்கு பதில் சொல்ல 'பாயிண்டு' கிடைக்காமல்-நைசாக நழுவிக் கொண்டார்.

கருணாநிதி 'நாங்கள் சினிமாவிற்கு எழுதுகிற வசனம் சமுக விழிப்புணர்ச்சிக்கு பயன்படும்; அது வீணாய்ப் போகாது,' என்று ஒரு கூட்டத்தில் பேசினார்.

தமிழ் கலை தினசரிப் பத்திரிகை ஒன்று, கருணாநிதி சொன்னதை கேலிச் சித்திரமாக போட்டு, அண்ணாதுரை எழுதுகிற சினிமா வசனத்தை எல்லாம் கழுதை தின்பதாகக் கார்ட்டூன் வெளியிட்டது.

இப்படி அண்ணாத்துரையை விமர்சித்து கார்ட்டூன் வெளியிட்ட பத்திரிகையின் உரிமையாளருக்கு பின்னாளில் கருணாநிதி தனது அமைச்சரவையில் அமைச்சர் பதவி கொடுத்தார்.

(முற்றும்)

காணவில்லை...!

வயல் சூழ்ந்த அந்தச் சின்னஞ்சிறு கிராமத்தின் நடுவே கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கிறது மாதா கோயில். இயற்கையின் எழிலும் தென்றலின் சுகமும், இந்தக் கிராமத்துக்கே சொந்தம். இங்கு இந்துக்களும் கத்தோலிக்கர்களும் இணைந்து வாழ்வதற்குச் சிறப்பான காரணம் மாதா கோயில் சுவாமியாராகும். இவருடையபெயர் இம்மானுவேலாக இருந்தும் இக்கிராம மக்கள் அவரை 'சைக்கிள் சாமியார்' என்று அன்பொழுக அழைப்பது வழக்கமாகிவிட்டது. கிராமத்தில் என்ன நடந்தாலும் அது அவருக்குத் தெரியாமல் இருக்காது. மக்களுக்கும் சுவாமிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும். சமயச் சடங்குகள் தவிர்ந்த வேளைகளில், இவர் தனது சைக்கிளில் சென்று மக்களைத் தரிசித்து அவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்வார். அவர்களுக்கு ஆலோசகர், வைத்தியர், ஆசிரியர், வழக்குத் தீர்த்து வைப்பவர், எல்லாமே சைக்கிள் சாமியார் தான். இதனால் அவருடைய பெயரும், தொண்டும் பிரசித்தி பெற்று விட்டன. ஞாயிறு தோறும் மாதாகோயில் மக்களால் நிரம்பி வழியும். பூசை காண்பதில் மட்டுமல்ல சுவாமியைக் கண்டு கதைப்பதிலும் அவ்வளவு அன்பும் ஆர்வமும் அவர்களுக்கு.

அன்று வழமைபோல் ஆலயமணி பூசைக்காக ஒலித்தது. மக்கள் பயபக்தியுடன் கோயிலில் குழுமிவிட்டனர். சக்கிறிஸ்ரனை அந்தோனி மெழுகுவர்த்திகளை எரித்துப் பீடத்தில் பூசைக்கான ஆயத்தங்களைச் செய்து விட்டுப் போனான். ஆனால் சுவாமி பூசை சொல்ல வரவில்லை, நேரம் ஓடிக் கொண்டிருந்தது. அந்தோனி கோயில் மணியை மீண்டும் அடித்தான் சுவாமி வரவேயில்லை. எங்கும் பயங்கர அமைதி நிலவியது. கோயிலுக்குள் இருந்தவர்கள் எல்லாரும் முற்றத்துக்கு வந்து கூடினார்கள். கலவரம் அவர்கள் முகத்தில் அப்பிக்கிடந்தது. "மாதாவே எங்கள் சைக்கிள் சாமியைக் காப்பாத்தும்மா. அவருக்கு ஒரு விக்கினமும் வரக்கூடாது!" என்று பிரார்த்தனை செய்து விட்டு வெளியேறினார்கள்.

அந்தோனி சிந்தனையில் ஆழ்ந்தான். செய்வதறியாது குழம்பிய நிலையில் சுவாமியின் அறையை நோக்கி ஓடினான். கதவு சும்மா சாத்தியேகிடந்தது. அதைத் திறந்தபோது, அந்தோனி அதிர்ச்சியில் உறைந்து போனான். சுவாமியின் சாப்பாடு வைத்தது வைத்தபடியே இருந்தது. அவருடைய சைக்கிள் வைக்கும் இடமும் வெறுமையாக இருந்தது.

நேற்றுக்காலை ரவுண் பக்கம் போய் வள்ளிப்பாட்டியின் பேரனைப் பார்க்கப் போவதாகச் சுவாமி சொன்னது இப்போது அந்தோனியின் ஞாபகத்தில் உறைந்தது. வடபுலத்தில் நடக்கும் கொடிய யுத்தத்தில் தன் மகளையும் மருமகனையும் பலி கொடுத்துவிட்டுத், தன்பேரனுடன் கிழக்கு நோக்கி வந்து இந்தக் கிராமத்தில் தஞ்சம் புகுந்தவள் தான் வள்ளிப்பாட்டி. அவளுக்குப்புகலிடமும் ஆதரவும் கொடுத்தவர், இம்மானுவல் சுவாமியார். தன் பேரன் முருகானந்தனை எப்படியாவது படிக்க வைத்து ஆளாக்கிவிடவேண்டுமென்ற தனது ஆவலைச் சுவாமியிடம் வெளிப் படுத்தினாள். முருகானந்தன் அடுத்த ஆண்டு ஒ.எல். பரீட்சை எழுத வேண்டியவன். சுவாமி அவனை ரவுணில் உள்ள ஒரு பாடசாலையில் சேர்த்து விட்டு எல்லாப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார்.

-ரூபராணி-

பரீட்சைக்குச் சில நாட்களுக்கு முன்பு 'வள்ளிப்பாட்டி சுவாமின் காலில் விழுந்து பாடசாலைக்குப் போன தன் பேரனைக் காணவில்லை. வீடு திரும்பவில்லை' என்று கதறி அழுதாள். "எப்பிடியோ என் பேரனைக் கண்டு பிடித்துத் தாருங்கள் சாமி" என்று கெஞ்சி மன்றாடினாள். தான் ரவுணுக்குப் போய் பேரனைத் தேடிக் கண்டு பிடித்துத் தருவதாகப் பாட்டிக்கு சுவாமி ஆறுதல் கூறியதும், அந்தோனியின் நினைவில் உறுத்தியது. ஆனால் 'சுவாமி ஏன் இன்னும் திரும்பிவரவில்லை? பூசை செய்ய ஏன் வரவில்லை' என்பது தான் அந்தோனிக்குப் புரியாத புதிராக இருந்தது. அவன் கற்பனை பயங்கரமான பாதையை நோக்கி ஓடியது. அவன் மனம் எதையெதையோ எண்ணி நடுங்கியது. கோயிலுக்குள் சென்று முழந்தாட் படியிட்டு சுவாமிக்காகவும் முருகானந் தனுக்காகவும் வேண்டிக் கொண்டான். நேர்த்தியும் வைத்தான்.

ரவுணுக்குப் போய் ஆயர் அம்பு றோசிடம் செய்தியைத் தெரிவிப்பது தன் கடமை என அந்தோனி உணர்ந்தான். மரக்கறிக்கடை மயில்வானத்தின் சைக்கிளை எடுத்துக் கொண்டு ரவுணை நோக்கி ஓடினான். வழி நெடுகிலும் சுவாமியைப் பற்றி விசாரித்துக் கொண்டு சென்றான். எல்லோருடைய பதிலும் 'தெரியாது' என்ற சொல்லாகத்தானிருந்தது.

'சுவாமியைக் காணவில்லை' என்ற செய்தி நகரமெங்கும் காட்டுத் தீ போல் பரவியது. ஆயர் குருக்கள் நகரப் பெரியார்கள் எல்லாரும் ஒன்று திரண்டு நட வடிக்கை எடுத்தார்கள். நாட்கள் நகர்ந்தன. தேடுதல் தொடர்ந்தது. போலிஸ், இராணுவம் என்று அலைந்து திரிந்தார்கள். அவர்களோ "நாங்கள் சாமியை காண வில்லை!" என்று கையை விரித்து விட்டார்கள். அங்கு சாமியாரின் சைக்கிளைக் கண்டதாக யாரோ ஒருவன் சொன்னான். ஆனால் ஐயோ பாவம்! சில தினங்களில் அந்த யாரோ ஒருவனையும் காணவில்லை.

விடியல்

ஆரையம்பதி பூ.இதயரெத்தினம்.

ஊரே உறங்கிப்போயிருந்த நிசப் தமான அந்த இரவில், படுக்கை மில் புரண்டுகொண்டிருந்த மீனாவுக்கு அமுதமுது கண்கள் குளமாகியிருந்தன. வாழ்வில் எந்தப்பெண்ணுக்குமே இப்படியொரு நிலமை வரவே கூடாது.

காதலனா...? குடும்பமா...? என எந்தத் தீர்மானமும் எடுக்கமுடியாமல் இருதலைக் கொள்ளி எறும்பாய் தவித்தவள் 'இறைவா ஏன் இப்படி என்னை வதைக்கிறாய்?' எனத் தனக்குள் அழுதாள். இரு துருவங்களாகி விட்ட தன் குடும்பத்தாரும் காதலனும் தானே அவள் துயரத்துக்கு காரணமான வர்கள். இனிமையான காதல், அவள் வாழ்வில் இடியாய் மாறி இதயத்தை தாக்கிய நினைவுகளை அவளால் இன்னும் மறக்க முடியவில்லை. இந்த துயரத்துக்கு முடிவு காண நியாயம் தேடியது அவளுள்ளம்.

'பிரவீன் என்னை விரும்பியபோது, வீட்டாரின் விருப்பம் கேட்டுத்தானே அவரைக்காதலித்தேன். எல்லாக்காதலர்களையும் போல் இருவரும் உல்லாசமாக சுற்றித் திரிந்தோம். எனக்குத்தான் அவர் என்ற அசையாத நம்பிக்கைதானே எனக்கு அந்த தைரியத்தை கொடுத்தது. பிரவீன் ரொம்பவும் நல்லவர்தானே? மனசாட்சிக்கு மதிப்புக் கொடுப்பவரல்லவா அவர்?'

"மீனா இந்த ஜென்மத்தில் மட்டுமல்ல, ஏழேழு ஜென்மத்திலும் நீதான் எனக்கு மனைவி!" என்பாரே அந்த இனியவர், எப்படி புயலானார்? வாரம் இருதடவை வாஞ்சையோடு என்னைப் பார்க்க ஓடி வருவாரே! இப்போது என் வீட்டு வாசலுக்கும் வராதபடி செய்தது யார்? பிரவீனுடைய வீட்டாரோடு வீணாக பிரச்சனைப்பட்டு அவரை சங்கடத்துக்குள்ளாக்கியது யார்? என் வீட்டார்தானே? இந்த நியாயத்தை இவர்களிடம் கூறமுடியுமா? இறுதியாகக் கூட "மீனா நான் ஒனை மட்டும் தான் நேசிச்சேன் ஒன்னோட சொத்து சுகங்கள இல்லே. நீ மட்டும் ஏன்னோட வந்திடு," என்றாரே! அவரை எப்படி மறப்பேன்?

பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்து ஆளாக்கியவர்களை பிரிந்து, பிரவீனுடன் போகாமல் மனதுக்குள் ஊமையாய் தவித்தேனே, எதற்காக மௌனமாய் இருந்ததற்காக என்வீட்டார் மாப்பிள்ளை வேறு பார்ப்பது எப்படி நியாயமாகும்? மனதுக்குப் பிடித்தவருடன் வாழ்வதுதானே மங்கல வாழ்க்கை? காதலித்தவனை கைவிட்டு கட்டாயத்தின் பேரில் இன்னொருவனுக்கு கழுத்தை நீட்டுவதைவிட உயிராய் நேசித்தவனுடன் ஒன்றாய் சேர்பவள் தானே உத்தமி? உள்ளத்தை ஒருவனுக்கும் உடலை இன்னொருவனுக்கும் ஒப்படைத்து கறை படிந்த பலர் வாழ்வின் துயரத்தை நேரிடையாய் கண்ட வளல்லவா நான்? பெண் என்பவள் என்றோ ஒரு நாள் பெற்றவர்களை பிரிந்துதானே ஆக வேண்டும்? இரண்டு வருடங்களாக எனக் காகவே காத்திருக்கும் பிரவீனுக்காக-அது இருக்கட்டுமே? பிரவீன் சுரம் பற்றி அவருக்கே கழுத்தை நீட்டுவதுதான் சரியானது?

காலங்கள் மாற்றாத காயங்கள் காசினியில் ஏதும் இல்லையல்லவா? என்றோ ஒரு நாள் இந்தக் குடும்பங்கள் இரண்டும் ஒன்றாகலாமல்லவா?

மீனாவின் மனதில் தெளிவான சிந்தனைகளால் தீர்க்கமான முடிவு பிறக்க, நாளைய விடியலை எதிர்பார்த்து கண் முடித்தூங்கினாள் அவள்.

கண்டெழுத முடியாத நறுங்கவிதை...

தமிழோவியன்

தந்தை தவறி இப்போது தான் திவசம் நடந்தது. அதற்கிடையில் அன்புத்தாயாரும் தன்னை விட்டு ஒடிவிட்டார். அப்படியாகில் அவன்-இனி...?

எனது முத்த மகளுக்கு அப்போது வயது பன்னிரண்டு. "பாட்டி! பாட்டி!" என்று சதா பாட்டியின் பின்னாலே ஓடிக் கொண்டே இருப்பாள்.

"எழிலரசி! எழிலரசி!" என்று கூப்பிட்டபடி, மகளை கொடங்கையிலே அணைத்துக் கொள்வது, பாட்டியின் வழக்கம்.

அந்த ஆர்வம், அன்பு கொண்ட பாட்டி, இன்று எங்கே? அவரை அழைத்துக் கொண்டு எங்கேயோ ஒடிப்போய் விட்டார்களோ...?

"மகள் எங்கே நம்ம பாட்டி அம்மா?"

"அதுதான் நானும் தேடிப்பார்க்கின்றேன்!"

"நீ, என்னதான் தேடினாலும், அவளை எங்கேயம்மா பார்க்கப் போறே?"

"எப்படியாவது, என் பாட்டியை நான் பார்க்கவேண்டும்?"

"பாட்டி, மிகத் தூரப்பயணம் போயிட்டா. அதனாலே வருகிறது ரொம்ப நாளாகும்."

"பாட்டி! பாட்டி!"

"எழிலரசி, இப்படி வாய் உளறிக் கொண்டே இருக்கிறா? என்ன செய்வது என்று எனக்கே புரியவில்லை!"

"எல்லாம் கடவுள் விட்ட வழியே தான் நடக்கும்!" என்று மகளை மார்போடு அணைத்துக் கொண்டான். பாட்டி கடிதத்தை வாசிப்பதும், சற்று யோசிப்பதும், பின்னர் கடிதத்தை பழையபடியே மடித்து, பத்திரமாக பெட்டியில் வைப்பதும் நாளாந்த வழக்கம் வீட்டில்.... 'கண்டெடுத்தேன் உயிர்ப்புதையல்! அதோ வந்து விட்டாள்! கண்டெழுத முடியாத நறுங்கவிதை அவளே!'-என்ற பாரதிதாசனாரின் பாடலை தனது காதலிக்கு ஒப்பிட்டு காட்டி, அவர் எழுதிய மடல் தான், இன்னும் எங்கள் கையில் நடமாடுகின்றது.

உயிர்ப் புதையலாக அவள் வந்து விட்டாள்! அவளே கண்டெழுத முடியாத நறுங்கவிதை! இப்படியெல்லாம் தனது காதலியை பன்னிப் பன்னி பாடியதை அவனது தந்தையார் தனது தாயாருக்கு எடுத்தாண்ட அழகை-அவனால் எப்படி எடுத்துக்காட்ட இயலும்...

'அவளே உயிர்ப் புதையலாக அவரின் முன் காட்சி தருகிறாள். பிறகு என்ன சொல்ல முடியும்? தான் வயிற்றில் குடிகொண்டிருந்த போது, தனது தந்தை யார் தனது தாயாருக்கு தனது அன்பை அள்ளிச் சொரிந்திருந்த மடலே, தனது தாயார் எடுப்பதும், பார்ப்பதும், வைப்பதுமாக வைத்திருந்த திருமுகமாகும். தான் சமுதாயத்தில் மிகவும் உயர்ந்த குலத்தில் பிறந்தவன். ஆனால் தான் காதலிக்கும் மங்கையோ, மிகவும் பின் தங்கிய குலத்தில் பிறந்தவள்.

இருவரும் கட்டுக்குலைத்து, கை கோர்த்து ஓடியது, ஒரே ஆச்சரியத்தை உண்டு பண்ணியது.

மகன் வயிற்றில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற போது, தான் உணர்ந்து கொண்ட அத்தனையும், அன்பையும் மொத்தமாக அழகுற எடுத்துக் காட்டுவதே அந்தக் கடிதங்களாகும். தனது பேரப்பிள்ளையை மிகவும் பாசத்தோடு வளர்த்தவர் அந்தப் பாட்டி. அவளை விட்டுப் பிரிந்து விட்ட சோகத்தில் தான் எழிலரசி ஒரேயடியாகக் குழறுகின்றாள். அத்தை தவறிய போது அவளுடைய பெட்டியைத் திறந்தாள் அன்னம்மாள். அப்போது அவளது கையில் அகப்பட்டது தான் பல கடிதங்கள். அதிலே ஒன்று தான் 'கண்டெழுத முடியாத நறுங்கவிதை அவளே!' என்று பாரதிதாசனாரின் பாடல் அடங்கிய கடிதமாகும்.

தெல்லிப்பளையில் இருந்து இருவரும் கச்சிதமாகத் திட்டமிட்டு நடையைக் கட்டியதற்குள்ளே தான், அவர்களின் வாழ்வே அடங்கிக் கிடக்குது.

அவர் பதுளை கச்சேரிக்கும், அம்மையார் பதுளை அந்தோனியார் மகளிர் பாடசாலைக்கும் மாறி வந்து சேர்ந்தனர். மகன் சிங்கராசியில் பிறந்தவன். வாரிசு மிகவும் மட்டம். அதனால், ஒரே பிள்ளையோடு 'பிள்ளைகளே வேண்டாம்' என்று, கட்டுப்பாடாக நடந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் குலபேதம் தலை விரித்தாடிய நேரம். தாழ்ந்தகுலப் பெண்ணை தனது தந்தையார் மணந்தார் என்று கேள்விப் பட்டாலே போதும். விளைவுகளைச் சொல்லாமலேயே புரிந்து விடும்.

எனது தந்தையும் தாயும் மகிழ்ந்து, மனமொன்றித்து சிந்தை களித்த நாட்களையும்-சிறகடித்துப் பறந்த திருநாட்களாகவே நான் மதித்து வருகின்றேன்.

என்தாயும் என்னைவிட்டு ஒடிவிட்டாள். இனி இறைவன் விட்ட வழி எப்படியோ? அப்படித்தான் அனைத்தும் நடக்கும்.

"எங்கே என் கண்ணா! இதோ பாரு, உங்க பாட்டி வெகு சீக்கிரமா திரும்பி வருவா? நீ சாப்பிடு அம்மா..."

"அம்மா, பாட்டி நிச்சயம் வருவாளே..?"

"ஆமாண்டா கண்ணு. நிச்சயம் வருவா...."

இப்படி கணவனும், மனைவியும் படாத பாடுபட்டுக் கொண்டு, எழிலரசிக்கு கெஞ்சிக் கதறி சோறூட்டுகிறார்கள்.

பெற்று வளர்த்தாள் என்பதைவிட, பெற்றுப் போட்டாள் என்பதுதான் பொருத்தும்.

குழந்தைக்கு நேரத்துக்கு பால்! நேரத்துக்குத் தூக்கம்! நேரத்துக்குச் சாப்பாடு!...

இப்படி பலவகையிலும், தனது பெற்றோர்கள் தனது குழந்தைக்கு ஆளாக மாறி, தாலாட்டி வளர்த்ததை எண்ணி மனங்கலங்கினான்-அவன்!

தனது தாயார் வாசித்த அந்தக் கடிதங்களை, அவனும் வாசித்தான். தனது தந்தையார் தனது தாயின்மீது காட்டிய பாசத்தை, எப்படி எடைபோடுவது? எதனை அளவிட்டுச் சொல்வது?

அவனால், வாய் திறந்து பேச இயலவில்லை.

ஆண்டவன் விட்ட வழியே அனைத்தும் நடக்கும். அந்தக் கடிதங்கள் அத்தனையும் தங்களது பரம்பரைச் சொத்தாக மிளிரும். இப்படி யோசனையில் ஆழ்ந்தான்!

மனித உணர்வுகளின் வார்ப்பாக-அன்புறவின் ஆனந்த சிமிழாக எழுதப்பட்ட காவிய வரிகளாக விளங்கின அந்தக் கடிதங்கள்.

எண்ணற்ற மனித உணர்வின் எல்லையில் நின்று கொண்டு, துள்ளிவரும் ஆனந்தக் கூத்தின் ஆட்டத்தைக் கண்டு ரசிப்பது போன்றதோர் உணர்வு நமது நெஞ்சத்திலே நடமிடுவதை நாம் உணரலாம்.

காதலினால், கசிந்த நெஞ்சம் தனது ஆதாரத்துணையை தேடி அலைகின்ற வேளையிலே, அந்தத் துணையே நம்மை எதிர்கொள்ளும் சந்தர்ப்பம் வாய்த்தால், எப்படி இருக்குமோ, அப்படியானதோர் மனோநிலை. 'கண்டெழுத முடியாத நறுங்கவிதை அவளே'-என்ற இந்தக் கவிதை வரிகளாகவே, அவள் நமது முன் காட்சி தருகின்றாள்.

'கண்டெடுத்தேன் உயிர்ப்புதையலாக,' அதோ வந்துவிட்டாள். கண்டெழுத முடியும் நறுங்கவிதை அவள் தான்.

தனது தந்தை தாயாரைப் பாராட்டி எழுதிடப் பயன் பட்ட பாடல் வரிகளை அவனது நா ஓயாது உச்சரித்தது.

எழிலரசியைத் தழுவியவாறே தனது மனைவி-அன்னம்மாள் வந்தாள்.

மூவருமாக முடிந்துபோன கணக்கைக் கூட்டிப்பார்த்தார்கள்.

இலக்கிய நயம்



என்ன சுதந்திரம் வேண்டிக் கிடக்குது?

"சரியெண்டு நினைக்கிறதை வெளிய சொல்லேலாமல் கிடக்கு. சிந்திக்கவே பயந்து நடுங்கவேண்டியிருக்கு. இந்தத் திறத்தில மனித உரிமை தினம் வேற...." வரும்போதே எரிச்சலை வாய்வழி கொட்டியபடி வந்தான் கோபாலன்.

"என்ன கோபால், புறுபுறுத்துக் கொண்டே வாறாய்.... என்ன பிரச்சனை?" பாடிக் கொண்டிருந்த வானொலியை சற்று தணித்து வைத்துவிட்டு, புன்முறுவலோடு வரவேற்றான் பிரேம்.

"நான் சரியெண்டு நினைக்கிறதைச் சொல்லேலாது, செய்யேலாது எண்டால் பிறகென்ன சுதந்திரம், மனித உரிமை...?"

"என்னடா என்ன சுதந்திரம் கெட்டுப்போய் வந்து நிற்கிறாய்?"

எரிச்சல் வற்றாமலே கோபாலன் இவனைப் பார்த்தான். பிறகு கேட்டான். " ஒரு நூறு பேரையாவது சுட்டுத்தள்ளினால்தான் இந்த நாட்டில் பிரச்சனை ஒயும். செய்யட்டுமா?"

பிரேம் சிரித்தான். "அதுக்குப் பலநூறு மடங்கு இங்கே செய்தாச்சு. எதுவும் நிக்கேல்ல. தவிரவும், மற்றவர்களை சமுதாயத்தைப் பாதிக்கும்படியாக எதையும் செய்ய பேச உனக்கு உரிமை இல்லை. உன் கைத்தடியைச் சுழற்றுவது எல்லாம் எதிராளியின் மூக்கு நுனிவரைதான்.... தெரியாதா?"

"அப்ப, சமுதாயத்தில் இருக்கிற மற்றவனெல்லாம் என்னைப் பாதிக்கிறமாதிரி எதையும் செய்து கொண்டிருக்கலாமா? நான் சொந்த ஊரில் வாழேலாது. சொந்தபந்தத்தோடு இருக்கேலாது. 'இந்தச் சண்டை எனக்குப் பிடிக்கேல்ல' எண்டு சொல்லேலாது. எல்லாத்தையும் செய்து என்னைத் துன்புறுத்திக் கொண்டிருப்பியள். நான் தட்டிக்கேட்பன், மிஞ்சினால் தட்டவும் செய்வன். எண்டு வெளிக்கிட்டால் எனக்கு உரிமை இல்லை எண்ணுவியள்...."

"சமுதாயத்தில் வாழும் தனிப்பட்ட ஒருத்தன் தனக்குச் சரி எண்டு பட்டதைச் செய்ய முடியாது. அது சமுதாயத்தைப் பாதிக்க விடேலாது"

"அப்ப ஒரு குழுவாய் அல்லது அரசாங்கமாய் சமுதாயத்தைப் பாதிக்கிற எதையும் செய்துகொண்டிருக்கலாமா: என்ன கதைக்கிறாய் நீ?"

"பெரும்பாலான மக்களின் கருத்தை, நலன்களைப் பிரதிபலிக்கிற ஒரு அமைப்பு செய்யிறதை தனிமனிதன் தன்ரை கையில எடுக்கேலாது கோபால்...."

"என்ரை விருப்பத்துக்கு எதிராய் என்னை ஒடுக்கிறதுக்கு ஒரு அமைப்புக்கு எங்கையிருந்து உரிமை வருது?"

"மக்களின் பரவலான அபிப்பிராயத்தைப் பிரதிநிதிதப் படுத்துவதிலிருந்து...."

"செய்யிற கொலைகள் எல்லாத்துக்கும் நீ சொல்ற பரவலான அபிப்பிராயத்தை எப்படிப் பெற்றுக் கொள்ளுகினம் எண்டு விளங்கேல்லையே...?"

"அதுக்காக? ஒவ்வொரு தனி மனுசனும் தனக்குச் சரியெண்டு படுறபடி செய்யலாம் எண்டு விட்டுவிடலாமா?"

"ஒரு தனி மனிதனின் உரிமைகளையெல்லாம் பறிக்கிற குழு வன்முறையைச் சரியெண்டு சொல்லவாறாய் நீ. ஏகாதிபத்தியங்கள் தங்கள் காலனி ஆதிக்கத்தை நியாயப் படுத்தச் சொல்றதும் இதுதானே! 'நாங்கள் மற்ற நாடுகளுக்குப் போய் அந்த மக்களுக்கு நல்லது கெட்டது பற்றித் தெளிவு படுத்தவேணும். அவையெல்லாம் எங்களைப் போல் நாகரிகமடையாமல் காட்டுமிராண்டித்தனமாய் இருக்கினம்' எண்டதுதான் அவையும் சொல்லும் காரணம். இன்னுஞ் சொன்னால், பெண்கள் முகத்திரை போட்டுக் கொண்டு நடப்பது ஒடுக்குமுறையின் அடையாளம் எண்டு நீங்கள் பலர் சேர்ந்து ஒரு அமைப்பாய்த் தீர்மானிச்சால், உடனே வன்முறையைத் தொடங்கியிடலாம். அந்த கொஞ்சப் பேர் தங்கட கலாசாரத்தை விருப்பத்தை பேணிக் கொள்ளுறதைச் சிதைக்கிற உரிமை பெருங்குழுவாயிருக்கிறதால உங்களுக்கு வந்திடுமா?"

"ஒத்துக் கொள்கிறேன். சரி பிழை என்கிறதெல்லாம் சமுதாயத்திற்குச் சமுதாயம் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடலாம். காலத்தை-இடத்தைப் பொறுத்தெல்லாம் மாறுபடலாம். ஆனால் சமுதாய மரபிலிருந்து, ஒட்டத்திலிருந்து மீறி வாழ, தன் விருப்பம் போலச் செயல்களைச் செய்ய உரிமை வழங்க முடியுமா? அது சிரமமாய்த் தானே இருக்கிறது....."

"அன்றைய காலத்தில் தனித்துக் கருத்துக்களைப் பேசித்திரிந்த சித்தர்களை ஒதுக்கிய சமூகம் இண்டைக்கு ஏற்றுக் கொள்ளேல்லையா? செல்லம்மாவுக்கும் கனகலிங்கத்துக்கும் சம உரிமை குடுத்த பாரதியை அவன் வாழ்ந்த காலத்துச் சமூகம் ஒத்துக்கொள்ளேல்லை. இண்டைக்கு அவனைப் பெரிய ஆள் எண்டு கொண்டாடுகிறம் தானே?"

"சரி, சரி. பிரச்சனைகளைத் தனித்தனியாகவும் பார்க்க வேணுமெண்டதை ஒத்துக் கொள்ளலாம். ஆனால், திருத்தொண்டர் புராணத்தில் வருகிற இயற்கையார் என்ற நாயனார் போல தன் சுதந்திரத்தைப் பயன் படுத்த நினைத்தால் அதை அனுமதிக்காமலிருக்கவும் ஒரு பொதுமுடிவு வேணும்தானே?"

"ம்.... அவருடைய பெயரே உலகியல் வழமைக்கு மாறானவர் எண்ட பொருளில் காரணப் பெயராய்த்தான் இருக்கு. வஞ்சக சடாமுடி வேடத்தில் வந்தவர், கேட்டது மனைவியைத்தான் என்று அறிந்ததும், தன்னால் கொடுக்கக் கூடியதைக் கேட்டுவிட்டாரே எண்டு பெரிசாய் மகிழ்ந்து போனாராம்....

'இது எனக்கு முன்பு உள்ளதே வேண்டி எம்பிரான் செய்த பேறு என்கென்னாக் கதுமெனச் சென்று தம் மனை வாழ்க்கைக் கற்பு மேம்படு காதலியாரை விதி மணக்குல மடந்தை! இன்று உன்னை இம் மெய்த்தவர்க்கு நான் கொடுத்தனன்....'

எண்டு குடுத்தும் விடுகிறாராம். 'மன்னு காதல் உன் மனைவியை வேண்டி இங்கு வந்தேன்' எண்டு சொன்னவனை இழுத்து நாலு சாத்து சாத்தாமல், மனுசியின் உரிமைகளைப் பற்றிக் கவலையே படாமல் என்ன கடவுள் தொண்டு வேண்டிக்கிடக்கு?"

"ஆ.... நான் சொல்ல வந்தது இதுதான்! தன் விருப்பம், நம்பிக்கை எண்ட கோதாவில் தன் உரிமை எண்டு நினைச்சு நாயனார் ஒருத்தர் செய்த காரியத்தை ஊரவர்கள் எதிர்க்கின்றார்கள் தானே?

'இனைய தென்று யாரொ செய்தார்? இயற்கை பித்தனானால் புனையிழை தன்னைக் கொண்டு போவதாம் ஒருவன்.....?'

எண்டு கொதித்தெழுகிறார்கள் தானே? 'கூடவே மடிவதன்றிக் கொடுக்க யாம் ஒட்டோம்....' எண்டு சூளுரைக்கிறார்கள் இல்லையா? அங்கே இயற்பகையாரின் உரிமை என்பது ஊரவரின் நோக்கிலும்-ஏன் மனைவியின் நோக்கிலும் கண்டனத்துக்குரியது தானே? இப்படித்தான் ஒரு பொது முடிவுக்கு நாம் வரவேண்டியிருக்கு...."

"அதுசரி. அதுக்காக, ஊரை-மக்களை பேசவோ ஒன்று திரளவோ விடாமல், உங்களுக்காகத்தான் இந்தக் கொலைகளும் யுத்தமும் துன்புறுத்தல்களும்... இதெல்லாம் பொது முடிவுதான் எண்டு அரசாங்கமோ அல்லது ஒரு அமைப்போ சொல்லுறதை எப்பிடிச் சமாளிக்கிறது? அதுதானே நான் சொன்ன பிரச்சனை... உனக்கு விளங்குதா பிரேம்?"

"ம்.... சிக்கல்தான்! மனித உயிர்களை இப்படி மலிவான முறையில் பலிபோடுவதை ஏற்றுக் கொள்ள முடியாததான். அதேபோல, வேறொரு அந்நிய நாட்டில் இப்படி மனிதர்களைக் கொல்லுகிறார்கள். அந்த மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக அங்கே படையெடுத்துச் செல். அந்த நாட்டை

தருவது முழுமதியன்

அடிமைப்படுத்தி, அந்தக் கொலைகளை நிற்பாட்டு' என்று என்னிடம் சொன்னால் என் நிலமை இன்னும் சிக்கலாகி விடும். மனிதர்களைக் காப்பாற்றுவதற்காக மனிதர்களைக் கொல்லுவதை நியாயம் என்று மதங்களும், அற நூல்களும் எனக்குள் போதித்து வைத்திருப்பதிலிருந்து நான் சிந்திக்கிறேன். ஆனால், அப்படியேதான் மனிதர்களைக் கொல்லுகிறவர்களுக்கெல்லாம் அவர்களுக்கு, அவர்களைச் சார்ந்தவர்களுக்கு நியாயமான காரணங்களும் இருக்கக்கூடும் என்று யோசித்தால்.... எல்லாம் குழம்பிப் போகிறது....."

"ஆ.... இப்ப என் குழப்பத்துக்கு நீயும் வந்து சேர்ந்திருக்கிறாய். எல்லாக் கொலைகளையும், வன்முறைகளையும் நிற்பாட்ட வேணும் எண்டு கேட்கிறபோது எனக்குச் சரியெண்டு படும் கொலைகளையும் ஆதரிக்க முடியாமல் போகுது. கொல்லவரும் பசுவையும் கொல்லாமல் எண்டு சொல்லக் கூச்சம் வருது. வள்ளுவனிட்டைத் தான் சரண்புக வேண்டிக்கிடக்கு. மற்றவர்களால் எனக்கு ஏற்படும் துன்பத்தை நான் உணர்ந்தவனாமிருந்தால் அந்தத் துன்பங்களையெல்லாம் எந்தக் காரணத்தைச் சொல்லியும் நான் அவர்களுக்குத் தர நினைக்கக் கூடாது...."

தன்னுயிர்க் கின்னாமை தானறிவான்
-என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

(குறள் : 318)

ஸ்போர்ட்ஸ்

டெஸ்ட் போட்டிகளில் ஹட்-ட்ரிக் எடுத்தவர்கள்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் கிளென் மக்ராத் ஹட்-ட்ரிக் எடுத்தார். இதன் மூலம் இவர் டெஸ்ட் போட்டிகளில் ஹட்-ட்ரிக் எடுத்த 28வது வீரராகத் திகழ்கிறார்.

மேற்கிந்தியத் தீவுகளுடன் முதல் டெஸ்ட்டில் இருமுறை ஹட்-ட்ரிக் எடுக்கும் வாய்ப்புக்களை நழுவ விட்ட மக்ராத் இரண்டாவது போட்டியில் ஷேர்வின் கம்பல், பிரையன் லாரா, ஜிம்மி அடம்ஸ் ஆகியோரை அவுட்டாக்கியதன் மூலம் ஹட்-ட்ரிக் எடுத்தவர்கள் பட்டியலில் இணைந்தார்.

அடுத்தடுத்த மூன்று பந்துகளில் மூன்று விக்கெட்டுகளை வீழ்த்துவதை ஹட்-ட்ரிக் என் பார்கள். டெஸ்ட் போட்டிகளில் ஹட்-ட்ரிக் எடுத்தவர்கள் விவரம் வருமாறு:

வீரர்	அணி	எதிரணி	திகதி
1. எ.ப். ஸ்.பொ.பேர்த்	அவுஸ்திரேலியா	இங்கிலாந்து	02-01-1879.
2. டபிள்யூ. பேட்ஸ்	இங்கிலாந்து	அவுஸ்திரேலியா	20-01-1883.
3. ஜே.பிரிக்ஸ்	இங்கிலாந்து	அவுஸ்திரேலியா	02-02-1892.
4. ஜி.லோமான்	இங்கிலாந்து	தென்னாபிரிக்கா	14-02-1896.
5. ஜே.ஹேர்ன்	இங்கிலாந்து	அவுஸ்திரேலியா	30-06-1899.
6. எச்.ட்ரம்பிள்	அவுஸ்திரேலியா	இங்கிலாந்து	04-01-1902.
7. எச்.ட்ரம்பிள்	அவுஸ்திரேலியா	இங்கிலாந்து	08-03-1904.
8. ஜே.மத்தியூஸ்	அவுஸ்திரேலியா	தென்னாபிரிக்கா	28-05-1912.
9. ஜே.மத்தியூஸ்	அவுஸ்திரேலியா	தென்னாபிரிக்கா	28-05-1912.
10. எம்.அலொம்	இங்கிலாந்து	நியூஸிலாந்து	10-01-1930.
11. ரி.கொடாட்	இங்கிலாந்து	தென்னாபிரிக்கா	26-12-1938.
12. பி.லோடர்	இங்கிலாந்து	மேற்கிந்தியத் தீவுகள்	25-07-1957.
13. கே.க்ளைன்	அவுஸ்திரேலியா	தென்னாபிரிக்கா	03-01-1958.
14. டபிள்யூ. ஹோல்	மேற்கிந்தியத்தீவுகள்	பாகிஸ்தான்	29-03-1959.
15. ஜி.கிரிபின்	தென்னாபிரிக்கா	இங்கிலாந்து	24-06-1960.
16. எல்.கிப்ஸ்	மேற்கிந்தியத்தீவுகள்	அவுஸ்திரேலியா	30-01-1961.
17. பி.பெத்தரிக்	நியூஸிலாந்து	பாகிஸ்தான்	10-10-1976.
18. கொட்னி வோல்ஷ்	மேற்கிந்தியத்தீவுகள்	அவுஸ்திரேலியா	20-11-1988.
19. மோவ் ஹியூஸ்	அவுஸ்திரேலியா	மேற்கிந்தியத்தீவுகள்	04-12-1988.
20. டேமியன் பிளேமிங்	அவுஸ்திரேலியா	பாக்கிஸ்தான்	09-10-1994.
21. ஷேன் வோர்ன்	அவுஸ்திரேலியா	இங்கிலாந்து	29-12-1994.
22. டொமினிக் கோர்க்	இங்கிலாந்து	மேற்கிந்தியத்தீவுகள்	30.07.1995.
23. டரன் கொ.ப்	இங்கிலாந்து	அவுஸ்திரேலியா	02-01-1999.
24. வாஸிம் அக்ரம்	பாகிஸ்தான்	இலங்கை	06-03-1999.
25. வாஸிம் அக்ரம்	பாகிஸ்தான்	இலங்கை	14-03-1999.
26. நுவான் சொய்சா	இலங்கை	ஸிம்பாப்வே	26-11-1999.
27. அப்துல் ரஸாக்	பாகிஸ்தான்	இலங்கை	23-06-2000.
28. கிளென் மக்ராத்	அவுஸ்திரேலியா	மேற்கிந்தியத்தீவுகள்	01-12-2000.

சிந்தியா பதில்கள்

'மல்லிகை' அவுஸ்திரேலிய சிறப்பு மலர் பார்த்தீர்களா?

வை.முகுந்தன், கொழும்பு-06.

பார்த்தேன். 'மல்லிகை' என்று யாரும் சொன்னால், வாசமிகும் பூ ஒன்று ஞாபகத் திற்கு வருவதற்கு முன் முப்பதைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையில் வெளிவந்துகொண்டிருக்கும் சஞ்சிகையே நம் நினைவில் வரும்படியாகச் செய்திருப்பது டொமினிக் ஜீவா அவர்களின் சாதனைதான். ஆனால் எந்த சஞ்சிகையும் சிறப்பு மலர்கள் போட்டால் எனக்கு அலர்ஜி. ஏதோ பள்ளிக் கூட Souvenir ஐப் படிப்பது போல, சுத்திச் சுத்தி ஒரே ரகமான தகவல்களை விழுங்கிக் கொண்டிருப்பது எனக்கு உவப்பாயிருப்ப தில்லை. சிறப்பு மலர்கள் வெளியிடுவது வாசக வட்டத்தைப் பரவலாக்க ஒரு வேளை உதவலாம். ஆனால் வாசிப்பனுபவத்திற்கு இதில் தெரிகிற வாய்ப்பாட்டுத்தனம் இடையூறு தான்.

ஆனைமிறவு முகாமை அழித்ததோடு யுத்தம் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது போல் தெரிந்தது. பிறகு, இஸ்ரேலிய ஆயுதங் கள் வந்தவுடன் அரசாங்கத்தின் பக்கம் திருந்தது. இப்போது மீண்டும் யுத்த மேலாண்மை புலிகள் வசம் போல் தெரிகிறது. இப்படி மாறி மாறி நகரும் யுத்தத்தின் போக்குப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?

இ.திவ்யரூபன், திருகோணமலை.

நரி வலம் போனாலும் சரி இடம்போனாலும் சரி, நம்மீது பாய்ந்து பிடுங்காமல் இருக்கக்கூடாதா?

தொலைபேசி மூலம் தொல்லைப்படுத்தும் அரட்டையர்களை என்ன செய்யலாம்?

ரி.ரி.பானு, தம்பளை.

தொல்லைபேசினால் துண்டித்துவிட வசதியாகத்தானே அது கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது!

சிந்தியா, மனிதப் பண்பில்லாதவர்களை மரம் என்று சொல்லலாமா?

ஜே.கௌரி, மட்டக்களப்பு.

சொல்வதற்கு முன் கொஞ்சம் யோசியுங் கள். நின்றால் மரம்; விழுந்தால் விறகு; எரிந் தால் கரி; புதைந்தால் வைரம்... மனிதனோ, நிற்பது இன்னொருவனை வீழ்த்தி அவன் மேல்; விழுவது அவன் காலை வாரிவிட; எரிவது அவன் முன்னேற்றம் பொறுக்காமல்; புதைவது பொறாமை என்னும் சேற்றுக்குள்....

மரம் மண்ணுக்குப் பாதுகாப்பே தவிர, பாரம் அல்ல!

தமிழ்ப் பின்னணிப் பாடகர்களில் எஸ்.பி. பாலசுப்பிரமணியத்தின் இடத்தை நிரப்புவது உன்னி கிருஷ்ணனா, உன்னி மேனனா, ஹரிஹரனா, சங்கர் மகாதேவனா இவர்களில் யாரால் முடியும்?

ராம்குமார், தெமட்டகொட.

'வா மச்சான் வா வண்ணாரப்பேட்டை' என்று சந்தியில் பாடும் சாராயப் பாட்டா? அல்லது 'சங்கரா நாத சொரூபா...' என்ற சங்கராபரணமா? 'ஆயர்பாடி மாளிகை'யா? அல்லது 'மண்ணில் இந்தக் காதலா', 'பொட்டு வைத்த முகமா', 'பொன்மாலைப்

பொழுதா'... எந்த மேடையென்றாலும் இலகு வாக ஏறிச் சிம்மாசனம் போட்டு அமர்ந்து கொள்ளும் பாட்டுத்தலைவன் அவர். பாடிக் கொண்டே இடையில் ஒரு வரியை போதைச் சிரிப்பாக்கி விடவும் இப்போது தெனாலியில் 'வாசமே' என்பதையே இவ்வளவு நீட்டிக் குழைய வைக்க முடியுமா என்று வியப்பாக்கி விடவும் அவர்தான் மன்னர். அவர் இருந்த 'இடத்தை' மட்டுமல்ல, அவரது குரல் பய னம் செய்த இடத்தையும் இன்னொருவர் நிரப்புவது கடினம்.

நக்மாவின் தங்கை போல சிம்ரானின் தங்கையும் தமிழ்த் திரையுலகில் கொடி பறக்க விடுவாரா?

எம்.எம்.முஸம்மில், குருநாகல்.

'மா'வை மிஞ்சியது 'கா'. 'ன்'ஐ மிஞ்சுமா 'ல்' என்பதை அறிய 'பார்வை ஒன்றே போதுமே' வரட்டும்.

வாழ்க்கையில் இதுவரை விரும்பியது எதுவுமே கிடைக்கவில்லை. இருந்தும் வாழ்ந்துகொண்டிருக்கும் என் போன்று துரதிர்ஷ்டசாலிகளுக்கு என்ன சொல்வீர்கள்?

முருகையா புஷ்பலதா, மடுல்சீமை.

வாழ்க்கையின் மர்மசுவாரஷ்யம் அது தான். மறைந்த கவிஞர் ஷண்முக சுப்பை யாவின் மிக எளிமையான கவிதை ஒன்ற இந்த மர்மப் புதிரை அழகாய்ச் சொல்கிறது. கவிதையைப் பாருங்கள்:

அணைக்க
ஒரு அன்பில்லா மனைவி
வளர்க்க
இரு நோயுற்ற சேய்கள்
வசிக்க
சற்றும் வசதியில்லா வீடு
உண்ண
என்றும் உருசியில்லா உணவு
பிழைக்க
ஒரு பிடிப்பில்லா தொழில்
எல்லாமாகியும்
ஏனோ உலகம் கசக்கவில்லை!

படிக்கும் பாடங்கள் மற்றும் தேவையான விடயங்கள் நினைவில் தங்குவதில்லை. அவற்றை நினைவில் இருத்துவதற்கு என்ன வழி சிந்தியா?

ஜே.ஹஸ்ஸாலி, புதியகாத்தான்குடி-06.

உங்கள் வீட்டில் ஓர் அறை தேவையற்ற சாமான்களால் நிரம்பிக் கிடக்கிறது. அதற்குள் உங்களுக்கு உபயோகமான பொருட்கள் சிலவற்றைப் போடுவதற்கு இடம் வேண்டு மென்றால் என்ன செய்வீர்கள்? வெளியில் இருந்து கொஞ்சம் இடம் கொண்டுவந்து போடவேண்டுமென்றா நினைப்பீர்கள்? உள்ளே இருக்கும் தேவையற்ற சாமான் களைத் தூக்கி எறிந்துவிடுங்கள். தேவையான பொருட்களைப் போட உள்ளே இடம் கிடைத்துவிடும்.

வெட்கம், மானம், சூடு, சுரணை, ரோஷம் என்பதெல்லாம் என்ன சிந்தியா?

எஸ்.பி.வதனி, பன்குடாவெளி.

ஐ.தே.க.வின் யாழ்ப்பாண எம்.பி.யோடு பேசிப் பார்த்துவிட்டீர்கள் போலிருக்கிறது. மனந்தளராதீர்கள். செங்கலடியில் பல ரோடும் பேசிப் பழகுங்கள். மனிதர்கள் பற்றி மீண்டும் நம்பிக்கை வந்துவிடும். ■

மன்னி மன்னன் 36

சோழ மன்னன் மகள் சரசவல்லி தன்னுடைய கள்ளக் காதலுக்காக தன் கணவனையே வெட்டிக் கொன்றாள். இந்த உண்மையை குணபத்திரன், அவனுடன் கூட்டிச் சென்ற மந்திரிக்கு கையும் மெய்யுமாகக் காட்டிக் கொடுத்தான்.

தன்னுடைய கணவனைத் தானே வெட்டிக் கொன்றதாக தன்னுடைய கள்ளக் காதலனிடம் கூறியதைக் கேட்ட அமைச்சர் கடும் கோபமுற்றார். சற்றுத் தொலைவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காவலர்களைக் கூவியழைத்தார். அவர்கள் மூலமாக, முட்டப்பட்டிருந்த முட இளைஞனின் கதவை உடைத்துத் திறந்தனர்.

அமைச்சரையும் அவருடன் வந்த குணபத்திரனையும் சற்றும் எதிர்பாராமல் அங்கு கண்ட சரசவல்லி செய்வதறியாது திகைப்புற்றாள். அமைச்சர் காவலர்களை ஏவி, இளவரசியையும் அவளுடைய காதலனையும் கட்டி நேராக அரண்மனைக்கு இழுத்துச் சென்றார். குணபத்திரனும் கூடவே சென்றான்.

அந்த நடுநிசி வேளையில் அந்தப்புரத்தில் உறங்கிக் கொண்டிருந்த மன்னனை எழுப்பி, அவருடைய மகள் செய்த கொலை பற்றி விரிவாக எடுத்துக் கூறினார்.

சோழ மன்னின் பட்டத்தரசி சரசவல்லியின் தாய் இக்கூற்றை நம்பவில்லை. தன் மகள் தன் கணவனை ஒருபோதும் கொன்றிருக்க மாட்டாள் என்று வாதாடினாள். நடந்த உண்மையைக் கூறுமாறு மகளிடம் கதறிக் கதறி கேட்டாள். ஆனால் அவளால் எதுவும் கூற முடியவில்லை.



மன்னர் முட இளைஞனைப் பார்த்து, "அமைச்சர் கூறியது உண்மைதானா? சரசவல்லியுடன் நீயும் சேர்ந்து அவளுடைய கணவனைக் கொல்வதற்கு திட்டமிட்டீர்களா?" என்று தனது உடைவாளை உருவியவண்ணம், மன்னன் கேட்டார்.

அந்த முட இளைஞன் அமைச்சர் கூறியபடி இளவரசியும் தானும் நீண்டகாலமாக நெருக்கமாக உறவாடி வருவதாகவும் அவளுடைய கணவன் வந்தால், தங்களுடைய காதலுக்கு இடையூறு என்பதனால், சன்மார்க்கனைக் கொல்வதற்கு தான்தான் சரசவல்லியை ஏவியதாகவும் கூறினான். அரசர் தன் மகளையும் அவளுடைய காதலனையும் பொழுது புலர்வதற்கு முன்னர் தூக்கிலிட்டுக் கொல்வதற்கு காவலர்களுக்குக் கட்டளையிட்டார்.

பிழையான விளக்கத்தினால், குணபத்திரனுக்கு தவறான தண்டனை வழங்கப்பட்டமைக்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்.

சோழ நாட்டில் சில காலம் தங்கியிருந்து விட்டுச் செல்லுமாறு குணபத்திரனை அரசர் கேட்டுக் கொண்டார். ஆனால் குணபத்திரன் தான், தனது நண்பன் சன்மார்க்கனுடைய உடலை பத்திரமாக வைத்திருப்பதாகவும், உடனடியாக சன்மார்க்கனுடைய சடலத்தை வைத்திருக்கும் பேழையை எடுத்துக் கொண்டு யாத்திரை சென்று எப்படியாவது தன் நண்பனுடைய உயிரை மீண்டும் பெறுவதற்கு அவன் செய்ய வேண்டுமென்று நிர்மானித்திருப்பதாகக் கூறிக் கொண்டு உடனே புறப்பட வேண்டும் என்று மன்னனிடம் கூறினான். அத்துடன் கலிங்க நாட்டு அமைச்சரின் மகளை தான் மணம் முடித்திருப்பதாகவும், அவளை உடனடியாகப் போய்ப் பார்க்க வேண்டும் என்று கூறிக் கொண்டு மன்னனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான்.

குணபத்திரன் தன்னுடைய நண்பனுடைய உயிரை மீண்டும் பெறுவதற்கு ஏதாவது வழி கிடைக்குமா என்பதையறிய பல தேசங்களுக்கும் சென்றான். ஆனால் எதுவித பலனும் கிடைக்கவில்லை.

காளிகாம்பாள் கொடுத்த வரம்

எனவே, தன் நண்பன் போனவழிமிலேயே தன்னுயிரையும் மாய்த்துவிட வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்தான். அவ்வாறு தன் வாழ்க்கையை முடிப்பதற்கு முன்னர், கலிங்கநாடு சென்று தனது மனைவியை ஒரு தரம் கண்டு கொள்ளலாம் என்று கலிங்கம் நோக்கிப் புறப்பட்டான்.

கலிங்க நாட்டு அமைச்சர் நீண்ட நாட்களுக்கு பின்னர் வந்திருந்த தன் மருமனுக்கு தகுதியான வரவேற்புக் கொடுத்து உபசரித்தார்.

குணபத்திரன் தங்குவதற்காக ஓர் அரண்மனையையும் ஏற்பாடு செய்து கொடுத்தான். உணவருந்திய பின் தன் மாளிகையில் போய்ப் படுத்துக் கொண்டான். ஆனால் தூங்குவது போல் காட்டிக் கொண்டானே தவிர, உண்மையில் தூங்கவில்லை. குணபத்திரனின் மனைவி அமிர்தவல்லி தின்பண்டங்களையும் பால், பழம் போன்றவற்றையும் எடுத்துக் கொண்டு கணவன் படுத்திருந்த அறைக்கு வந்து பார்த்தாள். தன் கணவன் பயணக் களைப்பினால் படுத்துத் தூங்குகிறார் என்று எண்ணியவளாக, கணவனின் பாதங்களைத் தொட்டு தன் கண்களில் ஒற்றி வணங்கி விட்டு அறையை விட்டு வெளியேறினாள்.

தூங்குவது போல் பாசாங்கு செய்த குணபத்திரன், தன் மனைவி எங்கே போகிறாள் என்பதைக் கண்டறிய அமிர்தவல்லிக்குத் தெரியாமல் அவளைப் பின் தொடர்ந்தான். தன்னுடைய நண்பன் சன்மார்க்கனுடைய மனைவி எவ்வாறு நடந்து கொண்டாளோ அவ்வாறே தன் மனைவியும் நடந்து கொள்கிறாளோ என்று கருதியவனாக மனைவியைப் பின்தொடர்ந்து சென்றான்.

அமிர்தவல்லி அந்தகருக்கு வெளியே இருந்த காளிகோயிலைச் சென்றடைந்தாள். சந்நிதானத்துக்கு முன்னின்று, "தாயே! என் கணவர் மீண்டும் என்னிடம் வந்து சேர்ந்தால் என் சிரசை வெட்டி உனக்குக் காணிக்கையாக்குவேன், என்று நேர்த்திக்கடன் வைத்திருந்தேன். இதோ இன்று என் கணவன் சுகமாகத் திரும்பிவந்து விட்டார். ஆகவே என் காணிக்கையைச் சமர்ப்பிக்கவே இதோ வந்திருக்கிறேன்!" என்று கூறியவாறு அங்கு ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்த ஒரு கூரிய வாளையெடுத்து தன்னுடைய சிரசை வெட்டுவதற்கு ஆயத்தமானாள். அப்பொழுது காளி பிரசன்னமாகி, அமிர்தவல்லியின் கையைப் பிடித்து, "குழந்தாய்! உன்னுடைய பக்தியையும் கற்பு நெறியையும் மெச்சினேன். நீ உன் சிரசைக் கொய்ய வேண்டாம். நீ உன்னுடைய கணவனுடன் சேர்ந்து நீடூழி காலம் இன்பமாக வாழ்வாய்!" என்று கூறி மறைந்தாள்.

அம்பாளின் அருள் பெற்ற அமிர்தவல்லி நேராகத் தன் கணவன் படுத்திருந்த மாளிகைக்குச் சென்றாள். இதற்கிடையில் தன் மனைவி காளிகோயில் சென்றதையும் அங்கு நடைபெற்ற சம்பவங்களையும் கண்டு கொண்ட கணவன் குணபத்திரன், தன் மனைவி வருவதற்கு முன்பாகவே மாளிகைக்குச் சென்று முன்பு படுத்திருந்தது போல் மஞ்சத்தில் படுத்துக் கொண்டான்.

அமிர்தவல்லி வந்து பார்க்கும் போது தன் கணவன் தொடர்ந்து நித்திரை செய்வதாகக் கருதிக் கொண்டு, அவனை எழுப்பாமல் மஞ்சத்தின் அருகிலேயே அமைதியாக நின்றிருந்தாள். சற்று நேரத்துக்கெல்லாம் தூக்கம் கலைந்து எழுவதைப் போல் குணபத்திரன் கண் விழித்தான். தனது மனைவி அமிர்தவல்லி அங்கு நிற்பதைக் கண்டு "அமிர்தா, நீ வெகு நேரமாக இங்கு நிற்கிறாயா? நான் தான் தூங்கி விட்டேன். தூக்கத்தில் ஒரு கனவுகண்டேன். கனவில் ஒரு இளம் பெண் என்னருகில் வந்து என் காலைத் தொட்டு கும்பிட்டாள். பிறகு அவள் வெளியேறி காளி கோயிலுக்குச் சென்றாள். அங்கு காளி தேவி பிரசன்னமாகி, அந்தப் பெண்ணிடம் ஏதோ உரையாடினாள். இதனால் நான் பயந்து தூக்கம் கலைந்து எழுந்துவிட்டேன்!" என்று கூறினான்.

குணபத்திரன் கூறிய கதையைக் கேட்ட அமிர்தவல்லி தானும் காளி கோயிலுக்குச் சென்று காளியின் வரம் பெற்று வந்திருப்பதாகவும் சொன்னாள்.

தன் மனைவியின் கதையைக் கேட்டு அதிசயப்பட்டவன் போல் குணபத்திரன், "என்ன காளி உனக்கு வரம் கொடுத்தாளா?" என்று கேட்டான். "ஆமாம்!" என்று கூறிய அமிர்தவல்லி தான் ஆலயம் சென்ற கதையையும் காளி வரம் கொடுத்த கதையையும் கணவனிடம் கூறினாள்.

குணபத்திரன் தன் மனைவியிடம் "அமிர்தவல்லி இங்கு நான் ஏன் வந்திருக்கிறேன் தெரியுமா? என்னுடைய உற்ற நண்பன் கொலைசெய்யப்பட்டு இறந்து விட்டான். அவனுடைய உயிரை மீண்டும் பெறாவிட்டால் நான் உயிருடன் வாழ மாட்டேன். ஆகவே நான் விரைவில் என்னுயிரை மாய்த்துக் கொள்ளப்போகிறேன். ஆகவே உனக்கு காளிகாம்பாள் கொடுத்த நீடூழிவாழும் பலன் கிடைக்கப் போவதில்லை!" என்று கூறினான்.

அமிர்தவல்லி தன் கணவனைத் தேற்றி,

நாஞ்சுமாயன்

"நாதா, காளிகாம்பாள் கருணைமிக்கவள். பக்தி சிரத்தையோடு அவளை வேண்டினால், நிச்சயம் அவளருள் கிட்டும். நான் இப் பொழுதே போய் உங்கள் நண்பர் உயிர் பெற்று எழுவதற்கு என் அன்னையிடம் யாசிக்கப் போகிறேன்!" என்று கூறிவிட்டு எழுந்து காளிகோயில் நோக்கி விரைந்து சென்றாள்.

கோயிலின் சந்நிதியில் நின்றவாறு, "அன்னையே! என் கணவருடன் நானும் நீடூழி வாழ்வேன் என்று வரமருளினாயே! ஆனால் என் கணவரோ அவருடைய நண்பர் உயிர் பெற்றெழ விட்டால் தனதுயிரை மாய்த்துவிட எண்ணியுள்ளார். தாயே! நீ தந்த வரத்தின்படி நாங்களிருவரும் நீடூழி வாழ்வதானால் என் கணவர் உயிரோடு இருக்க வேண்டுமே!" என்று மனமுருக வேண்டினாள்,

(மன்னன் வருவான்..)

காதில பூ சுற்றுதல்

நல்லது

திரும்பச் சந்திப்பதில் மகிழ்ச்சி போன தடவை விடைபெற்ற போது அடுத்த தடவை சந்திக்கும் வரை சிந்திக்காது இருக்கும் படி உங்களை கனிவாகக் கேட்டுக் கொண்டதைத் தவறாக கடைப்பிடித்திருப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். அப்படியானால், சிந்திக்காதபடி ஒரு கிழமை காலம் கடத்துறதுக்குப் பழகிட்டியள். என்னும் கொஞ்ச நாளில இந்த வருஷமும் முடியப் போகுது. அதுக்குப் பிறகு அடுத்த வருஷமும் முடியும். இப்படியே கிழமைக்கணக்கில், மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் சிந்திக்காமல் இருக்கப் பழகிவிட்டீங்களென்றால், பிறகு உங்களை யாராலும் அசைக்க ஏலாது. சரி, செய்திகளுக்கு வருவோம். அதற்கு முன் எனது தெய்வ வாக்கியத்தை ஞாபகப் படுத்தி விடுகிறேன்.

நான் சொல்வதெல்லாம் பொய். பொய்யைத் தவிர வேறொன்று மில்லை!

சென்ற முறை தெரிவித்த செய்தி ஒன்றுக்கு யு.பி.மகேஸ்வரனிடமிருந்து மறுப்பு வந்திருக்கிறது. தனது சொத்தெல்லாவற்றையும் ஏழைகளுக்குப் பகிர்ந்தளிக்கப் போவதாகவும் அதற்காகத் தன்னை அடுத்த தேர்தலில் நிறுத்தும்படி இருதரப்பாரையும் கேட்டுக் கொண்டதாகவும் நான் தெரிவித்த செய்தி பொய்யெனவும் (அவர் எனது சத்திய வாக்கியத்தை படிக்கவில்லை போலும்) அதனால் அதைத் திருத்தி தான் சொன்னதற்கு, உண்மையில் அடுத்த தேர்தலில் ஏழை மக்களுக்கு தனது சொத்தைப் பகிர்ந்தளித்து விட்டு பாராளுமன்றம் செல்லப் போவதாகத் அர்த்தமில்லையென்றும், ஏழை மக்களுக்கு பகிர்ந்தளிக்கச் சொத்துச் சேர்ப்பதற்காகத் தன்னைப் பாராளுமன்றம் அனுப்பும்படிதான் கூறியிருந்தாரென்றும் அதற்காகவே தான் இப்போதும் பாராளுமன்றத்துக்கு மட்டும் மாட்டுவண்டியில் சென்று, அங்கே பல லட்சக்கணக்கான ரூபா பெறுமதியுள்ள லான் குரூஸர் ஜீப் வண்டிக்கு விண்ணப்பித்துவிட்டு திரும்பி வந்து அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் காரில் கால் கடுக்க ஓடித் திரிவதாகவும் தெரிவித்திருந்தார்.

எனவே அவரின் கூற்றுக்கு மதிப்பளித்து கடந்த தடவை நான் கூறியதை உங்கள் மெமறியிலிருந்து நீக்கிவிட்டு இப்போது கூறியதை அவ்விடத்தில் நிரப்பிக்கொண்டு அதை நம்பும்படி கேட்டுக் கொள்கிறேன்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கு கூட்டணி நிபந்தனை எதையும் விதிக்கவில்லையென்றும் தான் விதிப்பதை நிபந்தனையாக எவரும் எடுத்துக்கொண்டால் தண்டனைக்குள்ளாவார்களென்றும் கூறி பேச்சுவார்த்தைக்கு முன்னர் இலஞ்சம், கப்பம், வரி வாங்குவதற்கான தடைகள் யாவற்றையும் புலிகள் நீக்கி, கள்ளக் கடத்தலுக்கும் அனுமதி வழங்கினால்தான் மனந்திறந்து பேசக்கூடிய நல்ல சூழ்நிலை உருவாகும் என்று சுட்டிக்காட்டியுள்ளது. அத்தோடு யுத்த நிறுத்தத்தை ஒரு பிரதானமாக வற்புறுத்தியுள்ள கூட்டணி, தாம் ஆயுதங்களை கைவிடுவதென்ற பேச்சுக்கே இடமில்லையென்பதை மீண்டும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சியில் கூட்டணிக் கொரில்லாப்படைத் தளபதி அழுக்கு சங்கரி மீன் முன்னாள் மறைவிடமான ஒரு ஆசிரியை மீன் வீட்டைச் சோதனையிட்ட விடுதலைப் புலிகள் அங்கு ஒரு பழைய பெனியனுடன் பாக்குவெட்டி, பேனாக்கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளனர். தீர விசாரித்ததில் தாம் ஆட்சியைக் கைப்பற்றியபின் அவ் ஆசிரியைக்கு மாற்றல் எடுத்துத்தர யாழ்தேவி ரெயிலில் உறங்கலிருக்கை ஒழுங்குசெய்து அழைத்துச்செல்வதாக அழுக்கு சங்கரி கொடுத்த ஆசை வார்த்தையை நம்பியே அவரது ஆயுதங்களைப் பதுக்கிவைக்க அவ் ஆசிரியை இடமளித்ததாகத் தெரியவந்துள்ளது.

இதேவளை அண்டைநாட்டுத் தலைவி சந்திரலேகா பண்டாரவன்னியா கூட்டணிக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகிக்க விருப்பம் தெரிவித்ததையடுத்து இந்தியா விடுத்துள்ள அவசர வேண்டுகோளில் தமது நாட்டுக்கு கோவேறு கழுதையொன்றைக் கொலை செய்துவிட்டு ஒடி ஒளிந்துவிட்ட கூட்டணித் தலைவர் சம்பந்தமிடுக்கரை உடனடியாகப் பிடித்துத் தரும்படிகோரி தமிழீழத் தலைவரிடம் தூதுக்குழு அனுப்பியுள்ளது. இது பேச்சுவார்த்தையைக் குழப்பும் உள்நோக்கத்துடனான சதியென்று செய்தி வெளியிட்டதற்காக கிழமை முரசென்ற மாதப் பத்திரிகை தடைசெய்யப்பட்டுள்ளது. இச் செய்தி குறித்து பிரதமரிடம் கேட்டபோது, பேச்சுவார்த்தைக்கென வரு பவர்களைப் பிடித்து மற்றொரு நாட்டிடம் ஒப்படைக்கும் துரோகத்தனம் எமக்கு கிடையாது எனவும் நாம் அவர் பேச்சுவார்த்தைக்கு வந்தால் அவரை கௌரமாக பிடித்து அவரை பங்கருக்குள் அடைத்துப் பத்திரமாக பாதுகாப்போமெனவும் தெரிவித்தார்.

வர்த்தகச் செய்தி ஒன்று: நாடு பூராகவும் ஒடியோடி விநியோகிக்கக்கூடிய எமிட்ஸ் விநியோகஸ்தர்கள் வேண்டப்படுகின்றனர். தகமை, மேற்கு நாடொன்றில் பத்துவருடம் பயின்றவர்களாக இருக்க வேண்டும்.

அந்திய நாட்டுச் செய்தி: அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் முறையில் மாற்றம் செய்து ஜனநாயகம் மேலும் மேம்பட குழு சமைக்கப்பட்டுள்ளது. தேர்தலில் ஜனநாயக குடிமகன் ஒருவருக்கு ஒரு நல்ல வாக்கும் இரு கள்ள வாக்கும் இருக்கலாமென்றும், குடும்பத்தில் கடந்த ஆட்சிக் காலத்துக்குள் இறந்தவர்கள் யாரு மிருந்தால் அவர்களது செத்த வாக்கு செல்லுப் படியாகுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வாஷிங்டன் மயானக்காவலர் பெரு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

தலைப்பும் மலைப்பும்

பிரபாகரனைப் பிடித்துத் தரும்படி இலங்கை அரசை இந்தியா வற்புறுத்தல்.

-செய்தி

"சீ... சீ... இந்தப்பழம் புளிக்கும்" என்று சொல்வதற்கு இன்னும் காலம் கனியவில்லைப் போலும்!

விடுதலைப் புலிகளுக்கான நவீன ஆயுதங்களுடன் கிழக்குக் கடலில் கப்பல் ஒன்று விரைகிறது.

-புலனாய்வுத்துறை எச்சரிக்கை

கிழக்கில்தான் அடிக்கடி சூறாவளி உருவாகிக் கொண்டிருக்கிறது.

நோர்வேயின் தலையீடு ஒரு ஏமாற்று வித்தை.

-அமரவன்ச தேரர்.

இதுகாலவரை தமிழர்கள் ஏமாற்றப்பட்ட வித்தைகள் அம்பலமாவதைத் தடுத்து நிறுத்த முன் எச்சரிக்கை.

"சட்டவிரோதக் கட்டடங்களை மீண்டும் உடைப்பேன்!"

-அமைச்சர் மங்கள சமரவீர.

"உடைக்க உடைக்க புதிது புதிதாகக் கட்டிடங்கள் மீண்டும் மீண்டும் முளைத்துக் கொண்டிருக்கும்" என்று யாரோ சவால் விட்டுள்ளனர்போல் தெரிகிறதாம்.

காணாமல் போனோருக்கு நஷ்ட ஈடு வழங்கல்.

-செய்தி

நட்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளவாவது தலை காட்டுகிறார்களோ என்று பரிசோதிக்கத்தான்!

மிருகக் காட்சிச்சாலைக்கு அருகில் புலிகளின் நடமாட்டம்; ஒருவர் கைது.

-செய்தி

கைதானவரின் கால்களைக் கணக்கிட்டபின்னர் தான் உண்மை தெரியும்!

யாவும் கலப்படமற்ற கற்பனை

Regd. as a News Paper at the G.P.O.(QD/63/NEWS/2000)

பெண்களின் அழகோ இரகசியம்! அதை
எடுத்தது வண்ண நகைகள்தான்றிப்பேசுகின்றன.
இவர:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்-06 582230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lyk.com/arul
4360371

SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னும் பொன்னகை பொழுது
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
3236357

படப்பெட்டி

↑ ஃபாஷன் என்ற பெயர் மேல்நாடுகளில் மோகப் பிடித்துக் கொண்டு விட்டது. தொப்புள், நாக்கு, புருவம், வாய், காது, என்று உடலெங்கும் குத்தி நகைகள் அணிவது ஃபாஷன் ஆகிவருகிறது.

பிரபல பாடக, பாடகியர் இதில் முதலிடம் வகிக்கிறார்கள். இத்தப் பிரபலங்களின் ரசிகர்கள் தனது அபிமான நட்சத்திரங்கள் உடலெங்கும் துளைவிட்டு அணிகலங்கள் அணிவதுபோல் தாமும் இவற்றைப் பின் பற்றி வருகிறார்கள்.

இப்படி மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக செய்வது பின்னாளில் கவலைக்குரியதொன்றாகி விடும். இப்படி ஃபாஷன் என்ற பெயரில் உடலில் துளையிட்ட லெஸ்லி ஹெவல்ஸ் என்ற இங்கிலாந்தின் நவநாகரிக நங்கை இரத்தத்தில் பக்டீரியா தொற்று ஏற்பட்டு செப்டி சீமியா' என்ற நோயால் இறந்துள்ளாள்.

↑ இயற்கையின் படைப்பில் தான் எத்தனை வித்தைகள்? கம்பளி, இறைச்சி போன்றவற்றிற்காக வளர்க்கப்படும் செம்மறி ஆடொன்றுதான் இது. சின்னஞ்சிறிய உருவத்தில் இருக்கும் இந்த ஆட்டின் கொம்புகள் இரண்டும், அதன் உடல் அளவுக்கு வளர்ந்திருப்பதுதான் அதிசயம்.

(பட உதவியாளர்)

← சிலவஞ்சிறு பிஞ்சுகளின் மகிழ்ச்சிக்கு மட்டு மன்றி, அவர்களில் அறிவுத்திறனை வளர்ப் பதற்கும் காரணமாகத் திகழ்பவை பொம்மைகள்.

குழந்தைகளின் தனிமையைத் தவிர்த்து, மகிழ்ச்சியை வழங்கும் பொம்மைகள் ஒன்றும் இன்று நேற்று உதயமானவை அல்ல. இவை சுமார் 5 ஆயிரம் வருடங்களுக்கு முன்பே இருந்திருக்கின்றன.

கையில் பொம்மை ஒன்று குழந்தைக்குக் கிடைத்து விட்டால், அதற்குத்தான் எவ்வளவு ஆனந்தம்! படத்தில் பொம்மையுடன் குதூகலிக்கும் இந்த பொம்மைக்குட்டியைப் பார்த்தாலே விளங்குகிறதல்லவா?

பொம்மு குட்டி ஓட்டம்

சாதனைச் சகோதரர்கள்

↑ தற்போதைய உலகச் சாம்பியனான அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியை 'டெஸ்ட் போட்டிகளின் சாம்பியன்' என்றும் அழைக்கலாம்.

தொடர்ந்து 12 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்று உலக டெஸ்ட் கிரிக்கெட் சரித்திரத்தில் தனது பெயரை பொன் எழுத்துக்களால் பொறித்திருக்கிறது அவுஸ்திரேலியா.

இதற்கு முன் முன்னாள் கிரிக்கெட் சாம்பவானான மேற்கிந்தியத் தீவுகள் அணி 11 டெஸ்ட் போட்டிகளில் வென்று சாதனை படைத்திருந்தது. முன்னாள் கெப்டன் கிளைவ் லொய்ட் தலைமையில் இந்தச் சாதனையை படைத்திருந்தது மேற்கிந்தியத்தீவுகள் அணி.

மேற்கிந்தீவுகளின் இந்தச் சாதனை அவர்களை எதிர்த்தாடி வென்ற தன் மூலம் புதிய சாதனையைத் தனதாக்கிக் கொண்டது அவுஸ்திரேலியா. இதன் தொடர்ச்சியான டெஸ்ட் வெற்றிச் சாதனைக்கு அணியை வழிநடத்தி வரும் ஸ்டீவ் வோ தான் முக்கியமானவர். சிறந்த சகலதுறை ஆட்டக்காரரான ஸ்டீவ் வோ உலகின் தலைசிறந்த அணித்தலைவராகவும் திகழ்கிறார்.

அவுஸ்திரேலிய அணி தனது 12 வது டெஸ்டையும் வென்று சாதனை படைக்க 'தம்பியுடையான் படைக்கஞ்சான்' என்பது போல் ஸ்டீவ் வோவின் சகோதரர் மார்க் வோ சதமடித்து வெற்றிக்கு வழி சமைத்தார்.

வழுக்கல்

↑ இயற்கை அதர்த்தங்கள் சற்றும் எதிர் பாராத பேரழிவுகளை ஏற்படுத்திவிடுகின்றன. பனி படர்ந்த பிரதேசங்களில் காலநிலை மாற்றத் தினால் பயங்கரப் பனிப்புயல் உருவாகிவிடும். இதன் பயனாக மலை போன்று வளர்ந்திருக்கும் பிரமாண்டமான பனிக்கட்டிகளும் பனிப்புயலின் வேகத்தினால் பெயர்த்து எறியப்படுவதுண்டு. சாதாரணமாக இமய மலைச்சிகரத்தில் மணிக்கு 80 கி.மீ 150 மைல் வேகத்தில் தான் பனிப்புயல் வீசுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கடும் பனிக் காலங்களிலும் இளவேனிற் காலங்களிலும் தான் பனிப் புயல் ஏற்படுகின்றது. இத்தாலியின் அல்ப்ஸ் மலைச் சிகரங்களில் உருவான பனிப் புயலின் போது உருட்டி வீசப்பட்ட பனிக்கட்டி ஒன்று உருண்டு ஓடி வருவதைப் படத்தில் காணலாம்.

← இறந்த பின்னும் கோடி கோடியாக வழங்கிக் கொண்டிருக்கிறார் மறைந்த இளவரசி டயானா.

இலண்டன் நகரில் டயானா பெயரில் என்ன நடத்தினாலும் கோடியாகக் கொட்டுகிறது பணம். இப்போது டயானா அறக்கட்டளை சூப்பர் வருவில் இறங்கியிருக்கிறது.

டயானா பயன்படுத்திய பொருட்களை வைத்து கண்காட்சி நடத்திப் பணம் வசூலித்து வருகிறது. இந்தக் கண்காட்சியைப் பார்க்க வெளி நாடுகளில் இருந்தும் பலர் இங்கிலாந்துக்கு படை யெடுக்கிறார்கள்.

2வது பிறந்த நாள் வாழ்த்து

செல்வி துஷ்மிகா மகேந்திரன்

15.12.2000

மண்டூர் தம்பலவத்தையில் வசிக்கும் மகேந்திரன்-அன்னபூரணம் தம்பதிகளின் செல்வப் புதல்வி துஷ்மிகா தனது இரண்டாவது பிறந்தநாளை 15.12.2000 வெள்ளிக் கிழமை அன்று தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, மாமாமார்களான ரவி, ஜயா, ராதா, ரஞ்சன், சுதா, சசி, மாமிமார்கள், மச்சான்மார்கள், மச்சான்மார்கள், மற்றும் குருமண்வெளியில் வசிக்கும் அப்பம்மா, மாமிமார்களான மேகலா, உமாதேவி, நந்தினி, வினோதினி, சசி மதி, செல்வத்தி, சித்தப்பாமார், மச்சான்மார், மச்சான்மார்கள், கல்முனையில் வசிக்கும் ஆசை அப்பா, ஆசை அம்மா, அண்ணாமார்களான, கண்ணன், ரோகிதன், வினோ, அக்காமார்கள், மதி, வாணி, சிவா அத்தான், கல்முனையில் வசிக்கும் சிவகாமி சித்தி, மற்றும் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் துஷாக்குட்டியை மண்டூர் முருகன் அருள் பெற்று, பல்கலைகளும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: எம்.மகேந்திரன் (தந்தை)

இப்பத்திரிகை கொழும்பு வெள்ளவத்தை நெல்சன் பிரிண்ட் (பிறைவேட்) லிமிடெட் என்னுமச்சகத்தில் 19, 21, கால் வீதியிலிருந்து அச்சிடப்பட்டு 39 இலக்க தபாலிலிருந்து வெளியிடப்பட்டது.